விலை: 30.00
பக்கங்கள் : இருபத்துநான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 30 திங்கட்கிழமை (14.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 026

## படகு கவிழ்ந்து விபத்து; தமிழக மீனவர் உயிரிழப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கடற்பரப்புக்கு அருகே படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளான தில் தமிழக மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தமிழ் நாட்டில் இருந்து வந்து நெடுந்தீவு கடற்பரப்புக்கு அருகில் இரு படகுகளில் வந்த 8 மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களின் ஒரு படகு திடீரென கவிழ்ந்து நீரில் மூழ்கியதில் இவர்கள் அருகில் இருந்த மற்றைய படகில் மூன்று மீனவர்கள் ஏறியுள்ளனர். ஆனால் ஒருவர் கடலில் காணாமல் போயிருந்தார். 23☛

## அரசியல் நோக்கிலான பௌத்த மயமாக்கல் தமிழர் பகுதிகளில் நிறுத்தப்பட வேண்டும்

### வடக்கு ஆளுநரின் நிலைப்பாடு



(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பகுதிகளில் அரசியல் நோக்கத்துடன் முன்னெடுக்கப்படும் பௌத்தமயமாக்கல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்று வடக்கு மாகாணத்தின் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விரைவில் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து இந்த 24☛

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் மாகாணசபைத் தேர்தல்

## ஜனாதிபதி மைத்திரியின் திட்டம்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தல் பற்றி பல்வேறு கருத்துக்களை உருவாக்கி நடைபெற வேண்டியுள்ள மாகாண சபை தேர்தலை பிற்போடுவதற்கு சிலர் நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## 20 இந்திய மீனவர் கடற்படையினரால் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 20 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இராமேஸ்வரத்தில் இருந்து ஒரு படகில் 11 மீனவர் 23☛

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

(கொழும்பு)

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் திருநாளை முன்னிட்டு இன்று நாடு முழுவதும் உள்ள தமிழ் மொழி மூலப்பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (மு-3)

## நல்லாட்சி என்றோர் ஜனநாயகத்தை இல்லாது செய்துள்ளனர் – நாமல் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

நல்லாட்சியை நிலைநாட்டுவோம் என்று வந்தவர்கள், நாட்டில் ஜனநாயகத்தையே இல்லாது செய்துள்ளார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் 23☛

## பட்ஜெட்டின் போது கூட்டமைப்பு நிபந்தனை விதிக்க வேண்டும்

### சுரேஸ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து



(கிளிநொச்சி)

எதிர்வரும் வரவு செலவு திட்ட யோசனையின் போது கூட்டமைப்பு நிபந்தனைகளுடன் கூடிய ஆதரவை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும் என ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. 23☛

## 2005 முதல் 2015 வரை நாட்டில் நடந்தவைகளை மறக்க முடியுமா?

### மைத்திரிக்கு சந்திரிகா கடிதம்



(கொழும்பு)

2005-2015 வன்முறைகளை நான் மறக்கவும் இல்லை, உங்கள் கூட்டை ஏற்கவும் இல்லை அத்துடன் 2015 ஜனவரி 8 கொள்கைகளுக்கு துரோகம் இழைக்கக் கூடாது என ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு முன்னாள் 23☛

## ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய மொட்டில் களமிறங்க முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக தான் களமிறங்க தயாராக உள்ளதாக கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே



அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மிகப் பெரும் வெற்றியைப் பெற்று புதிய ஜனாதிபதி இந்த வருட இறுதியில் பதவியேற்பார் என்று முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

டிசெம்பரில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதி தேர்தலில், ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கும் ஐக்கிய தேசிய முன்னணி சார்பான வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிடும் பொதுவேட்பாளர் யார் என்பது தொடர்பில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்புக்கும் மகிந்த ராஜபக்ஷ தரப்புக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில், மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்ற மைத்திரி 24☛

## கொழும்பில் துப்பாக்கிச் சூடு; இரு இளைஞர்கள் பலி

(கொழும்பு)

கொழும்பு - வத்தளை - ஹேக்கித்த பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். கொட்டாஞ் சேனை - ஜெம்பட்டா வீதியைச் சேர்ந்த 33 மற்றும் 28 வயதுடைய இரு தமிழ் இளைஞர்களே இச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்கள்.

காரொன்றில் வத்தளையிலிருந்து நீர்கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த மூவர் மீது மற்றொரு காரில் வந்த இருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்தியதால், 24☛

## மதுபோதையில் பெனாயிலை குடித்த பொலிஸார் பரிதாபமாக உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மது போதையில் பெனாயில் குடித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் ரத்னாயக்க (வயது 45) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் இரவு யாழ்.நகரப் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் 24☛

# வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த வாகனம் குழுவொன்றினால் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பகுதியில் வீட்டின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த வானை, அடையாளம் தெரியாத குழுவொன்று சேதப்படுத்தியுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், மானிப்பாய் சங்கரப்பிள்ளை கோவிலடிப்பகுதியில் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) இரவு இடம்பெற்றுள்ளது.

இலக்கத் தகடுகளை மறைத்து மூன்று மோட்டார் சைக்கிளில், முகத்தை மூடி மறைத்துக்கொண்டு வந்த ஆறு பேர் அடங்கிய குழுவினரே, இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வாகன உரிமையாளர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (மு-3)

# சமையல் எரிவாயு, பால்மாவின் விலையை அதிகரிக்கக் கோரிக்கை

சமையல் எரிவாயு மற்றும் பால்மாவின் விலைகளை அதிகரிக்குமாறு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையை விலைக்கட்டுப்பாட்டு குழுவிடம் ஒப்படைப்பதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபை தீர்மானித்துள்ளது.

எரிவாயுவின் விலையை அதிகரிக்குமாறு எரிவாயு நிறுவனங்களின் கோரிக்கை தமக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக நுகர்வோர விவகார அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் 12.5 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவின் விலையை 300 ரூபாய் முதல் 400 ரூபாயுக்கு இடையில் அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பல்வேறு பால்மா உற்பத்தி நிறுவனங்களும் பால்மாவின் விலையை அதிகரிக்குமாறு கோரியுள்ளதாகவும் நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனடிப்படையில் ஒரு கிலோ கிராம் பால்மாவின் விலையை 150 ரூபாய் முதல் 175 ரூபாயுக்கு இடையில் அதிகரிக்குமாறு கோரிக்கை கிடைக்கப்பெற்றுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (மு-3)

# அறிக்கையில் எழுத்துப் பிழைகள்

அரசியலமைப்பு சபையில் முன்வைக்கப்பட்ட அறிக்கையில் சில வசனங்கள் பிழை என்றும் அவற்றை திருத்துவதற்கான மொழி பெயர்ப்பு செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஊடகவியலாளரின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், புதிய அரசியலமைப்பு தொடர்பில் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று குறிப்பிட்டார். (மு-3)


வட மாகாண புதிய ஆளுநரை

வரவேற்கின்றோம்



வட மாகாணத்தின் புதிய ஆளுநராகப் பதவியேற்றுள்ள

அதிமேதகு கலாநிதி சுரேன் இராகவன்

அவர்களை வரவேற்கின்றோம். அவரது சிறப்பான பணிமூலம் வட மாகாண மக்களின் வாழ்வியல் மேம்பாடடைய அவர்களை மனதார வாழ்த்துவதுடன் அவர் தம் பணி சிறக்க இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தலைமையகம்
யாழ்ப்பாணம். (7145)

வாழ்த்துவோர்:
அகில இலங்கை நம்பிகள் நல்வாழ்வுக் கழகம்



சேவைநலன்

பாராட்டு



உயர்திரு.

முத்துராசா நிற்குணானந்தன்

(அலுவலகப் பணியாளர் - அதிவிசேட தரம்)

எமது பிரதேச செயலகத்தில் 16 வருடங்கள் அலுவலகப் பணியாளராகப் பணியாற்றியும் மாவட்டச் செயலகம், பருத்தித்துறை பிரதேச செயலகம் என்பனவற்றில் பணியாற்றியும் 33 வருட அரச சேவையைப் பூர்த்தி செய்து 15.01.2019ஆம் திகதியுடன் ஓய்வுபெறும் மு.நிற்குணானந்தன் அவர்கள் வாழ்வில் சகல செளபாக்கியமும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

கரவெட்டி பிரதேச செயலரும்
சமூக சேவை மற்றும்
சிறுவர் பெண்கள் பிரிவினரும் (C-5150)



பாராட்டி

வாழ்த்துகின்றோம்



2016/2017 தேசிய உற்பத்தி திறன் போட்டியில் தேசிய ரீதியில் **03ஆம்** இடத்தைப் பெற்று கிளிநொச்சி மாவட்டத்துக்கும் பூநகரிக்கும் பெருமை தேடித் தந்த பூநகரி பிரதேச செயலகத்தையும் பிரதேச செயலாளர் திரு.**சி.ச.கிருஸ்னேந்திரனை**யும் அவரோடு இணைந்து சேவையாற்றும் உத்தியோகத்தர்களையும் மனநிறைவோடு பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.

- பூநகரி கமநல சேவை நிலைய கமக்கார அமைப்புக்கள்
- மகளிர் கமக்கார அமைப்புக்கள்
- மற்றும் பிரதேச விவசாயிகள்,

பூநகரி.

(C-5148)



பாராட்டி

வாழ்த்துகின்றோம்



2016/2017 தேசிய உற்பத்தி திறன் போட்டியில் தேசிய ரீதியில் **03ஆம்** இடத்தைப் பெற்று கிளிநொச்சி மாவட்டத்துக்கும் பூநகரிக்கும் பெருமை தேடித் தந்த பூநகரி பிரதேச செயலர் **சி.ச.கிருஸ்னேந்திரனை**யும் அவரோடு இணைந்து சேவையாற்றும் உத்தியோகத்தர்களையும் மனநிறைவோடு பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.


தலைவர், பணிப்பாளர், சபை உறுப்பினர்கள்
பணியாளர்கள், கூட்டுறவாளர்கள்
பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பூநகரி. (C-5147)


# போர்க்குற்றச்சாட்டுக்குள்ளான சவேந்திர சில்வாவிற்கெதிராக நாடாளுமன்றில் போர்க்கொடி

## சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தின் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமைக்கு, நாடாளுமன்றில் கேள்வியெழுப்பவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.





கொழும்பு ஆங்கில வார இதழொன்றிற்கு கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

சவேந்திர சில்வாவிற்கு எதிராக போர்க்குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு முக்கிய பதவியை அரசாங்கம் வழங்கியுள்ளது. இந் நிலையில், கூட்டமைப்பு இதுகுறித்து கரிசனை கொண்டுள்ளதாக சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா செயற்பட்டார். யுத்தக்குற்றச்சாட்டுகளுக்குள்ளாகியுள்ள இராணுவத்தின் முக்கிய அதிகாரிகளுள் சவேந்திர சில்வா முக்கியமானவர். இவ்வாறான பின்னணியில் கடந்த செவ்வாய்க்கிழமை, இலங்கை இராணுவத்தின் 53 ஆவது தலைமையதிகாரியாக சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டார்.

இந்த நியமனம் தொடர்பாக பல்வேறு மனித உரிமைசார் அமைப்புக்களும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

குறிப்பாக ஐ.நா. மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30 மற்றும் 34/1 தீர்மானங்களை நிறைவேற்றுவதில் இலங்கை குறைந்தளவான முயற்சிகளையே கொண்டுள்ளது என்ற செய்தியை, இந்த நியமனம் சர்வதேசத்திற்கு வழங்குவதாக உலக தமிழர் பேரவை குறிப்பிட்டிருந்தது.

அத்தோடு பாரிய மனித உரிமை மீறலுடன் தொடர்புடையவர்களுக்கு அரசாங்கம் பதவிகளை வழங்குவதானது, பொறுப்புக்கூறல் விடயம் தொடர்பான எதிர்மறை சமிக்ஞையை வெளிப்படுத்துகின்றதென மனித உரிமை செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, காணாமல் போனோர் அலுவலகத்தின் இடைக்கால அறிக்கையில், கடத்தல், காணாமல் ஆக்கப்பட்டமை உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபட்ட படையினர் இடைநீக்கம் செய்யப்பட்டதாகவும் பதவி உயர்வு வழங்கப்படவில்லையென்றும் வேறு எந்த சலுகைகளும் வழங்கப்படவில்லையென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு காணப்படும் போது, யுத்தக்குற்றச்சாட்டிற்குள்ளாகியுள்ள ஒருவருக்கு உயரிய பதவி வழங்கப்பட்டுள்ளமை, அந்த அறிக்கையின் உண்மைத்தன்மையை மீறுவதாக அமைந்துள்ளதென ருக்கி பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# தைப்பொங்கலை முன்னிட்டு அனைத்து தமிழ்மொழிமூல பாடசாலைகளுக்கும் விடுமுறை

## கல்வியமைச்சர் காரியவசம் அறிவிப்பு

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு இன்று இலங்கையிலுள்ள அனைத்துதமிழ்மொழி மூலப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படுவதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் அறிவித்துள்ளார். ஏற்கனவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தைப்பொங்கலை முன்னிட்டு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில்நாட்டின் ஏனைய பாகங்களிலுள்ள தமிழ் பாடசாலைகளுக்கும் இந்த விடுமுறைவழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தேர்தலை ஜனாதிபதியிடம் கோருவதே பொருத்தம்

## அஸ்கிரிய பீடத்திற்கு ஐ.தே.க.பதில்

(கொழும்பு)

நாட்டில் கடந்த காலத்தில் ஏற்பட்ட பல்வேறு பதற்றமான அரசியல் நிகழ்வுகளுக்குப் பொறுப்பான ஜனாதிபதியிடம் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்துமாறு கோருவதே அஸ்கிரிய பீட போஷகருக்குப் பொருத்தமானது எனப் பிரதி அமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

எமக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன போட்டியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளார். இதனால், இந்த வேண்டுகோளை அவரிடம் விடுப்பதே பொருத்தமானது.

ஜனவரி 8 ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதற்கான வாய்ப்பு ஜனாதிபதிக்குள்ளது எனவும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அரசியலமைப்பு மாற்றத்தை விட்டுவிட்டு அரசாங்கம் தேர்தல் ஒன்றுக்கு செல்வதே பொருத்தமானது என அஸ்கிரியபீட போஷகர் ஆனமடுவே தம்மதஸ்ஸி தேரர் தன்னிடம் தெரிவித்ததாக பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

இது குறித்து வினவிய போதே பிரதி அமைச்சர் நளின் பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# வட-கிழக்கு மாகாணங்களில் முதற்கட்டமாக 4,750 வீடுகள் தைப்பொங்கலுடன் ஆரம்பம்

## அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தகவல்

(கொழும்பு)



தேசியகொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்த மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் முன்னெடுப்பில் முதல் காலாண்டில் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஜன வரி தொடக்கம் ஏப்ரல் மாதம் வரையான நான்கு மாதகால வாக்கு பணகணக்கு ஒதுக்கீட்டின் கீழ் (Vote on Account) 4,750 வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதி மாவட்டசெயலகங்களுக்கு ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் தைப்பொங்கலுடன் ஆரம்பிக்கப்படுகின்றன. இவ்வீடுகள் பாரம்பரிய முறையிலான கல்வீடுகளாக அமைவதுடன் யுத்தத்தால் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கும் தாயகம் திரும்பும் அகதிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும் என தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இவ் வீடுகளுக்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான முன்னுரிமைப்படுத்தல் பிரமாணங்களில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகளை கொண்ட குடும்பங்கள், காணமால் போனவர்களை கொண்ட குடும்பங்கள், சமூகமயமாக்கப்பட் முன்னாள் போராளிகள் குடும்பங்கள், வருமானம் குறைந்தகுடிசைகளில் வாழும் குடும்பங்கள், கண்ணிவெடியால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், வயோதிபர்கள், இளம் சிறார்களைக் கொண்ட குடும்பங்கள் என்பவை முன்னுரிமைப்படுத்தப்படும். இவ்வீடுகள் 550 சதுரஅடிபரப்பளவில் பயனாளிகளால் கட்டப்படுகின்ற வீடுகளாகவும், செங்கல் மற்றும் சீமெந்தினாலான இரண்டு படுக்கை அறைகள், வரவேற்பறை (Living Room), சமையலறை மற்றும் கழிவறையை உள்ளடக்கியதாகவும் ஓட்டினால் ஆன கூரைகளாகவும் அமைவது கலாசாரத்திற்கு அமைவானதாகவும் காணப்படுகின்றன.

இவை மாவட்ட செயலாளர்கள் ஊடாகவும் பிரதேச செயலாளர்கள் ஊடாகவும் அமுல்படுத்தப்படும். இவற்றிக்கான கொடுப்பனவுகள் கட்டம் கட்டமாக வேலைகளின் அடிப் படையில் பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

ஒருவீட்டிற்கான ஒதுக்கீடு ஒருமில்லியன் ரூபாவாகும். யாழ்.மாவட்டத்தில் 1500 வீடுகளும், கிளிநொச்சியில் 670 வீடுகளும் முல்லைத்தீவில் 630 வீடுகளும் வவுனியாவில் 450 வீடுகளும் மட்டக்களப்பில் 625 வீடுகளும், திருகோணமலையில் 400 வீடுகளும் மன்னாரில் 350 வீடுகளும் அம்பாறையில் 125 வீடுகளும் என்ற அடிப்படையில் நலன்புரி நிலையங்களிலும் புதிதாக விடுவிக்கப்பட்ட மீள்குடியேறவுள்ள குடும்பங்களும் என்ற அடிப்படையில் ஆரம்ப கட்டமாக முதல் 4 மாத கால வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றது.

இவ் வருடத்தில் 10,000 கல்வீடுகள் கட்டப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி மேலும் தெரிவித்தார். (இ-7)

# பௌத்தமதத்திற்கு மிகவும் புகழ்பெற்ற இலங்கையை அறிமுகம் செய்யுங்கள்

## வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு அறிவிப்பு

(கொழும்பு)



இராஜதந்திர நடவடிக்கைகளை பயன்மிக்கதாகவும் வினைத்திறனுடனும் முன்னெடுக்குமாறு வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதுவர்களுக்கு வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விசேட அறிவித்தல் ஒன்றின் மூலம் இந்த வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

பௌத்த மதம், மாணிக்கக்கல், தேயிலை மற்றும் வாசனைத் திரவியங்கள் என்பவற்றுக்கு புகழ்பெற்ற இடம் இலங்கை என்பதை உலகிற்கு அறிமுகம் செய்யுமாறும் அவர் தூதுவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையை அறிமுகம் செய்வதற்கு தங்களுக்கு முடியுமான அத்தனை வழிகளையும் பயன்படுத்துமாறும் அவர் கேட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகளின் போது இராஜதந்திரம் மற்றும் தகவல் ஊடகத்துறை என்பன தொடர்பான திறன் மிகவும் பிரதானமானது எனவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# போதைப்பொருள் பயன்பாட்டால் வருடத்துக்கு 80,000 பேர் பலி

## 'தேசிய போதைப்பொருள் ஒழிப்பு பாடசாலை வாரம்'

(கொழும்பு)

போதைப் பொருள் மற்றும் புகையிலைப் பயன்பாட்டால் வருடமொன்றுக்கு 80 ஆயிரம் பேர் வரை உயிரிழப்பதாக, போதைப் பொருள் ஒழிப்பு ஜனாதிபதி பணிக்குழுவின் பிரதானியும் வைத்திய அதிகாரியுமான, சமந்த குமார கிதல ஆராச்சி தெரிவித்துள்ளார்.

இதன்படி பாடசாலைகளில் மாணவரிடையே போதைப்பொருள் பாவனை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் ஆகையால் எதிர்வரும் 21 ஆம் திகதியிலிருந்து 28 ஆம் திகதி வரையில், "தேசிய போதைப் பொருள் ஒழிப்பு பாடசாலை வாரம்" நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குயின்ரன் 'குதூகலம்'

## வெற்றி முனைப்பில் தெ.ஆ கரைசேருமா பாகிஸ்தான்?



சதம் அடித்த மகிழ்வில் தென்னாபிரிக்காவின் குயின்ரன் டி ஹொக்

பாகிஸ்தானுக்கு எதிரான 3வது டெஸ்டில் குயின்ரன் டி கொக் சதம் கடந்து குதூகலிக்க, 2ஆவது இன்னிங்சில் 303 ஓட்டங்கள் எடுத்த தென்னாபிரிக்க அணி, 380 ஓட்டங்களால் வலுவான முன்னிலை பெற்றது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

முதலிரண்டு டெஸ்ட் போட்டிகள் நிறைவில் தென்னாபிரிக்க அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் ஜொகனஸ்பேர்க் நகரில் நடக்கிறது.

முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்கா 262, பாகிஸ்தான் 185 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாம் நாள் முடிவில், 2ஆவது இன்னிங் சில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அம்லா (42), குயின்ரன் (34) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**குயின்ரன் அபாரம்**

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த தென்னாபிரிக்க அணியின் அம்லா அரைச்சதம் கடந்தார். ஆறாவது விக்கெட்டுக்காக 102 ஓட்டங்கள் சேர்த்தபோது ஹசன் அலி பந்தில் அம்லா (71) வெளியேறினார். மொஹமட் அமிர் 'வேகத்தில்' பிலாண்டர் (14) ஆட்டமிழந்தார். அபாரமாக ஆடிய குயின்ரன் டி கொக் (129) சதம் கடந்தார். ரபாடா (21) ஓரளவு கைகொடுத்தார். ஒலிவியர் (1) ஏமாற்றினார்.

இரண்டாவது இன்னிங்சில் தென்னாபிரிக்க அணி 303 ஓட்டங்களுக்கு 'சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

**கடின இலக்கு**

பின், 381 ஓட்டங்களை எடுத்தால் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணிக்கு இமாம் உல் ஹக் (35), ஷான் மசோத் (37) ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. அசார் அலி (15) ஏமாற்றினார்.

இந்நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது 2வது இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 3 விக்கெட்டுக்கு 153 ஓட்டங்கள் எடுத்து, 228 ஓட்டங்களால் பின்தங்கி இருந்தது.

# புலி போல் எழுக... புயல் போல் விரைக...

## தோனி ரசிகர்கள் எதிர்பார்ப்பு



தோனி

'தல' தோனியின் 'துடுப்பாட்டம்' சமீபகாலமாக எடுபட வில்லை. சிட்னியில் மந்தமாக ஆடிய இவர், அடுத்த போட்டியில் புலி போல் எழுச்சி கண்டு புயல் வேகத்தில் ஓட்டங்கள் சேர்க்க வேண்டுமென ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்திய அணியின் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் தோனி (வயது-37). இந்தியாவுக்கு மூன்று விதமான உலக கிண்ணங்களை (2007ல் 'ரி20', 2011ல் 50 ஓவர், 2013ல் சம்பியன்ஸ் டிரொபி) பெற்றுக் கொடுத்தவர். இதுவரை விளையாடிய 333 ஒருநாள் போட்டியில் 10,224 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இருப்பினும் சமீபகாலமாக துடுப்பாட்டத்தில் ஏமாற்றுகிறார். முந்தைய 'ஹெலி கொப்டர் ஷொட்', துடிப்பான 'பினிஷிங்' திறனை காண முடியவில்லை. சமீபத்தில் சிட்னியில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் 96 பந்துகளில் (16 ஓவர்), 51 ஓட்., ('ஸ்டிரைக் ரேட்' 53.12) மட்டுமே எடுத்தார். இக்கட்டான நிலையில் ஐந்தாவது வீரராக களமிறங்கியது, நடுவரின் தவறான தீர்ப்பு போன்றவை தோனியின் சரிவுக்கு காரணமாக அமைந்தது. இருப்பினும் இவரது ஆமைவேக ஆட்டம் பின்வரிசையில் வந்தவர்களுக்கு நெருக்கடி கொடுக்க, இந்திய அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைய நேரிட்டது.

**'சுழல்' சோகம்**

தோனி கடைசியாக விளையாடிய 21 ஒரு நாள் போட்டிகளில் 326 ஓட்டங்கள்தான் எடுத்துள்ளார். இதில் ஒரு அரைச்சதம் மட்டுமே அடித்துள்ளார். 'ஸ்டிரைக் ரேட்' 67.7, சராசரி 27.2. சுழற்பந்துவீச்சில் தடுமாறும் இவர், கடந்த நான்கு ஆண்டுகளில் ஸ்பின்னர்களின் ஓவரில் 4.2 ஓட்டங்களுக்கும் குறைவாகவே எடுத்துள்ளார். இளம் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் ரிஷாப் பண்ட், டெஸ்ட் போட்டியிலேயே அதிவேகமாக ஓட்டம் சேர்க்கும் நிலையில், அனுபவ வீரரான தோனி இப்படி மந்தமாக ஆடுவது இந்திய அணிக்கு பின்னடைவு.

உலக கிண்ணத் தொடருக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் தோனி எழுச்சி கண்டால் மட்டுமே அணியில் இடத்தை தக்கவைக்க முடியும். தவறினால் ரிஷாப் பண்ட் வாய்ப்பை தட்டிப் பறிக்கலாம். இதனை உணர்ந்து நாளை அடிலெய்டில் நடக்கும் ஆஸிக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் 'பழைய' தோனியாக விஸ்வரூபம் எடுக்க வேண்டும்.

**தோனியின் பெருந்தன்மை**

இந்திய அணியின் 'சீனியர்' வீரரான தோனி, எளிமையானவர். பாரபட்சம் இல்லாமல் பழகக்கூடியவர். இதற்கு, மற்றொரு சம்பவம் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. அவுஸ்திரேலியாவை சேர்ந்த 87 வயதான எடித் நார்மன் என்ற பெண்மணி, தோனியின் தீவிர ரசிகர். இவரை நேரடியாக பார்க்க காத்திருந்திருந்தார். இந்த ஆசை சமீபத்தில் நிறைவேறியது. அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டிக்கான (சிட்னி) பயிற்சியில் தோனி ஈடுபட்டிருந்தார். இதை காண்பதற்கு தனது மகன் உதவியுடன் மைதானத்திற்கு வந்திருந்தார். பயிற்சியை எடித் பார்த்து ரசித்தார். பின், எடித்தை காண வந்த தோனி அருகில் அமர்ந்து சில நிமிடம் உரையாடினார். உற்சாகம் அடைந்த எடித், தோனியின் கையை பிடித்தவாறு அன்பை வெளிப்படுத்தினார். வழக்கம்போல இந்த 'வீடியோவை' தோனி ரசிகர்கள் சமூகவலைதளத்தில் பார்த்து பெருமைப்படுகின்றனர்.

இது குறித்து எடித் கூறுகையில், " தோனி என்னை சந்திப்பார் என்று நினைத்து கூட பார்க்கவில்லை. இதை அதிர்ஷ்டமாக கருதுகிறேன். இதே இடத்தில், அவுஸ்தி ரேலிய ஜாம்பவான் பிராட்மனையும் சந்தித்து உள்ளேன்." என்றார்.

# சாதிப்பாரா பெடரர்

## ஆஸி., ஓபன் இன்று ஆரம்பம்



பயிற்சியின்போது பெடரர்

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் பெடரர், செரினா உள்ளிட்டோர் கிண்ணம் வென்று சாதிக்க காத்திருக்கின்றனர்.

நடப்பு ஆண்டில் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் இன்று மெல்போர்னில் ஆரம்பமாகிறது. ஆண்கள் பிரிவில் 'நடப்பு சம்பியன்' ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) மீது எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளது. இத் தொடரில் அதிக முறை (தலா 6) கிண்ணம் வென்றவர்கள் பட்டியலில் ஜோகோவிச் (செர்பியா), ராய் எமர்சனுடன் (ஆஸி.,) முதலிடத்தை பெடரர் பகிர்ந்து கொண்டுள்ளார். மீண்டும் சம்பியனானால் 7 கிண்ணம் கைப்பற்றி சாதிக்கலாம். சமீபத்திய ஹோப்மன் கிண்ணம் வென்று 37 வயதான பெடரர் நம்பிக்கை தருகிறார்.

'நம்பர் 1' வீரரான செர்பியாவின் ஜோகோவிச்சை பொறுத்தவரை கடந்த முறை நான்காவது சுற்றுடன் நடையைக்கட்டினார். சமீபத்திய ஏ.டி.பி., பைனல்ஸ் தொடரின் இறுதியில் ஜேர்மனியின் 21வயதான அலெக்சாண்டர் ஜிவர்விடம் வீழ்ந்தார். இம்முறை சுதாகரிப்புடன் இருந்தால் கிண்ணத்தை வசப் படுத்தலாம்.

**விடைபெறும் முர்ரே**

தரவரிசையில் இரண்டாவது இடத்திலுள்ள ஸ்பெயினின் நடாலும் 'வின்னர்' பட்டியலில் உள்ளார். தொடைப்பகுதி காயத்தால் பிரிஸ்பேன் தொடரிலிருந்து விலகினார். தற்போது, முழு உடற்தகுதியுடன் இருப்பதாக கூறி இருப்பதால், இவரது ரசிகர்கள் நம்பிக்கையுடன் காணப்படுகின்றனர். பிரிட்டன் வீரர் முர்ரே பங்கேற்கும் கடைசி தொடராக இது அமைந்துள்ளது. வெற்றியுடன் விடைகொடுக்க இவர் முயற்சிக்கலாம். இந்த நான்கு நட்சத்திரங்களுடன் நிஷி கோரி (ஜப்பான்), வாவ்ரின்கா (சுவிட்சர்லாந்து) உள்ளிட்டோரும் கிண்ணத்தை தட்டிச்செல்ல காத்திருக்கின்றனர்.

**மிரட்டும் செரினா**

பெண்கள் பிரிவில் இதுவரை 23 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ள அமெரிக்காவின் செரினா இம்முறையும் முட்டி மோத தயாராக உள்ளார். 2017ல் இதே தொடரில் இரண்டு மாத கர்ப்பமாக இருந்த இவர், கிண்ணம் வென்றார். குழந்தை பிறந்தபின், விம்பிள்டன் மற்றும் யு.எஸ்., ஓபனில் பைனலுக்கு முன்னேறினார். இம்முறை அசத்தினால் ஒற்றையரில் அதிக முறை (24) கிண்ணம் வென்ற அவுஸ்திரேலியாவின் மார்க்ரெட் சாதனையை சமன் செய்யலாம். இவருடன் நடப்பு 'சம்பியன்' வோஸ்னியாக்கி (டென்மார்க்), ஹலெப் (ருமேனியா), ஷரபோவா (ரஷ்யா) போன்ற வீராங்கனைகளும் சவால் கொடுக்கலாம்.

# வோட்சன் 'விளாசல்'

## சிட்னி தண்டர் வெற்றி



பந்தை விரட்டும் வோட்சன்

அடிலெய்ட் அணிக்கு எதிரான பிக் பாஷ் 'ரி20' லீக் போட்டியில், அணித் தலைவர் வோட்சன் அரைச்சதம் விளாச, சிட்னி தண்டர் அணி 71 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியாவில் நடக்கும் பிக் பாஷ்'ரி20' தொடரில் நேற்று நடந்த ஆட்டமொன்றில் அடிலெய்ட் ஸ்ரைக்கர்ஸ், சிட்னி தண்டர் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற சிட்னி அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

சிட்னி அணிக்கு அணித் தலைவர் வோட்சன் அரைச்சதம் (68 நான்கு பவுண்டரிகள், 5 சிக்சர்கள்) விளாசி கைகொடுக்க,

20 ஓவர்கள் நிறைவில் சிட்னி 6 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களை எடுத்தது. பின் களமிறங்கிய அடிலெய்ட் அணி 17.4 ஓவர்கள் வரை தாக்குப்பிடித்து 97 ஓட்டங்களை மாத்திரமே எடுத்து 71 ஓட்டங்களால் வீழ்ந்தது.



தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு பொங்கல் பொருட்கள் வியாபாரம் யாழ்.குடாநாட்டில் சூடுபிடித்துள்ளது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# மரண அறிவித்தல்

## திரு.தர்மலிங்கம் சண்முகதாஸ் (சின்ராசு)

## (முன்னாள் பனை அபிவிருத்திச்சபை ஊழியர்)



(C-5146)

மண்டைதீவு 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் அரியாலை A.V. றோட்டை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சண்முகதாஸ் (சின்ராசு-முன்னாள் பனை அபிவிருத்தி சபை ஊழியர்) அவர்கள் 12.01.2019 சனிக்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் (ஆசிரியர்) மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா- பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் அம்பிகாரெத்தினத்தின் பாசமிகு கணவரும், நிவேதிக்கா, கஜானன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், தர்மகுலேந்திரன், மல்லிகாதேவி, ஜானகி (கனடா), கருணாகரன் (ரவி,கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான தர்மராசா, சண்முகநாதன், தனபாலசூரியர்,இராஜசூரியர், கனகசூரியர்,புவனேஸ்வரி,சகுந்தலாதேவி, மதுரரெத்தினம், சிவகுமார் (கனடா) மற்றும் மகேஸ்வரி (லண்டன்), இராஜேஸ்வரி, மதிகலா ஆகியோரின் மைத்துனரும் கமலரூபன் (பிரான்ஸ்), சர்மிலா, சஜிதா, சசிறேகா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் தசாயினி, யதுர்சிகா, தனுசியா, ரஜிதா (கனடா), அனோஜன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அரங்கன், அட்சரன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் இரத்தினசபாபதி, சந்திரமதி தம்பதியின் அன்பு சம்பந்தியும் பிரதீப்பின் பாசமிகு மாமனாரும் பிரியந்தி, வருண் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.01.2019 இன்று திங்கட்கிழமை 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

97/8, A.V றோட், அரியாலை. 077 408 0578, 077 041 7254

## இராசி பலன்

**மீனம்:** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், இறைவழிபாட்டில் நம்பிக்கை கூடும்.

**மேடம்:** உடல்நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள்.

**இடபம்:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பக்குவமாக பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், சயனக் குறைவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்:** எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும், மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயல்களைச் செய்து காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| செவ்.சந் | | | |
| | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் சித்திரை காலை 8.55 மணிக்கு மே-சந் | | |
| சூரி,புத சனி | குரு.சுக் | | |

14.01.2019

மார்கழி 30, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

அட்டமி முன்னிரவு 8.33 மணிவரை

ரேவதி முற்பகல் 9.26 மணிவரை

சுபநேரம் 12.34-2.04 மணிவரை

இராகுகாலம் 8.04-9.34 மணிவரை

வளவன்

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்ட காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்.

**மகரம்:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும்.

**சிம்மம்:** வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருங்கால நலன்கருதி புதிய திட்டம் ஒன்றைத் தீட்டுவீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள்.

**தனுசு:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாய்ப்புகள் உங்களைத் தேடி வரலாம், உஷ்ணம் சம்பந்தமான ரோக பயமுண்டு.

**விருச்சிகம்:** திட்டமிட்ட காரியங்கள் எளிதில் கைகூடும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு, கௌரவமான நாள்.

**துலாம்:** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி:** பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம்.

### வீட்டுத்திட்டம் குறித்து

## ஆட்சேபனை இருந்தால் தெரிவிக்கவும்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் தகுதி இருந்தும் தமக்கான வீட்டுத்திட்டங்கள் வழங்கப் படவில்லையெனக் கருதுப வர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் தமது ஆட்சேப னைக் கடிதங்களை சம் பந்தப்பட்ட அதிகாரிகளு க்கோ அல்லது செயலக முறைப்பாட்டுப் பெட்டியிலோ தெரிவிக்க முடியுமெனப் பிரதேச செயலாளர் அறி வித்துள்ளார். இது தொடர் பில் அவர் மேலும் தெரிவிக் கையில்,இவ்வருடம் தமது பிரதேசத்துக்கு வழங்க வென வீடமைப்பு அமைச் சால் 550 வீட்டுத் திட்டங் கள் வழங்கப்பட்டுள்ள தாகவும் இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பயனா ளிகளைத் தமது கிராம உத் தியோகத்தர் அலுவலகத் தில் பார்வையிட முடியு மெனத் தெரிவித்தார்.

இத் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட பயனா ளிகள் விபரம் தொடர்பில் குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் முறைப்பாடு களின் அடிப்படையில் மாற் றங்கள் ஏற்படலாம் எனவும் இதன்போது வெளியிடப் பட்ட பெயர் விபரங்கள் இறுதிப்பட்டியலாக அமை யாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10-134)

## கொடுக்கல்-வாங்கலில் முரண்பாடு யாழில் ஆட்டோ அடித்து உடைப்பு!



(யாழ்ப்பாணம்)

கொடுக்கல்-வாங்கலில் ஏற்பட்ட முரண்பாடு கார ணமாக ஆட்டோ ஒன்று இனந்தெரியாத நபர்களால் நேற்றுக்காலை யாழ்ப் பாணம் பொம்மை வெளிப் பகுதியில் உடைக்கப்பட்டது.

இது தொடர்பில் ஆட்டோ உரிமையாளர் தெரிவிக் கையில்,

ஆட்டோ ஒன்றை நபர் ஒருவரிடமிருந்து கொள் வனவு செய்திருந்தேன். அதற்கான பணத்தைக் கட் டம் கட்டமாகச் செலுத்தி வந்தேன். அவ்வாறு செலு த்தியதில் மிகுதியாக 10 ஆயிரம் ரூபா பணம் கொடு க்க வேண்டியிருந்தது. அதில் கொள்வனவு செய்த ஆட்டோ வின் மேலதிக சில்லு தர வேண்டி இருந்தது. ஆகவே அதனைத் தந்தவுடன் மிகு திப் பணத்தைத் தருவதாக கூறியிருந்தேன்

இந்நிலையில் (நேற்று) இன்று காலை எனது வீட் டுக்கு வந்த இருவர் மிகுதிப் பணத்தினை தருமாறு கோரினர்.

அப்போது மேற்படி விட யத்தை கூற அவர்கள் எம்மு டன் முரண்பட்டனர். ஆட் டோவை அடித்து டைத்த னர். இது தொடர்பில்பொலிஸ் நிலையத்தில் முறையிட் டுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## அலங்கார உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு வடக்கு சக்தி புரம் வேல்முருகன் ஆல யத்தின் அலங்கார உற்ச வம் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமா னது.

தொடர்ந்து பத்து நாட் கள் நடைபெறும் இவ் அல ங்கார உற்சவம் தைப்பூ சமான எதிர்வரும் 21ஆம் திகதி இரதோற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

அலங்கார உற்சவத் தின் பத்து நாட்களும் தின மும் மாலை 6 மணி யிலி ருந்து 7 மணிவரை பட்டி மன்றம், நடனம் முதலான கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (இ-78)

## ஊழியர் மீது தாக்குதல் முறைப்பாடு வாபஸ்!

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத் துச் சபையின் யாழ். ஊழி யர் தாக்கட்டமை தொடர் பான முறைப்பாட்டைக் குறி த்த ஊழியர் வாபஸ் பெற்றுக் கொண்டதால் நெல்லியடிப் பொலிஸ் நிலைய வட்டார ங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதா வது, கடந்த வாரம் துன்னா லைப்பகுதியில் வைத்து இ.போ.ச. யாழ்.ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டமை தொடர்பில் தாக்குதலுக்கான ஊழியரால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாட்டை யடுத்து இரு தரப்பையும் பொலிஸார் அழைத்த போது தாம் இணக்கப்பாட் டுடன் செல்ல விருப்பம் தெரிவித்தமையால் முறை ப்பாடு வாபஸ் பெறப்பட் டதாக தெரிவிக்கப்பட்டுள் ளது. (இ-10)

## புத்தூரில் நாடக விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் யாழ்ப்பாணப் பிரதேச பேரவையின் ஏற் பாட்டில் நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் ஈழத்தின் நவீன தமிழ் நாடகத்தின் தந்தை குழ ந்தை ம. சண்முகலிங்கத் தின் எழுத்துரு மற்றும் நெறி யாள்கையில் உருவான "உறவுகள்", மற்றும் ரஷ்ய நாடக ஆசிரியர் அன்ரன் செக்கோவினால் எழுதப்ப ட்டு குழந்தை ம. சண்முக லிங்கத்தால் மொழிபெயர் ப்புச் செய்யப்பட்டுப் பேரா சிரியர் க. ரதிதரனின் நெறி யாள்கையில் உருவான "தான் விரும்பாத் தியாகி" ஆகிய நாடகங்களின் ஆற் றுகை எதிர்வரும் தைப் பொங்கல் தினமான நாளை 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பி.ப. 3.30 மணிய ளவில் யாழ்.புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரியின் குமார சாமி மண்டபத்தில்இடம்பெறும்

தேசிய கலை இலக்கியப் பேரவையால் வருடாந்தம் நடத்தப்படும் உழவர் விழா, வின் ஓர் அங்கமான இந் நாடக ஆற்றுகைகளைக் கண்டுகளிக்க அனைவரை யும் விழா ஏற்பாட்டாளர்கள் அழைத்துள்ளனர்.(இ-7)

## உலகத் தமிழர் மாணவர் ஒன்றிய வருடாந்த ஒன்றுகூடல் நல்லூரில்

(யாழ்ப்பாணம்)

உலகத்தமிழ் மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு நல் லூர் ஆலய முன்றலில் நடைபெறும்.

இதில் உலகத்தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஊடாக வன்னிக்கான வெள்ள நிவாரணப் பணி களில் இணைந்த அமைப் புக்களின்,அறிமுக நிகழ்வும் இடம்பெறும். இதில் அனை த்து இளைஞர்களையும் கலந்துகொள்ளுமாறு உல கத்தமிழ் மாணவர் ஒன்றி யத்தின் வடக்கு மாகாணத் தலைவர் ம.தனுசன் தெரி வித்துள்ளார். (இ-9)




## சாயிபாபாவின் பிறந்த நாளை முன்னிட்டு யாழில் எட்டுப் பேருக்கு இலவச கண் சத்திர சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

சத்திய சாயி பாபாவின் பிறந்த நாளை முன்னிட்டு சத்திய சாயி பாபா சேவா சபையினரால் வடக்கு மாகா ணத்திலுள்ள வறுமைக் கோட் டுக்குட்பட்ட எட்டு பேருக்கு இலவச கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் போரால் பாதிக்கப்பட்ட நிலை யில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்துவந்த கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நபர்கள் 8 பேர் சத்திய சாயி பாபா சேவா சபையினரால் தெரிவு செய் யப்பட்டிருந்தனர்.

குறித்த விடயம் தொடர் பில் கண் சத்திர சிகிச்சை நிபு ணர் எஸ். சந்திரகுமாருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து அவர் தனது சொந்த செலவில் குறித்த 8 பேருக்கும் கண் சத்திர சிகிச்சையை கடந்த வருட இறுதியில் யாழ்ப்பா ணம் முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள எஸ். ரி.எஸ் வைத்தியசாலையில் மேற்கொண்டார். (இ-9)

## பெண்களிடம் நகைகளைத் திருடிய இளைஞன் பொலிஸாரால் கைது

### மோட்டார்சைக்கிள், தங்க ஆபரணங்கள் மீட்பு




(யாழ்ப்பாணம்)

பெண்களின் நகைக ளைத் திருடி வந்த இளை ஞர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளதுடன், அவர் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். யாழ்.அரியாலைப் பகு தியைச் சேர்ந்த 27 வயது டைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுளளார்.

குறித்த நபர் சாவகச் சேரி மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் தனிமையில் செல்லும் பெண்களின் தங்க நகைகளை அபகரி த்து வந்துள்ளார். இவர் பொலி ஸாரால் தேடப்பட்டு வரும் நபர் ஆவார். இந் நிலையில் யாழ்.வலய புலனாய்வு பிரி வினருக்கு கிடைத்த இரக சிய தகவலுக்கு அமைய நேற்றுக் காலை குறித்த நபர் மோட்டார் சைக்கிளு டன் கைது செய்யப்பட்டுள் ளார்.

அத்துடன் அவரிடம் மேற் கொண்ட விசாரணையின் அடிப்படையில் அவர் திரு டிச்சென்று விற்பனை செய்த ஒரு தொகுதி தங்க ஆபர ணங்களும் கைப்பற் றப்ப ட்டுள்ளன. மேலதிக விசார ணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-9-101)

## கட்டுத் துப்பாக்கி வைத்திருந்தவர் யாழ்.புலனாய்வுப்பிரிவால் கைது



(யாழ்ப்பாணம்)

அனுமதியின்றி கட்டுத் துப்பாக்கியை வீட்டில் வைத் திருந்த நபர் ஒருவர் யாழ் புலனாய்வுப் பிரிவு பொலி ஸரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு சாவகச் சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மீசாலையைச் சேர்ந்த 38 வயதுடையநபரே அனு மதியின்றி 2 கட்டுத் துப் பாக்கிகளை தனது வீட்டில் வைத்திருந்துள்ளார். குறி த்த தகவல் புலனாய்வுப் பிரிவு பொலிஸாருக்கு கிடை த்ததை அடுத்து நேற்று முன் தினம் குறித்த நபருடைய வீட்டுக்குச் சென்ற பொலி ஸார் சோதனை செய்து துப் பாக்கிகளை மீட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த நப ரிடம் விசாரணைகளை மேற்கொண்டபின்னர் அவ ரையும் கைது செய்து சாவ கச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். மேல திக விசாரணைகளை சாவ கச்சேரி பொலிஸார் மேற் கொண்டு வருகின் றனர். (இ-9)

## தளபாடங்கள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

தனது 2018ஆம் ஆண் டுக்கான வடமாகாணசபை யின் குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் சமாதான நீதவான்களின் சம்மேளனமான தேசோதய சபையின் கோப்பாய் தேசோதய சபைப்பிரிவுக்கு வடக்கு மாகாணசபை முன் னாள் உறுப்பினர் பா.கஜ தீபனால் ஒரு தொகை தளபாடங்கள் வழங்கப்பட் டன.

கோப்பாய் தேசோதய பிரிவின் தலைவர் மயில் வாகனம் தலைமையில் கோப்பாயில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாணசபை முன் னாள் உறுப்பினர் பா.கஜ தீபன் கலந்துகொண்டு இந்த தளபாடங்களை கையளித்தார்.

இந்நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்க ளுக்கான கற்றல் உபகர ணங்கள் வழங்கும் நிகழ் வும் இடம்பெற்றது. (இ-7)



நெல்லியடி கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு விசேட விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள் ளது. (படங்கள்:- மகாலிங்கம்)

# மக்கள் தயார் என்றால் நானும் தயார்

(கொழும்பு)

நாட்டு மக்கள் தயார் என்றால், எந்தவொரு சவாலுக்கும் முகம்கொடுக்க தான் தயார் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவரது ஊடகச் செயலாளர் மிலிந்த ராஜபக்ஷ நேற்று தனது டுவிட்டர் பக்கத்தில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

பயோடெக்னொலஜி மாநாட்டில் உரையாற்றும் போது முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் இந்தக் கருத்தை வெளியிட்டிருந்ததாகவும் மிலிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வருடம் நாட்டுக்கு மிகவும் தீர்மானம் மிக்க ஆண்டு எனவும் கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்ததாகவும் மிலிந்த மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



# அட்டகாசம் செய்த யானை மீட்பு

(கொழும்பு)

கலேன்பிந்துனுவெவ குட்டிக்குளம் பிரதேசத்தில் பாதுகாப்பற்ற முறையில் காணப்பட்ட கிணற்றுக்குள் விழுந்த யானையை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

ஏருவெவ வனாந்தரத்திலிருந்து உணவு தேடி வந்த குறித்த யானையொன்றே இவ்வாறு கிணற்றுக்குள் விழுந்துள்ளதாகவும், நேற்று முன்தினம் இரவு குறித்த பகுதியில் வசிக்கும் பிரதேசவாசிகளின் வயல் நிலங்களில் புகுந்து அட்டகாசங்களை செய்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)



# பண்ணை வேலையாள் தேவை

பல்வேறு பண்ணை வேலைகளிலும் உற்சாகத்துடன் ஈடுபடக்கூடிய இருவர் தேவை. பண்ணையில் தங்கியிருக்கும் வசதி உண்டு. அத்துடன், இளையோர் இருவருக்கும் (பெண்கள்/ஆண்கள்) விவசாயப் பயிற்சி பெறும் வாய்ப்பும் (**Apprenticeship**) உள்ளது. தொடர்பு கொள்ளவும்.

**திருநாவுக்கரசு நினைவு மாதிரிப் பண்ணை,**
**மாவிட்டபுரம்.**
(7142)

**தொலைபேசி:**
**077 172 6583**

**கேன் காப்பகம்**
**இல. 05, சபாபதிப்பிள்ளை வீதி,**
**உடுவில், சுன்னாகம்.**

# வாகன வாடகை

கேன் நிறுவனம் வீடுகளில் தங்கியிருக்கும் நோயாளர்களை பார்வையிடும் திட்டத்தின் கீழ் வாகனத்தை வாடகை அடிப்படையில் பெறுவதற்கு எண்ணியுள்ளது. எனவே வாகானத்தை வாடகைக்கு அமர்த்தும் சேவையில் ஈடுபடுவோர் அதற்கான கூறுவிலையை சமர்ப்பிக்க வேண்டும். கூறுவிலை பற்றிய முழுவிபரங்களையும் காரியாலத்தில் ரூபா.100/ செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். கூறுவிலை படிவத்தை கீழே குறிப்பிடப்பட்ட விலாசத்தில் விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

கூறுவிலை படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதி திகதி 25.01.2019

**தலைவர்,**
**கேன் புற்றுநோயாளர் காப்பகம்,**
**இல. 05, சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில்,**
**சுன்னாகம்.**
(7126)

# பகிரங்க ஏலவிற்பனை

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பின்வரும் பொருட்கள் 2019.01.22 ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) மு.ப 10.00 மணி தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. இரும்புக்கட்டில்கள், சில்லுக் கதிரைகள், மேசைகள், அலுமாரிகள்(ஸ்ரீல்)
2. மர அலுமாரிகள், மரக்கதிரைகள்
3. கணனிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்கள்
4. குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் மின் விசிறிகள்
5. பழைய இரும்பு, அலுமினியம், சில்வர் பொருட்கள்
6. பழைய மர. இரும்புக் கதவுகள், யன்னல்கள் மற்றும் அதற்குரிய நிலைகள்
7. பாவித்த வாகன ரயர்கள்
8. பழைய பிளாஸ்ரிக் பொருட்கள்
9. பழைய இரும்புக் கேடர்கள்
10. பழைய தீராந்தி, பனைமரங்கள் மற்றும் சிலாகைகள்
11. பழையசீற் மற்றும் ஓடுகள்
12. ஏனைய தளபாட உபகரணங்கள்

இவ் ஏலவிற்பனையில் கலந்து கொள்ள விரும்புவோர் இல.111 பிரதான வீதியில் உள்ள யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைக் களஞ்சியத்தில் மேற்படி பொருட்களை 2019.01.22 ஆம் திகதி காலை 8.00-10.00 மணி வரை பார்வையிட முடிவதுடன் அதனைத் தொடர்ந்து ஏலவிற்பனையில் கலந்து கொள்ளவும் முடியும். ஏலத்தில் தெரிவானவர்கள் பணத்தை காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று பொருட்களை அன்றையதினம் பி.ப 5.00 மணிக்கு முன்னர் மேற்படி களஞ்சியத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**
(c-5130)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988இந்து
நட்சத்திரம்:உத்தரம் 2
கி.பா:37செவ் 8 இல்
உயரம்: 6'2"
தகைமை/தொழில்:B.ScEng.District Manager (அரச)
எதிர்பார்ப்பு: பட்டதாரி, பணிபுரிபவர்
தொ.இ: B/9103

பிறப்பு: 1989கிறிஸ்தவம்
நட்சத்திரம்: மூலம்
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L Electricity Board (அரச)
எதிர்பார்ப்பு:இந்துசமயமும் விரும்பத்தக்கது.
தொ.இ: B/9104

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்:அவிட்டம் 3கி.பா: 04
உயரம்: 6'2"
தகைமை/தொழில்:MBA ,Human Resource Manager
எதிர்பார்ப்பு: உள்நாடு
தொ.இ: B/9107

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்:பரணி 3
கி.பா: 10 1/4
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L , France
எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு (France PR)
தொ.இ: B/9108

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்:விசாகம்
கி.பா: 18 3/4செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BA
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/9101

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 1
கி.பா: 47
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:HND IT
எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு
தொ.இ: G/9102

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 29செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:MDC Doctor, London PR
எதிர்பார்ப்பு: பட்டதாரி,வெளிநாடு(UK)
தொ.இ: G/9105

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்:அத்தம் 1
கி.பா: 22
உயரம்:
5'2"தகைமை/தொழில்:MLT
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/9106

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

## தரம் 8 இற்கான மகாஜனன் கணித விஞ்ஞான திறன்காண் போட்டிப் பரீட்சை - 2019

மகாஜனக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியையும் தன்து தாயாருமான திருமதி சௌபாக்கியவதி இராஜரட்ணம் ஞாபகார்த்தமாக சட்டத்தரணி இ.செல்வஸ்கந்தன் அவர்களால் வருடாவருடம் நடாத்தப்படும் கணித விஞ்ஞான அறிவுத்திறன்காண் போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இவருடன் இணைந்து போட்டிப் பரீட்சைக்கான வினாத்தாள்களை கனடா பழைய மாணவர் சங்கம் தயாரித்து வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பரீட்சை நிலையங்கள்

1.வவுனியா :-வவு/தமிழ் ம.ம.வி
2.மன்னார் :-மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி
3.முல்லைத்தீவு :-மு/வித்தியானந்தா கல்லூரி
4.கிளிநொச்சி :- கிளி/மத்திய கல்லூரி
5.யாழ்ப்பாணம் :-யா/இந்துக் கல்லூரி
6.தென்மராட்சி :-யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி
7.வடமராட்சி :-யா/ஹாட்லிக் கல்லூரி
8.வலிகாமம் :-யா/மகாஜனக் கல்லூரி

பரிசில் விபரம்

| கணிதம் | விஞ்ஞானம் |
|---|---|
| 1ம் இடம் - 30 000/= | 1ம் இடம்-30 000/= |
| 2ம் இடம் - 20 000/= | 2ம் இடம்-20 000/= |
| 3ம் இடம் - 15 000/= | 3ம் இடம்-15 000/= |
| 4ம் 5ம் 6ம் இடங்கள் - 8000/= | 4ம் 5ம் 6ம் இடங்கள்-8000/= |
| 7ம் 8ம் 9ம் 10ம் இடங்கள் - 5000/= | 7ம் 8ம் 9ம் 10ம் இடங்கள்-5000/= |


விண்ணப்பங்கள் யாவும் அதிபர் யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை என்ற முகவரிக்கு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். (C-5734)

# வழக்கத்திலிருந்த நில உரிமை முறைமைகளும் மண்ணின் மகிமை (பிம்சவிய) நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் காணி உரித்துப் பதிவும்

03

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.






நன்றி: Noolaham

**'எமது மூதாதையர் காணியின் விஸ்தீரணத்தை அளவிட்ட முறை**

எமது மூதாதையர் காணியின் பரப்பளவை நெல், வரகு அல்லது குரக்கன் போன்ற தானிய உணவுப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தக்கூடிய காணி அளவின்படி பரப்பளவைக்கணக்கிட்டுக்கொண்டனர். இவ்வாறு பரப்பளவைக் கணக்கிட்ட போதும் அளவை முறைகள் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வேறுபட்டதாக இருந்தது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் காணியின் பரப்பளவுகள் 16 சாண்X16 சாண் என்பது 1 குழி என்றும் நெற் செய்கைக் காணிக்கு 12 குழி-1 பரப்பு என்றும் வரகுச் செய்கைக் காணிக்கு 18 குழி - 1 பரப்பு என்றும் கூறப்பட்டது.

அக்காலத்தில் பொதுவாகக் காணிகள் செவ்வக வடிவமாகக் கருதப்பட்டு சராசரி நீளத்தையும் சராசரி அகலத்தையும் அளந்து காணியின் பரப்பளவைக் கண்டிருத்தல் வேண்டும்.

அதனால் காணியின் படத்தைக் கீறாமல் இருந்திருக்கலாம். படங்களோ அல்லது வேறு தகவல்களோ எமக்கு கிடைக்காவிடினும் இலங்கையில் ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர் வருமுன் எமது மூதாதையர் நில அளவை சம்பந்தமான அறிவை பெற்றிருந்தனர் என்பதற்கு புராதன நீர்ப்பாசனத் திட்டங்களும், கட்டடங்களும் சிறந்த சான்றாகவுள்ளன.

காணியின் அளவுகள் ஒல்லாந்தர் காலத்தில் மோகன் **(morgen)** என்ற அலகிலும் பிரித்தானியர் காலத்தில் ஏக்கர் அளவு முறையிலும் அளக்கப்பட்டன. இலங்கையில் தற்போது காணிகள் மெற்றிக் முறையிலேயே (ஹெட்டார்) அளக்கப்படுகின்றன.

காணியை அளவிடும் தற்போதைய அலகு முறைக்கும் பழங்காலத்து காணிப்பரப்பின் அலகுக்குமிடையே உள்ள தொடர்பு பற்றி சிறிது ஆராய்வோம். இவை முன்னர் கூறியது போல் இடத்துக்கு இடம் வேறுபடலாம். உதாரணமாக மன்னாரில் 21/4 புசல் நெல் விதைக்கக்கூடிய வயல் 1 ஏக்கர் எனவும் வவுனியாவில் 2 புசல் நெல் விதைக்கக்கூடிய வயல் 1 ஏக்கர் எனவும் கூறப்பட்டது. தற்போதைய அலகு முறை மிகவும் திட்பமானது. இதனை பிரித்தானியர் காலத்திற்கு முன்னிருந்த பழைய முறையுடன் மிகச் செப்பமாக ஒப்பிட முடியாவிடினும் ஓரளவு ஒப்பிடமுடியும்.

மேலும் பழைய முறைகள் (அதாவது பரப்பு, ஏக்கர், பேர்ச் போன்றவை) தற்போதும் பாவனையில் உள்ளதால் தனியார் காணிகள் அளக்கப்படும் போது காணி உரிமையாளர் வேண்டுமிடத்து பரப்பளவுகள் இரு முறைகளிலும் கொடுக்கப்படுகின்றன.

இவ்வலகுகளுக்கிடையே உள்ள தொடர்புகள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன.

1 சாண் - 9 அங்குலம்

1 குழி - 144 சதுர அடி

24 பரப்பு (நெற்செய்கை)- 1 ஏக்கர்

16 பரப்பு (வரகுச்செய்கை) - 1 ஏக்கர்

1 மோகன் - 2 ஏக்கரிலும் சிறிது கூட

40 பேர்ச் - 1 றூட்

4 றூட் - 1 ஏக்கர்

1 பேர்ச் - 25 சதுரமீற்றர்

1 ஹெக்டயர் -2.471 ஏக்கர்

1 பேர்ச் - 272.25 சதுரஅடி

ஆகும்.

இவ் அலகு முறைபற்றி விபரமாக வேறொரு கட்டுரையில் பார்ப்போம்.

**போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கால காணி (நில) ஆட்சி முறை**

எமது அரசர்களின் ஆட்சிகளைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் அரசர்களின் சொத்தை தம்மரசுகளின் சொத்துக்களாக்கிக் கொண்டதோடு அக் காணி வளங்களையும் கரையோர வளங்களையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் சொத்தாண்மையை நிலை நிறுத்துவதற்கும் எழுத்து வடிவில் சில காணிச் சட்டங்கள் இயற்றப்பட்டன எனலாம்.

**தோம்புகள் (Thombos) இருவகையாக இருந்தன. அவை தலைத்தோம்பு (head thombo) மற்றும் நிலத்தோம்பு (land thombo) கொண்டிருந்தது. இந்த குழுக்களால் சொந்தமான நிலத்தின் பங்குகளை/உரிமைகளை நிலத்தோம்பு (land thombo) விபரிக்கிறது. தோம்பு என்பது பொதுவாக காணிபபதிவை குறிப்பிட்டாலும் மற்றைய பதிவுகளும் தோம்பு என்றே அழைக்கப்பட்டன. உதாரணமாக பாடசாலைத் தோம்பை குறிப்பிடலாம்.**

போர்த்துக்கேயரும் (1505-1658) தமது ஆட்சியின் கீழ் இருந்த கடல் சார்ந்த பிரதேசங்களுக்கு **(Maritime area)** முன்னர் கூறியது போல் தோம்புகள் **(Thombos)** என்ற பெயரில் விபரமான நில இடாப்புகளை எழுதிவைத்தனர். இவற்றைப் பின்பற்றி டச்சுக்காரரும் / ஒல்லாந்தரும் (1658 - 1796) இக் காணிப் பதிவேட்டு முறையையே (தோம்பு) மேற்கொண்டார்கள்.


இப் பதிவுகள் இருவகையாக இருந்தன. அவை தலைத் தோம்பு **(head thombo)** மற்றும் நிலத்தோம்பு **(land thombo)** ஆகும்.

ஒரு குடும்பக் குழு உறுப்பினர்கள் பற்றிய விபரங்களைத் தலைத்தோம்பு **(head thombo)** கொண்டிருந்தது. இந்த குழுக்களால் சொந்தமான நிலத்தின் பங்குகளை/ உரிமைகளை நிலத்தோம்பு **(land thombo)** விவரிக்கிறது. தோம்பு என்பது பொதுவாக காணிப்பதிவை குறிப்பிட்டாலும் மற்றைய பதிவுகளும் தோம்பு என்றே அழைக்கப்பட்டன.



ஒல்லாந்தர் காலத்து தோம்புகள்
தலைத் தோம்பு , இடத் தோம்பு

உதாரணமாக பாடசாலைத் தோம்பை குறிப்பிடலாம். இவை வரி நோக்கங்களுக்கான தகவலைக் கொண்டிருந்தன.



சகல நிலத் தோம்புகளும் நிலஅளவை வரைபடங்களை உள்ளடக்கி இருந்ததாக எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஆனாலும் சில காணிகளின் நிலத் தோம்புகள் நிலஅளவை வரைபடங்களை உள்ளடக்கியிருந்தன.

அச்சுவேலியில் இருந்த காணியொன்றின் நிலத்தோம்பில் இருந்த 6 காணித்துண்டுகளை உள்ளடக்கிய நில அளவை வரைபடம் கீழே காட்டப்பட்டுள்ளது. (இத் தகவல் **Clemens Deimann** என்பவரின் **Research Master Thesis** இலிருந்து எடுக்கப்பட்டது.

**இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சியில் காணிப் பதிவு**

நாட்டின் அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட வீதிப் பொது வேலை, விவசாயம், நீர்ப்பாசனம் போன்றவற்றிற்கான காணி அளவைகளை மேற்கொள்வதற்காக, பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் 1800ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி இலங்கை நிலஅளவைத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது.

(தொடரும்...)

# நவாலி படுகொலையை சிங்களப் பத்திரிகையில் துணிச்சலோடு பிரசுரித்த பிரேமலால் காலமானார்



(கொழும்பு)

தென்னிலங்கையிலிருந்து வெளியாகும் ஹிரு பத்திரிகையின் சிரேஷ்ட ஊடகவியலாளர், லால் எனப்படும் பிரேமலால் வெடிக்கார தனது 65 ஆவது வயதில் காலமானார்.

தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளை பகிரங்கமாக வெளிப்படுத்தி வந்த சிங்கள ஊடகவியலாளர்களில் பிரேமலாலும் ஒருவர். எண்பதுகளின் இறுதியில் ஜே.வி.பி.புரட்சியின் போது அரச பயங்கரவாதத்திடமிருந்து தப்பிவந்த இளைஞர்களில் இவரும் ஒருவர் என்பதுடன் அவ்வாறு தப்பி வந்த இளைஞர்களால் ஹிரு பத்திரிகை உருவாக்கப்பட்டதாகும்.

தமிழர் பிரதேசங்களில் நடக்கும் இலங்கை வான்படையின் குண்டு வீச்சுக்களை தொண்ணூறுகளில் மிகத் துணிச்சலாக வெளிக்கொணர்ந்தவர்களில் பிரேமலாலும் ஒருவர். குறிப்பாக மிகப்பெரிய மனிதப் பேரவலங்களில் ஒன்றான நவாலி சென். பீற்றர் தேவாலயம் மீதான புக்காரா விமானக் குண்டுவீச்சுப் புகைப்படங்களை ஹிரு பத்திரிகையின் முன்பக்கத்தில் வெளியிட்டதால் அப்போதைய ஜே.வி.பி உள்ளிட்ட இனவாதக் கட்சிகளின் எதிர்ப்புக்கு ஆளானார்.

மூத்த ஊடகவியலாளர்களில் ஒருவராக இன்று வரை உழைத்துக்கொண்டிருந்த பிரேமலால் நேற்று தனது 65ஆவது வயதில் காலமானார். (இ-7)

# பாரம்பரிய பண்பாட்டு கலை நிகழ்ச்சிகளுடன் திருமறைக் கலாமன்றத்தில் பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் ஆண்டு தோறும் நடத்தும் 'பொங்கல் விழா' சில கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் கலை நிகழ்ச்சிகளுடன் இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்றப் பணியகத்தில் பொங்கல் வைபவமும் அதனைத் தொடர்ந்து காலை 7 மணிக்கு இல.17, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைஞான சுரபியான இல்லத்தில் பண்பாட்டு வழிபாடும் இடம்பெறும்.

தொடர்ந்து மாலை 6 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகவுள்ளன.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கலை நிகழ்ச்சிகளாக திருமறைக்கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகள் வழங்கும் வரவேற்பு நடனமும், திருமறைக் கலாமன்ற கலைஞர்கள் வழங்கும் கூத்துபண் இசையும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து மூத்தகவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் 'நேற்றைய துயரங்கள் நீறாக பொங்குதுபால்' என்னும் பொருளில் கவியரங்கு இடம்பெறவுள்ளது.

இதில் கவிஞர்களான த.ஜெயசீலன், கு.றஜீபன், ம.ஜொணி, வ. வடிவழகையன் ஆகியோர் பங்கு பற்றுவார்கள். தொடர்ந்து நிறைவு நிகழ்வாக இளவாலைத் திருமறைக் கலாமன்றம் வழங்கும் சோழன் மகன் தென்மோடி நாட்டுக் கூத்து இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (இ-7)

# சுற்றுலா முகாமுக்கு சென்ற இந்தியப் பிரஜை உயிரிழப்பு

(அம்பலாந்தோட்டை)

அம்பலாந்தோட்டை, உஸ்ஸன்கொட சுற்றுலா முகாமுக்கு சென்ற இந்தியப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மணல்வெளியில் விழுந்து கிடந்த குறித்த நபர் அம்புலன்ஸ் மூலம் அம்பலாந்தோட்டை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், அங்கு அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவரின் சடலம் அம்பலாந்தோட்டை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த சுற்றுலா முகாம் கடந்த 09ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், சுமார் 70 நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் இதில் பங்கெடுத்துள்ளனர். (இ-7)

# சப்ரகமுவ பல்கலை.வைத்தியபீடம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இரத்தினபுரி வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாக தரமுயர்த்தும் நிகழ்வும் அன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினத்தில் வைத்திய பீட மாணவர்கள் 75 பேர் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

மருத்துவக் கற்கை நெறியைத் தொடரும் மாணவர்களுக்கு சகல வசதிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். (இ-7)

# அம்பாறையில் அடைமழை! மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த இரண்டு தினங்களாக பெய்த அடைமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ள நிலையில் இரவு வேளைகளில் இம்மாவட்டத்தில் பெய்த பலத்த மழையின் காரணமாக பல்வேறு பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன.





மழையுடன் கூடிய காலநிலை காரணமாக தாழ்நிலப் பிரதேசங்கள் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன. வீதிகள் பலவற்றில் நீர் நிரம்பிக் காணப்படுவதால் மக்களின் போக்குவரத்துகளுக்கும் பாரியளவிலான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பொத்துவில், திருக்கோவில், தம்பட்டை, தம்பிலுவில், பாலமுனை, ஒலுவில், நிந்தவூர், சாய்ந்தமருது, கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை, சம்மாந்துறை, இறக்காமம் போன்ற பகுதிகளில் உள்ள தாழ்நிலப் பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதேவேளை இம்மாவட்டத்தில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக தாழ் நில விவசாயச் செய்கைகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதுடன், கடற்றொழிலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கடற் பகுதியில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்து வருவதால் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் உள்ள தாழ்நிலக் குடியிருப்புக்கள், தாழ் வீதிகள் மற்றும் வடிகான்கள் போன்றவற்றில் நிறைந்துள்ள நீரை அப்புறப்படுத்தும் முயற்சிகளில் உள்ளூராட்சி மன்றத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலும், விவசாயச் செய்கைகளிலும் நிறைந்துள்ள நீர் முகத்துவாரங்களினூடாக அப்புறப்படுத்தும் முயற்சிகளில் துறைசார் உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

# விமல் வீரவன்சவின் இழப்பீட்டுத் தொகை மக்கள் பணிக்காகவே



(கொழும்பு)

நீதிமன்றத் தீர்ப்புக்கமைய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவால் தரப்படும் ஒருகோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையை, மக்கள் பணிக்காகச் செலவிடப்போவதாக ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவிததார்.

ஜே.வி.பியின் புலமைச் சொத்துக்களைக் கையாடி புத்தகமொன்றை வெளியிட்ட குற்றத்திற்காக வர்த்தக மேல் நீதிமன்றம் விமல் வீரவன்ச, ஒரு கோடி ரூபாயை இழப்பீடாக வழங்க வேண்டுமென அண்மையில் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இத் தீர்ப்பு குறித்து கருத்து வெளியிட்ட ரில்வின் சில்வா, இந்தப் பணத்திலிருந்து ஒரு சதத்தைக் கூட தான் எடுக்கப் போவதில்லையெனவும் முழுப் பணத்தை மக்கள் பணிக்காகவே கட்சித்தலைமைத்துவத்திடம் ஒப்படைக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

ஜே.வி.பியைப் பொறுத்தளவில் பாராளுமன்ற உறுப்பினர்களோ, மாகாணசபை, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களோ எவரும் சம்பளமோ, கொடுப்பனவுகளோ பெற்றுக்கொள்வதில்லை.

கட்சியின் நிலைப்பாடு இது. கிடைக்கும் பணம் கட்சித்தலைமையகத்தின் மூலம் மக்கள் பணிக்காகவே பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மல்வானையில் 3 கடைகள் தீக்கிரை



(மல்வானை)

மல்வானை ரக்ஷபானவில் நேற்று அதிகாலை 1.20 மணியளவில் மூன்று கடைகள் எரிந்துள்ளன. கடை ஒன்றுக்கு பின்னால் வைக்கப்பட்ட தீ கடைக்கு பரவியதனால், கடைகள் தீப்பிடித்துள்ளதாக தெரிய வருகிறது.

தீப்பிடித்த கடைகளில் ஒன்று பிரதேச சபை உறுப்பினர் அன்வரின் சகோதரர் முஹம்மத் அலி என்பவருடையது எனவும், மூன்று கடைகளில் ஒன்று பொருட்கள் களஞ்சியப்படுத்தி வைக்கும் அறை எனவும் தெரியவருகிறது. (இ-7)

# சிவனொளிபாதமலைக்கு போதைப்பொருளுடன் சென்ற 15 இளைஞர்கள் கைதாகினர்

(ஹற்றன்)

சிவனொளிபாதமலைக்கு போதைப்பொருள்கொண்டு சென்ற 15 இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் ஹற்றன் குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிவனொளிபாத மலைக்கு சென்ற இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும், ஹற்றன், வட்டலை, தியகல பகுதியில் மேற்கொள்ளபட்ட விசேட சுற்றிவளைப்பின் போது கேரளக் கஞ்சா, ஹெரோயின் போன்ற போதைப் பொருட்களை வைத்திருந்தமை தொடர்பிலேயே குறித்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு, மாத்தறை, காலி பகுதிகளை சேர்ந்த 20 தொடக்கம் 25 வயதுடைய இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)



தமிழர் திருநாளான தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் பொங்கல் வியாபாரம் களைகட்டியுள்ளது. வவுனியா நகரில் பொங்கல் பானைகள், கரும்பு, பழங்கள், பட்டாசு ஆகியவற்றின் விற்பனை களைகட்டியுள்ளது. நேற்றைய தினம் நகரில் அதிக சனநெரிசலும் காணப்பட்டது. (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

# மன்னாகண்டலில் வெள்ளத்தால் வீடுகளை இழந்த மக்களுக்கு வீட்டுத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டல்





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மழைவெள்ளத்தினால் வீடுகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டத்தினூடாக வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினரால் வடக்கில் 3ஆயிரத்து 600 வீடுகள் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் அமைத்துக்கொடுக்கப்படவுள்ள அதற்கான தொடக்க வேலைகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட மன்னாகண்டல்.கிராமத்தில் வீடுகள் அழிவடைந்த மக்களுக்கான வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் முதற்கட்டமாக முற்றாக வீடுகளை இழந்த 40 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் காசோலை வழங்கும் நிகழ்வும் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் லக்விஜய சாகர பாலசூரிய மற்றும் நாடளுமன்ற உறுப்பினர்களாக சி.சிவமோகன் ,சாந்தி சிறீஸ் கந்தராசா மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட உதவிப்பணிப்பாளர் கமகே மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மக்களுக்கான காசோலையை வழங்கி வைத்துள்ளதுடன் வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்துள்ளார்கள். (2-281)




# ஓமந்தையில் 247 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

## தேசிய வீடமைப்பு அதிகார சபை தலைவர் தெரிவிப்பு





(குருமன்காடு)

வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் கலாசார துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் 52 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு வவுனியாவில் நேற்று முன்தினம் மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா, ஓமந்தை, வேப்பங்குளத்தில் நடைபெற்ற நிகழ்வானது வன்னி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரச் செயலாளர் கே.கே.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் கெ.கலன்சூரிய கலந்து கொண்டு மரக்கன்றுகளை வழங்கி வைத்தார்.

வவுனியா மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரச் செயலாளர் எஸ்.சுரேஸ் குமாரின் ஏற்பாட்டில் ஓமந்தை வேப்பங்குளம் சிறி சித்திவிநாயகர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாட்டைத் தொடர்ந்து விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது.

நிகழ்வில்கலந்து கொண்டு உரையாற்றிய தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர்கெ.கலன்சூரிய, இன, மத, கட்சி பேதமின்றி எந்த மக்களுக்கு வீடுகள் இல்லையோ அந்த மக்களுக்கு வீடுகள் வழங்கப்படும்.

அத்துடன் ஓமந்தை பிரதேசத்தில் வீடில்லாத 247 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். வடக்கு மாகாணத்திற்கு மட்டும் இலவச வீட்டுத்திட்டங்களை வழங்க வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்தார்.

நிகழ்வில் ஐக்கிய தேசியக்கட்சியின் வவுனியா மாவட்ட பிரதான அமைப்பாளர் பி.ஏ.கருணாதாச, வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் உறுப்பினர் ஆர்.ஏ.அமலியா, வவுனியா நகரசபை உறுப்பினர்ஆர்ஜானகமற்றும்பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# நாமல் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் பாடசாலைக் கட்டடங்களுக்கு வர்ணப்பூச்சு

## சிறார்களுடன் விளையாட்டு, உளரீதியிலான செயற்றிட்டங்கள் முன்வைப்பு





(பரந்தன்)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் கிளிநொச்சி பன்னாங்கண்டி பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டனர்.

கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குறித்த பகுதிக்கு விஜயம் நேற்றைய தினம் மேற்கொண்ட குழுவினர், பன்னாங்கண்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை கட்டடங்களுக்கு புதிய வர்ண பூச்சுக்களை மேற்கொண்டனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்டோர் பாடசாலை கட்டடத்திற்கான வர்ணம் பூசுவதில் ஈடுபட்டனர்.

இதேவேளை அங்கு வருகை தந்த நாமல் ராஜபக்ஷவை சிறார்கள் மகிழ்வுடன் வரவேற்றனர். வெள்ளம், யுத்தம் ஆகியவை காரணமாக பாதிக்கப்பட்ட சிறார்களுடன் விளையாட்டு, சிநேகபூர்வ செயற்பாடுகள் ஊடாக உள ரீதியான செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், மற்றும் மாணவர்களிற்கு உதவிகளும் நேற்று பிற்பகல் 3 மணியளவில் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-312)

# முறிப்பில் 26 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது





(பரந்தன்)

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீடமைப்பு திட்டத்தின் கீழ் முறிப்பு பகுதியில் 26 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு நேற்று நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள முறிப்பு பிரதேசத்தில் இடம் பெற்றது.

தேசிய வீடமைப்புக்கான அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த பகுதியில் 11 வீடுகள் மற்றும் 15 வீடுகளை கொண்ட இரு மாதிரி வீட்டுத் திட்டங்களை அமைக்கும் வகையில் குறித்த வீடுகளுக்கான அடிக்கல் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலக திட்டப்பணிப்பாளர், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர், கிராம மட்ட உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

### அமைச்சர் சஜித் பிறந்த தினத்தில்

# 40 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டல் மன்னாரில் நேற்று நடைபெற்றது





(மன்னார்)

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் பிறந்தநாளான நேற்று முன்தினம் மன்னார் கட்டுக்காரன் குடியிருப்பு கிராமத்தில் 25 வீடுகளுக்கும் நானாட்டான் பிரதேசத்துக்குட்பட்ட அருவிமோட்டை கிராமத்தில் 15 வீடுகளுக்கும் அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த வீடுகள் ஒவ்வொன்றும் 7 1/2 இலட்சம் ரூபா பெறுமதியானவை என்று தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அமைச்சருக்காக மடுக்கோவிலில் விசேட ஆராதனை நடைபெற்றதுடன் வீடமைப்பு அதிகார சபை மன்னார் அலுவலகத்தில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட 10 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் கட்டுக்காரன் குடியிருப்பு கிராமத்தின் வீடுகளுக்கான அடிக்கல்லை வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் மற்றும் நிர்வாகிகளும் அருவிமோட்டை கிராமத்தில் அமைக்கப்படும் வீடுகளுக்கான அடிக்கல்லை நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிஸ்கந்தகுமார்,நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் ஜொனி.வீடமைப்பு அதிகாரசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சந்தான், அருவிமோட்டை கிராமசேவையாளர் அந்தோணிப்பிள்ளை மற்றும் மாவட்ட நிர்வாகிகளும் நாட்டிவைத்தனர். அதன் போது நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் ஜொனியினால் பயனாளிகளுக்கு மாமரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. (2-285)




## விநாயகருக்கு அபிஷேக பூசை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு செம்மலை கிழக்கு அருள்மிகு ஸ்ரீ நீராவிப்பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவத்தின் இன்றைய தினம் விநாயகருக்கு விசேட அபிஷேக பூசைகள் முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு விசேட பூசை இடம்பெறும். (2)

# கதிர்ஒளி கலைக்கூடம் கலைக்குழுவினரால் 16 கிராமங்களில் வீதி நாடகங்கள்



(முல்லைத்தீவு)

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், இயலாமையுடைய பெண்கள் மற்றும் பாதிப்புக்குள்ளாகக் கூடிய நிலையிலுள்ள பெண்கள் போன்ற அனைவரையும் சிவில் சமூக அமைப்புக்களில் அங்கத்துவம் பெறலின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தும் வீதிநாடகமானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் வழிகாட்டலுடன் தெரிவுசெய்யப்பட்ட 16 கிராமங்களில் கதிர்ஒளி கலைக்கூடம் எனும் கலைக் குழுவினரால் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வானது அண்மையில் மடு பிரதேச செயலகப்பிரிவிலுள்ள விளாத்திக்குளம் கிராமத்தில் இடம் பெற்றது.

இதன் தொடர்ச்சியாக மடுபிரதேச செயலகப்பிரிவிலுள்ள தட்சணாமருதமடு கிராமத்தில் இடம்பெற்றது.

மேலும் இந்த வீதிநாடகங்கள் மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்குப் பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட அடம்பன், இலுப்பக்கடவை ஆகிய பிரதேசங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட சாந்தபுரம், ஸ்கந்தபுரம் ஆகிய கிராமங்களிலும் பூநகரி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட நாச்சிக்குடா, பள்ளிக்குடா ஆகிய கிராமங்களிலும் ஏற்கனவே இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் மாதங்களில் யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## நிழற்பிரதி இயந்திரங்கள் கையளிப்பு



(முல்லைத்தீவு)

முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனினால் இரு பாடசாலைகளுக்கு நிழற் பிரதி இயந்திரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியொதுக்கீட்டிலிருந்து இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியில் ரவிகரனினால் பாடசாலைகளுக்கு இவ்வுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளான புத்துவெட்டுவான் அ.த.க பாடசாலை, ஐயன்கன்குளம் அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கே இவ்வாறு நிழற்பிரதி இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. (2)

## உதவித்திட்டங்கள் தொடர்பில் அரச அதிகாரிகள் வெளிப்படைத்தன்மையுடன் செயலாற்ற வேண்டும்

### முன்னாள் எம்.பி.சந்திரகுமார் வலியுறுத்து

(கிளிநொச்சி)

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித் திட்டங்களில் அரச அதிகாரிகள் வெளிப்படைத் தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டுமென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கடந்த மாதம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு அன்றிலிருந்து இன்றுவரை அரசு, தனியார், சமூக அமைப்புக்களிடமிருந்து பல்வேறுபட்ட உதவிகள் கிடைத்து வருகின்றன.

இவ் உதவிகள் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டன அல்லது மொத்தமாக எவ்வளவு உதவிகள் கிடைக்கப்பெற்றன என இன்றுவரை மாவட்டச் செயலகத்தாலோ பிரதேச செயலகத்தாலோ பகிரங்கப்படுத்தப்படவில்லையெனத் தெரிவித்தார்.

மேலும் இவ்வாறம் மகாவலி அதிகாரசபையினால் ஒன்பது லொறிகளில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென வழங்குவதற்காக உதவிப்பொருட்கள் மாவட்டச்செயலகத்திடம்கையளிக்கப்பட்ட நிலையில் எவ்வாறான உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்ற விடயம் உரிய அதிகாரிகளால் இன்றும் வெளிப்படுத்தப்படவில்லையென அவர் மேலும் தெரிவித்தார். (2-10)

## உலகத்தமிழர் மாணவர் ஒன்றியத்தால் மாணவர்களுக்கு 20 இலட்சம் ரூபா கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(கிளிநொச்சி)

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உலகத்தமிழர் மாணவர் ஒன்றியத்தால் 20 இலட்சம் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறித்த ஒன்றியத்தினர் பல்வேறு அமைப்புக்கள், கழகங்கள் ஊடாக உலருணவுப்பொதிகளைப் பெற்று வழங்கியிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி,முல்லைத்தீவு மற்றும் வடமராட்சி கிழக்கு பகுதிகளிலுள்ள பதினைந்துக்கும் மேற்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு 20 இலட்சம் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வெவ்வேறு தினங்களில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (இ-9)

## வெள்ளத்தால் கால்நடைகளை இழந்துள்ள ஐந்து குடும்பங்களுக்கு மாடுகள் வழங்கல்






(கிளிநொச்சி)

வெள்ள அனர்த்தத்தினால் மாடுகளை இழந்த கிளிநொச்சி வட்டக்கச்சி சிவிச் சென்ரர் பகுதியைச் சேர்ந்த ஐந்து குடும்பங்களுக்கு 4 இலட்சம் ரூபா பெறுமதியான மாடுகள் வழங்கும் நிகழ்வு தமிழ் மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்கு ஜேர்மனி இஸ்ருட்ஹாட் நகரிலுள்ள அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் இரு மாடுகளையும் தமிழர் கலாசார வட்டம் மூன்று மாடுகளையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ் மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் கஜேந்திரன் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள்கலந்துகொண்டிருந்தனர். (2-10)

## வவுனியா கல்வியியற்கல்லூரியில் அமைதி கல்வித்திட்டப் பயிற்சி

(குருமன்காடு)

அமைதி கல்வித்திட்டம் தொடர்பான ஆரம்ப நிகழ்வு வவுனியா பூந்தோட்டம் தேசிய கல்வியியற்கல்லூரியில் பீடாதிபதி க.சுவர்ணராஜா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தேசிய கல்வியியற்கல்லூரியில் ஆசிரியர்களாக கல்விபயிலும் மாணவர்களுக்கு அமைதி கல்வித்திட்டம் தொடர்பான பத்து நாட்கள் பயிற்சி வழங்கப்படவுள்ளன.

அமைதி, மதிப்பை உணர்தல், உள்ளேயிருக்கும் வலிமை, தன்னை உணர்தல், தெளிவு, புரிந்துகொள்ளல், தன்மானம், தேர்ந்தெடுத்தல், நம்பிக்கை, திருப்தி போன்ற ஆற்றல்மிகு பாடத்திட்டங்கள் ஆசிரிய மாணவர்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளன.

நிகழ்வில் அமைதி கல்வித்திட்டத்தின் இணைப்பாளர் பி.விமலநாதசர்மா, உளவளத்துணை ஆலோசகர் செல்வி. குகானந்தராஜா கீர்த்திகா மற்றும் கல்லூரியின் ஆசிரிய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## மடு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் தெரிவு

(மன்னார்)

மடு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பத்தொன்பது இளைஞர் கழகங்களை ஒன்றிணைத்து பிரதேச இளைஞர் சம்மேளனம் ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

2019 ஆம் ஆண்டுக்கான இளைஞர் கழகங்களைத் தெரிவு செய்யும் பணிகள் தேசிய இளைஞர்சேவை மன்றத்தினால் நாடளாவிய ரீதியில் இடம் பெற்று வருகின்றது.

அவ் தெரிவின் ஒரு பகுதியாக மன்னார் மாவட்டத்தின் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசமான மடு பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட 19 இளைஞர் கழகங்களையும் உள்ளடக்கி பிரதேச சம்மேளனம் தெரிவானது.

மடு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ராகவன் தலைமையில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில் 2019 ஆம் ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவும் வருடத்திற்கான திட்டமிடல் நிகழ்வும் இடம் பெற்றது. (2-285)

# பாரதம்

## சேலத்தில் 4 இடங்களில் ஜல்லிக்கட்டுக்கு அனுமதி



(சேலம்)

பொங்கல் தினத்தை முன்னிட்டு, சேலத்தில் 4 இடங்களில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளதாக அம் மாவட்ட ஆட்சியர் ரோகிணி தெரிவித்துள்ளார்.

ஜல்லிக்கட்டு விழா தொடர்பாக நேற்று முன் தினம் சனிக்கிழமை நடை பெற்ற ஆலோசனை கூட் டத்திலேயே இவ்விடயம் தீர்மானிக்கப்பட்டதாக ஆட்சியர் ரோகிணி ஊட கங்களுக்கு தெரிவித்துள் ளார். அவர் மேலும் கூறு கையில்,

"சேலத்தில் 4 இடங் களில் ஜல்லிக்கட்டு போட்டி நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 18 ஆம் திகதி ஆத்தூர் கூல மேட்டிலும் 20 ஆம் திகதி கொங்கவல்லிலும், 21ஆம் திகதி நாகியம்பப்பட்டியிலும் 27 ஆம் திகதி தம்மம் பட்டியிலும் ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்த தீர் மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜல்லிக்கட்டு போட்டியின் போது நீதி மன்ற விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்" என ஆட்சியர் ரோகிணி அறி வுறுத்தல் வழங்கியுள் ளார். (7-8)

## பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் ஆப்கானில் ஆறு பேர் உயிரிழப்பு

(ஹீரத்)

ஆப்கானிஸ்தானில் பொலிஸ் நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மற் றும் பொலிஸார் நடத்திய பதிலடியில் 6 பேர் கொல்லப் பட்டனர்.

ஆப்கானிஸ்தானின் ஹீரத் மாகாணம், புலே ரங்கினா பகுதியில் உள்ள பொலிஸ் நிலைய வளாகத் தினுள் நேற்றுமுன்தினம் இரவு 3 பயங்கரவாதிகள் நுழைந்துள்ளனர். காரில் வந்து இறங்கிய அவர்கள், பொலிஸ்நிலைய வளாகத்தில் பாதுகாப்புப் பணியில் இருந்த பொலிஸார் மற்றும் புகார் கொடுக்க வந்த பொதுமக்களை நோக்கி துப்பாக்கியால் சுட் டனர். இதனால்பயந்து போன மக்கள் சிதறி ஓடினர்.

பயங்கரவாதிகளை நோக்கி சில பொலிஸார் துப்பாக்கியால் சுட்டு பதில் தாக்குதல் நடத்தினர். இதன் காரணமாக பொலிஸ்நிலைய வளாகம் போர்க்களமாக காட்சியளித்தது.

இந்த சம்பவத்தில் 3 பொலிஸார், பொதுமக்கள் 2 பேர் மற்றும் ஒரு பயங்கர வாதி என 6 பேர் உயிரி ழந்தனர். 3 பொலி ஸார் காயமடைந்தனர்.

பொலிஸ் நிலையத்திற் குள் நுழைய முடியாமல் பின்வாங்கிய 2 பயங்கர வாதிகள், அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

அவர்கள் விட்டுச் சென்ற காரில் வெடி குண்டு இருந்தது.

அதனை சிறப்பு காவல் படையினர் செயலிழக்கச் செய்தனர்.

இந்த தாக்குதலுக்கு தலிபான் இயக்கம் பொறுப் பேற்றுள்ளது. (7-8)

## சட்டவிரோதக் குடியேற்றத்தால் பிரிக்கப்பட்ட குழந்தை ஒப்படைப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் எல்லை வழியாகச் சட்ட விரோதமாக குடியேறும் அகதிகளைக் கட்டுப்படு த்தும் வகையில் ஜனாதிபதி ட்ரம்ப் நடவடிக்கை எடுத்து வருகிறார். அந்த வகையில் கடந்த ஆண்டு அவர் பிறப் பித்த உத்தரவின்படி, மெக் சிக்கோ எல்லை வழியாக வரும் அகதிகளைச் சட்ட விரோத குடியேற்றத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து, அவர்களின் குழந்தை களை அவர்களிடம் இரு ந்து பிரித்து டெக்சாசில் உள்ள டோர்னில்லோ காப் பகத்தில் தங்கவைத்தனர். கிட்டத்தட்ட 6,200 குழந் தைகள் காப்பகத்தில் வைக் கப்பட்டனர்.


அமெரிக்க சட்டப்படி சட்டவிரோத குடியேற்றத் தில் குழந்தைகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதால், குழந்தைகள் பெற்றோர்களிடம் இருந்து பிரிக்கப்பட்டு காப்பகத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

ஆனால் இந்த நடவ டிக்கைக்கு கடும் எதிர்ப்பு எழுந்ததையடுத்து, சட்டவி ரோதமாக நுழையும் அகதி களிடம் இருந்து அவர் களின் குழந்தைகளை பிரி த்து காப்பகத்தில் தங்க வைக்கும் திட்டத்தை ஜனா திபதி டெனால்ட் ட்ரம்ப் ரத்து செய்தார்.

அதன்பின்னர் காப்பகத் தில் உள்ள குழந்தைகளை அவர்களின் பெற்றோர்க ளிடம் ஒப்படைக்கும் பணி தொடங்கியது. படிப்படியாக குழந்தைகள் அவர்களின் பெற்றோர்கள் இருக்கும் முகாம்களில் ஒப்படைக் கப்பட்டனர்.

இந்தப் பணி தற்போது முடிவடைந்துள்ளது. எனி னும் கடைசி குழந்தையும் டோர்னில்லோ காப்பகத்தில் இருந்து அனுப்பி வைக்கப் பட்டுவிட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் வில்ஹர்ட் உறுதி செய்துள்ளார். (7-8)

## இறக்கும் நிலையில் சூரியன்



இறக்கும் நிலையில் பூமிக்குரிய சூரியன் படிகமாக மாறிவருவதாக விஞ்ஞானிகள் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளனர்.

அண்டத்திலுள்ள சூரியன்களுக்கும் ஆயுட்காலம் உண்டு என ஏற்கனவே விஞ்ஞானிகள் தகவல் வெளியிட் டுள்ளனர். இந்நிலையில் பூமிக்கு சொந்தமான சூரியனும் படிப்படியாக இறப்படைந்து வருவதாகவும், இதனால் திட பளிங்கு நிலைக்கு மாறிவருவதாகவும் விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஐரோப்பிய விண்வெளி நிறுவனமானது "கையா" செயற்கைக்கோளின் உதவியுடன் இதற்கான ஆதாரங் களை திரட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த செயற்கைக்கோள் மூலம் பெறப்பட்ட தரவு களைக் கொண்டு கனடா மற்றும் அமெரிக்காவை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழு மேற்கொண்ட ஆய்விலேயே இந்த அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

மிகப் பெரிய வெள்ளை குள்ள நட்சத்திரங்கள் தங்கள் முடிவுகாலம் வரும் போது திடமான உலோக படிகங் களாக மாற்றமடைந்து வருவதாக கூறப்படுகின்றது. இதற்கமைய சூரியனும் 10 பில்லியன் ஆண்டுகளில் படிக வெள்ளை குள்ளகிரகமாகும் என்கின்றனர் விஞ்ஞா னிகள். (7-8)

## நிலக்கரிச்சுரங்க... 21 தொழிலாளர்...



(பீஜிங்)

சீனாவின் ஷான்ஜி மாகாணத்தில் அமைந் துள்ள நிலக்கரி சுரங்கம் நேற்று முன்தினம் இடிந்து விழுந்த விபத்தில் 21 தொழி லாளர்கள் உயிரிழந்தனர்.

சீனாவில் ஷான்ஜி மாகாணம், ஷென்மு நகரில் உள்ள லிஜியாகவ் என்ற நிலக்கரி சுரங்கத்தில் நேற்று முன்தினம் 87 தொழிலாளர்கள் பணி யாற்றி கொண்டிருந்த போது சுரங் கத்தின் மேற்பகுதி திடீரென சரிந்து தொழிலாளர்கள் மீது விழுந்தது.

## பெற்றோல் லொறி ... 25 பேர் உடல்சித...

(நைஜர்)

நைஜீரியா நாட்டின் தெற்கு பகுதியில் பெற்றோல் லொறி கவிழ்ந்து, வெடித்து சிதறிய விபத்தில் 25 பேர் பரிதாபமாக உயிரிழந்த னர்.



நைஜீரியா நாட்டின் தென்பகுதியில் உள்ள கிராஸ் ரிவர் மாநிலத்தின் கலாபர்-ஓடும்பானி நெடுஞ் சாலை வழியாக பெற்றோல் ஏற்றிய ஒரு டேங்கர் லொறி நேற்று முன்தினம் சென்று கொண்டிருந்தது.

வேகமாக சென்ற லொறி ஒரு குறுகிய வளைவில் திரும்பியபோது சாரதியின் கட்டுப் பாட்டை இழந்து வீதியில் இருந்து விலகிச் சென்று பக்கவாட்டில் கவிழ்

## சிரியாவில் இருந்து அமெரிக்கப் படைகள் வாபஸ் ஆரம்பம்

(பெய்ரூட்)

சிரியாவில் இருந்து அமெரிக்க படைகள் வாபஸ் பெறத் தொடங்கி விட்டதாக அமெரிக்க கூட்டுபடைக ளின் செய்தி தொடர்பாளர் சீன் ரியான் தெரிவித் தார்.

சிரியாவில் 2011 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் படைக ளுக்கும், கிளர்ச்சியாளர் களுக்கும் இடையே உள் நாட்டு போர் நடந்து வருகி றது. இதனை பயன்படுத்தி ஐ.எஸ். பயங்கரவாதிகள் அங்கு காலூன்றி ஆதிக்கம் செலுத்த தொடங்கினர். அவர்கள் நாட்டின் பெரும் பாலான நகரங்களை தங் கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அதைத் தொடர்ந்து ஐ.எஸ். பயங்கரவாதிகளை ஒழித்துக்கட்டுவதற்கு அமெ ரிக்க படைகள் சிரியாவு க்கு அனுப்பி வைக்கப்பட் டன.

2015 ஆம் ஆண்டு முதல் முறையாக முன் னாள் ஜனாதிபதி ஒபாமா உத்தரவின் பேரில் அமெரிக்க வீரர்கள் சிரியா சென்றனர்.

அவர்கள் அங்கு ஐ.எஸ். பயங்கரவாதிகளை குறி வைத்து வான்தாக்குதல்கள் நடத்தி, பல நகரங்களை அவர்களிடம் இருந்து மீட் டனர்.

அமெரிக்க படைகள் வருகைக்கு பிறகு அங்கு ஐ.எஸ். பயங்கரவாதிகள் பெருத்த பின்னடைவை சந்தித்தனர்.

இந்தநிலையில் யாரும் எதிர்பாராத வகையில், சிரி யாவில் ஐ.எஸ். பயங்கர வாதிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டதாகவும், எனவே அமெரிக்கப் படைகள் வாபஸ் பெறப்படுவதாகவும் அமெ ரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், கடந்த மாத இறுதியில் அதிரடியாக அறிவித்தார். இது உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் அதிர்வலைகளை ஏற் டுத்தின.

அமெரிக்கா தனது இராணு வத்தை திரும்ப பெற்றால், அது ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் நடவடிக்கையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், ஐ.எஸ். அமைப்பு மீண்டும் தலை தூக்க வழிவகுக்கும் என்பதால் ட்ரம்பின் சொந்த கட்சியிலேயே இதற்கு எதிர்ப்புகள் கிளம்பின.

இந்த விவகாரத்தில் ட்ரம்ப் உடன் கருத்து வேறுபாடு ஏற்பட் டதை தொடர்ந்து இராணுவ அமைச் சர் ஜிம் மேட்டிஸ் பதவி விலகினார். மேலும் பிரான்ஸ் உள்ளிட்ட நட்பு நாடுகள் ட்ரம்ப் தன்னுடைய முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என வலியுறுத்தின.

அதனை தொடர்ந்து, சிரியாவில் இருந்து அமெரிக்க படைகளை உடனடியாக திரும்பப் பெறப்போவ தில்லை என்று ட்ரம்ப் அண்மையில் அறிவித்தார். அதே போல் சிரியாவில்

# கத்தில் விபத்து
# கள் உயிரிழப்பு



இதனால் தொழிலாளர்கள் வெளியேற முடியாமல் சிக்கிக் கொண்டனர். இதையடுத்து மீட்புக்குழுவினர் உடனடியாக மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் 21 பேர் பலியான நிலையில் 66 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். இடிபாடுகளில் சிக்கிய 2 பேரை மீட்கும் பணி தொடர்ந்து இடம் பெற்று வருகிறது. இந் நிலையில் குறித்த விபத்திற்கான காரணம் தொடர்பில் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (7-8)

# போதை மறுவாழ்வு மையத்தில் தீ 18 பேர் உடல் கருகி உயிரிழப்பு

## 12 பேர் படுகாயம்

(குயிட்டோ)

ஈக்வடோர் நாட்டில் உள்ள போதை மறுவாழ்வு மையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 18 பேர் உடல் கருகி பரிதாபமாக பலியாகினர்.

ஈக்வடோர் நாட்டில் உள்ள கடற்கரை நகரம் குவாக்வில். இங்குள்ள போதை மறுவாழ்வு மையத்தில் நேற்றுமுன்தினம் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.



தகவலறிந்து அங்கு 60 க்கு மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்றனர். அவர்கள் போராடி தீயை அணைத்தனர்.

இந்த தீ விபத்தில் சிக்கி 18 பேர் உடல் கருகி பலியாகினர். மேலும் 12 பேர் படுகாயம் அடைந்துள்ளதாக முதல் கட்ட தகவல் வெளியாகியுள்ளது. தீ விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (7-8)

# அமெரிக்காவில் பனிப்புயல் 5 பேர் பலி; 48 பேர் காயம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவை அச்சுறுத்தி வரும் பனிப்புயல் காரணமாக ஏற்பட்ட விபத்துக்களில் இதுவரை ஐவர் உயிரிழந்துள்ளதுடன், 48 பேர் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்க ராகிஸ் மற்றும் சமவெளிகளை கடந்த வெள்ளிக்கிழமை முதல் 1,609 கி.மீ வேகத்தில் பனிப்புயல் தாக்கியது.

குறிப்பாக மிசோரி, கன்சாஸ் மற்றும் மத்திய அமெரிக்காவிலுள்ள பல மாநிலங்களும் இந்த பனிப்புயலினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

வீதிகளை சுமார் 6 முதல் 8 மீற்றர் வரை ஆக்கிரமித்துள்ள பனிக்கட்டிகள் காரணமாக போக்குவரத்து மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், மிசோரி, கன்சாஸ் மற்றும் மத்திய அமெரிக்கா உள்ளிட்ட சில பகுதிகளில் மின் தடை ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பனிப்புயல் காரணமாக கடந்த சில தினங்களில் மாத்திரம் 700 இற்கும் மேற்பட்ட விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகவும், இதன்போது ஐவர் உயிரிழந்துள்ளதுடன், 48 பேர் காயமடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

கடந்த 100 ஆண்டுகளுக்கு பின்னர் அமெரிக்காவை தாக்கிய மிக மோசமான பனிப்புயலாக இது கருதப்படுவதாகவும் அந் நாட்டு ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (7-8)

# வெடித்து விபத்து
# தறி உயிரிழப்பு



ந்தது. கவிழ்ந்த லொறியில் இருந்து பெற்றோல் வழிந்தோடுவதை கண்ட அப்பகுதி மக்கள் பாத்திரங்களுடன் ஓடி சென்று பெற்றோலை சேகரித்துள்னர்.

அப்போது எதிர்பாராத விதமாக அந்த லொறி திடீரென்று தீப்பிழம்பாக வெடித்து சிதறியது. இந்த கோர விபத்தில் 25 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். கடுமையான தீக்காயங்களுடன் சிகிச்சைபெற்று வருபவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் இவ்விபத்தில் பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. (7-8)

உள்ள குர்து இன மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் வரை அமெரிக்க படைகள் சிரியாவில் இருக்கும் என அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜான் போல்டனும் தெரிவித்தார்.

ஆனால் சிரியாவில் இருந்து அமெரிக்க படைகள் வாபஸ் பெற தொடங்கி விட்டதாக அமெரிக்க கூட்டுப்படைகளின் செய்தி தொடர்பாளர் சீன் ரியான் நேற்று தெரிவித் தார்.

இது குறித்து அவர் கூறுகையில், "சிரியாவில் இருந்து அமெரிக்க வீரர்கள் தங்களுடைய நாட்டுக்கு திரும்ப தொடங்கி இருக்கிறார்கள். பாதுகாப்பு நடவடிக்கைகளை தவிர வேறு எந்த விடயங்கள் குறித்தும் நாங்கள் ஆலோசிக்கவில்லை" என தெரிவித்தார்.

அதே சமயம் அமெரிக்க படை வீரர்கள் எந்தெந்த இடங்களில் இருந்து எப்போது புறப்படுகிறார்கள் என்பது குறித்து அவர் விரிவாக தெரிவிக்கவில்லை.

இதற்கிடையில் இங்கிலாந்தை தலைமையிடமாக கொண்டு இயங்கி வரும் சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஹசாகே மாகாணத்தின் மிலான் இராணுவத்தளத்தில் இருந்து அமெரிக்க வீரர்கள் வெளியேறி வருகிறார்கள்.

ட்ரம்பின் அறிவிப்புக்கு பிறகு அமெரிக்க படைகள் சிரியாவில் இருந்து வெளியேறுவது இதுவே முதல் முறை" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-8)

# மெக்சிக்கோ எல்லையில் தடுப்புச்சுவர் நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்கும் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

மெக்சிக்கோ எல்லையில் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு தேவையான நிதி ஒப்புதலை நாடாளுமன்றம் அளிக்கும் என்று ஜனாதிபதி ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மெக்சிக்கோ நாட்டின் வழியாக அமெரிக்காவுக்குள் அகதிகள் சட்டவிரோதமாக நுழைவதை தடுப்பதற்காக 5.7 பில்லியன் டொலர்கள் (ரூ.39 ஆயிரம் கோடி) செலவில் தடுப்புச் சுவர் கட்ட ஜனாதிபதி ட்ரம்ப் மிகவும் ஆர்வமாக உள்ளார்.

ஆனால் இதற்கான நிதியை நாடாளுமன்றம் ஒதுக்கவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால் இதற்கு எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சி கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இதைத்தொடர்ந்து ஜனாதிபதி ட்ரம்ப், அரசின் பல்வேறு துறை செலவீனங்களுக்கு நிதி ஒதுக்காமல் இழுத்தடித்து வருகிறார். இதனால் அமெரிக்காவில் கடந்த 3 வாரங்களுக்கும் மேலாக அரசுத் துறைகள் முடங்கியுள்ளன. 22 நாட்களாக அரசுத்துறை ஊழியர்கள் எந்த சம்பளமும் பெறாமல் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

இப்படியொரு நிலைமை அமெரிக்க வரலாற்றில் எப்போதும் ஏற்பட்டதில்லை என்று கூறப்படுகிறது. 1995-96ஆம் ஆண்டு பில் கிளின்டன் ஜனாதிபதியாக இருந்த போது கூட அதிக பட்சமாக 21 நாட்கள்தான் அமெரிக்க அரசுத்துறைகள் முடங்கிக் கிடந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், தடுப்புச் சுவர் கட்டுவதற்கான நிதியை நாடாளுமன்றம் ஒதுக்கீடு செய்யவில்லை என்றால் நாட்டில் அவசர நிலையை அறிவிக்க தயங்கமாட்டேன் என்று அண்மையில் அறிவித்த ட்ரம்ப் தற்போது தனது குரலை சற்று தளர்த்திக் கொண்டு உள்ளார்.



இதுபற்றி அவர் தெரிவிக்கையில், "மெக்சிக்கோ எல்லையில் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு அமெரிக்க நாடாளுமன்றம் நிச்சயமாக ஒப்புதல் அளிக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே நாட்டில் அவசர நிலையை உடனடியாக அறிவித்து விட மாட்டேன். அவசர நிலையை அறிவிக்கும் உரிமை எனக்கு இருந்தாலும் கூட தடுப்புச் சுவருக்கான போதிய நிதியை நாடாளுமன்றம் முறைப்படி ஒதுக்கீடு செய் துவிடும் என்ற நம்பிக்கை என்னிடம் உள்ளது.

நாடாளுமன்றம் தனது வழக்கமான பணியை மேற்கொள்ளவேண்டும் என்பதே எங்களின் விருப்பம்.

அதனால் எடுத்த எடுப்பிலேயே அவசர நிலை அறிவிப்பு என்னும் நிலைக்கு போகமாட்டேன். இது நிதியை பெறுவதற்கான எளிதான வழி என்றாலும் கூட அதை விரைவாக கையாள மாட்டேன். அதே நேரம் நாடாளுமன்றம் இதைச் செய்ய தவறும் பட்சத்தில் அவசர நிலை அறிவிக்கப்படும் என்கிற எனது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை" என மேலும் தெரிவித்தார். (7-8)

# வெதுப்பகத்தில் வெடிவிபத்து 3 பேர் பலி; 50 பேர் காயம்

(பரிஸ்)

மத்திய பரிசிலுள்ள வெதுப்பகம் ஒன்றில் ஏற்பட்ட வெடி சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளதுடன், காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது.

வெடிப்பு சம்பவம் இடம் பெற்ற பகுதியில் தொடர்ச்சியாக மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், காயமடைந்தவர்களில் பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இதன்காரணமாக காயமடைந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகின்றது. (7-8)

# கடல் கண்காணிப்பு அணிக்கு மீண்டும் உயிர் கொடுத்தது இலங்கை விமானப்படை!



(கொழும்பு)

இலங்கை விமானப் படை 25 ஆண்டுகளுக்கு முன்பு, கைவிடப்பட்ட கடல்சார் கண்காணிப்பு அணியை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

1971 இல் டி ஹவிலண்ட் டோவ் விமானங்களுடன் சீனக்குடா விமானப்படைத் தளத்திலிருந்து, விமானப் படையின் கடல்சார் கண்காணிப்பு அணி செயற்பட்டு வந்தது.

1971 ஆம் ஆண்டு கிளர்ச்சியின் போது, பருத்தித்துறை தொடக்கம் காலி வரையான கிழக்கு கடல் பிராந்தியத்தின் ஊடாக ஆயுதங்கள் கடத்தப்படுவதைக் கண்டுபிடிப்பதற்காக- இரவு பகலாக இந்த அணி கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டது.

பின்னர் இந்த அணி செஸ்னா-337 விமானங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு, கட்டுநாயக்க விமானப் படைத் தளத்திலிருந்து செயற்படுத்தப்பட்டது.

1988 இல் மீண்டும் சீனக்குடா விமானப்படைத் தளத்திலிருந்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்ட இந்த கடல்சார் கண்காணிப்பு அணி, 1993 இல் செயலிழந்தது.

இந்தக் கடல்சார் கண்காணிப்பு அணி, வை-12 மற்றும் பீச் கிராப்ட்-200 விமானங்களுடன் 3 ஆவது இலக்க கடல் கண்காணிப்பு அணி என்ற பெயருடன், மீண்டும் கடந்தவாரத்திலிருந்து செயற்படத் தொடங்கியுள்ளது.

இதன் கட்டளை அதிகாரியாக விங் கொமாண்டர் விதுர பிறேமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியப் பெருங்கடலின் கடல்சார் மையமாக மாறும் இலங்கையின் இலக்கைக் கருத்தில் கொண்டே விமானப்படையின் இந்தப் புதிய அணி உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கை விமானப் படையின் புலனாய்வு, கண்காணிப்பு, வேவு நடவடிக்கைகளுக்கான முக்கியமான சொத்தாக பீச் கிராப்ட்-200 விமானங்கள் உள்ளன.

2009 இற்குப் பின்னர் நவீன கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்பட்டு இந்த விமானங்களின் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதிக்கு ஆசிவேண்டி வழிபாடு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டு நான்கு வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு ஜனாதிபதிக்கு ஆசிவேண்டி 300 மகாசங்கத்தினரின் பங்குபற்றுதலுடன் விசேட பிரித் பாராயண நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் ருவன்வெல்ல, லெவன்கம, சதாநன்தாராம விகாரையில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் முற்பகல் விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி, அந்நிகழ்வில் பங்குபற்றினார். பிரித் பாராயணத்தை தொடர்ந்து மகா சங்கத்தினருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்விலும் ஜனாதிபதி, பங்குபற்றினார்.

பிரதேசத்தில் குறைந்த வசதிகளையுடைய விகாரைகளுக்கும் பிக்குகளுக்கும் தஹம் பாடசாலை பிள்ளைகளுக்கும் ஜனாதிபதியால் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ருவன்வெல்ல, லைவன்கம, சதாநன்தாராம விகாராதிபதி திரிபிடகவேதி சாஸ்திரபதி சங்கைக்குரிய பேலியகொட சரனதிஸ்ஸ நாயக்க தேரரின் வழிகாட்டலில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பத்மதிலக பண்டார உள்ளிட்ட விகாரையின் நிர்வாக சபையால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (இ-7)

## இலங்கை பொருளாதாரத்தை வலுப்படுத்த

# மேலதிக நிதியுதவிகளை வழங்க சீனா இணக்கம்

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு மேலும் நிதியுதவிகளை வழங்க சீனா முன்வந்துள்ளது. இருதரப்புக்கும் பரஸ்பரம் நன்மையளிக்கக் கூடிய திட்டங்களின் மூலம், இலங்கைக்கு நிதியுதவிகளை வழங்க சீனா விருப்பம் தெரிவித்துள்ளதாக, நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுதொடர்பான மேலதிக தகவல்களை வெளியிட நிதியமைச்சு வட்டாரங்கள் மறுப்புத் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக கொழும்பிலுள்ள சீனத் தூதரகப் பேச்சாளருடன் தொடர்பு கொண்டு, வினவிய போது, அதற்கு அவர் நேரடியாகப் பதிலளிக்கவில்லை.

எனினும், இலங்கைக்கு உதவ சீனா எப்போதும் தயாராகவே உள்ளது என்று சீனத் தூதரக, அரசியல் பிரிவுக்கான தலைவர் லூ சொங், தெரிவித்துள்ளார்.

அனைத்து நிதியுதவிகளும் இலங்கையால் கோரப்பட வேண்டும், சீனாவால் முன்மொழியப்படுவதில்லை. இலங்கையில் எந்தவொரு திட்டத்தையும் அரசாங்கமே முடிவு செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, இலங்கை நிதியமைச்சருக்கும் சீனத் தூதுவர் செங் ஷி யுவான் தலைமையிலான சீன அதிகாரிகளுக்கும இடையில் கடந்தவாரம் பேச்சுக்கள் நடத்தப்பட்டிருந்தன. சீனாவிடமிருந்து நிதியுதவியைப் பெறுவது குறித்தே இந்தப் பேச்சுக்கள் நடத்தப்பட்டிருந்தன.

இதைவிட, சீனாவிடம் 500 மில்லியன் டொலர் நிதியுதவியைப் பெறுவதற்கான பேச்சுக்கள் நடத்தப்படுவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பூமிக்கு வெளிச்சம்

"இரவை பகலாக்க முடியுமா?" இது ஒருத்தருடைய கேள்வி. "ஏன் முடியாது?" என்னாலே முடியுமே! இது இன்னொருத்தருடைய பதில்.

''எப்படி முடியும்?'' என்று கேட்கிறார் அவர். ''ஒரு விளக்கைக் கொளுத்தி வைத்தால் சரியாகப் போய்விடுகிறது'' என்கிறார் இவர். பதில் சொன்னவரை கோபித்துக்கொள்வதில் பிரயோசனமே இல்லை!

இவரிடம் போய் இந்தக் கேள்வியை அவர் கேட்டார் பாருங்க... அவரைச்சொல்ல வேண்டும்! இந்தக் கேள்விக்கு ஒரு விஞ்ஞானி பதில் சொல்கிறார். Mr.Christian Marchal என்று ஒரு French விஞ்ஞானி.

இரவைப் பகலாக்க முடியும் என்று சொல்கிறார் அவர். எப்படித் தெரியுமா? சந்திரன் இருக்கிறது அல்லவா, அங்கே போய் கண்ணாடியைப் பதிக்க வேண்டுமாம் ! சூரிய வெளிச்சம் அந்தக் கண்ணாடியில் பட்டுப் பிரதிபலிக்கிறதாம். அந்த வெளிச்சம் பூமிக்கு வந்து சேருமாம்!

இங்கே இரவு-பகலாகி விடுமாம்! ஆச்சரிமாக அல்லவா இருக்கிறது. ரோமில் 32 ஆவது International Space Travel Congress நடந்தது. அதில் கலந்துகொண்டார் இந்த விஞ்ஞானி. அப்போது தான் இதைச் சொன்னார்.

சரி! இதனால் நமக்கு என்ன சௌகரியம்? இதுதானே உங்கள் கேள்வி? அப்படிக் கேளுங்கள் சொல்கிறேன்!

பூமியில் தெரு விளக்குகள் தேவையில்லாமல் போய்விடும். இதற்கு ஆகும் செலவும் மிச்சம். மின்சாரமும் மிச்சம். இப்பவும் பல இடத்தில் தெரு இருக்கும் விளக்கும் இருக்கும். ஆனால் வெளிச்சம் இருக்காது!

சந்திரனில் கண்ணாடியைப் பதித்து அங்கேயிருந்து இங்கே கொண்டு வருகிற வெளிச்சம் கொஞ்சமாகத்தான் இருக்கும் என்று நினைத்து விடாதீர்கள்! நாம் நன்றாகத் துல்லியமாகப் பார்த்துப் படிக்கும் அளவிற்கு வெளிச்சத்தைக் கொண்டு வந்துவிட முடியுமாம்!

இன்னொரு சந்தேகம். பூமிக்கு வெளிச்சம் கொண்டு வருவது என்றால் நிலாவில் பதிப்பதற்கு எவ்வளவு கண்ணாடி தேவைப்படும்? அவ்வளவு கண்ணாடிக்கு எங்கே போவது? இப்படி நினைப்பது தவறு. ஏன் தெரியுமா?

சந்திரனில் ஒரு சதுர மீற்றர் அளவுள்ள கண்ணாடியை வைத்தால் பூமிக்கும் ஒரு சதுரமீற்றர் அளவுக்குத்தான் வெளிச்சம் வரும் என்று நினைக்கிறீர்களா? அப்படி இல்லை!

சந்திரனில் ஒரு சதுர மீற்றர் அளவுள்ள கண்ணாடியை வைத்தால் அது பூமிக்கு வந்து சேரும் போது 3200 இலிருந்து 3800 சதுரகிலோ மீற்றர் அளவுக்கு வெளிச்சம் கொடுக்கும்! சும்மா சொல்லக்கூடாது!

வருங்காலத்தில் இது நடைமுறைக்கு வந்தாலும் வந்துவிடும்! இயற்கையாகவே இரவு நேரம் குறைவாக இருந்தால் இப்படி ஒரு முயற்சிக்கு அவசியமாக இருக்காது! வருடத்திற்கு 365 பகல் 365 இரவு இருக்கிறது! பகல் பாதி, இரவு பாதி என்று இருப்பதை விட பகல் கால் பங்கு, இரவு முக்கால் பங்கு என்று இருந்தால் ஒரு விதத்தில் சௌகரியம்!

நிறைய நேரம் தூங்கலாம்! அது இருக்கட்டும்... வருடத்திற்கு இப்போது 365நாட்கள் என்று சொல்கிறோம். ஒரு 360 மில்லியன் வருடத்திற்கு முன்னால் நாம் இங்கே இருந்தால் இப்படிச் சொல்ல மாட்டோம்.

அப்போது எல்லாம் வருடத்திற்கு 480 நாட்கள் அப்படி இருந்தது. இப்போது ஏன் 365 இற்கு வந்துவிட்டது. அதற்குக்காரணம் இருக்கிறது! பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டிருக்கின்றது என்பது நமக்குத் தெரியும்!

அப்படி சுற்றிக்கொண்டிருக்கும் வேகம் வரவர குறைந்துகொண்டே வருகிறது! அப்படி வரும்போது வருடத்திற்கு நாள் கணக்கும் குறைந்து கொண்டே வந்து விடுகிறது!

இன்னும் பல மில்லியன் வருடத்திற்குப் பின்னர் அது இன்னும் குறையலாம். 365 நாள் என்பது மாறி 360 நாள் என்று ஆகலாம். இதைச் சோவியத் விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்!

பூமி சுற்றும் வேகம் அவ்வளவு விரைவில் குறைந்து போகாது. அதற்கு ரொம்பக் காலம் ஆகும். இப்படி இவ்வளவு வேகமரக பூமி சுற்றிக்கொண்டிருக்கும் போதே நாம் என்னென்னத்தையோ அனுப்பி இந்தப் பூமியைச் சுற்றிக்கொண்டிருப்பதைப்போல செய்திருக்கிறோம்!

நாமும் கன்னாபின்னா என்று சுற்றிக்கொண்டிருக்கிறோம்! சரி அது இருக்கட்டும். பூமியை வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும் என்றால்... நிலாவில் கண்ணாடியைப் பதிப்பதற்கு என்று தெரிந்துகொண்டோம்.

நிலாவில் கண்ணாடியைப் பதிப்பதற்கு நமது ஆட்களை அனுப்பினால் என்ன நடக்கும் தெரியுமா? நிலாவில் சின்னதாக ஒரு கண்ணாடியைப் பதித்துவிட்டு அதற்குப் பக்கத்தில் பெரிதாக ஒரு கல்வெட்டையும் பதித்துவிட்டு வந்து விடுவார்கள்... இன்னொரு இந்தத் திகதியில் இந்தக் கண்ணாடி பதிப்பு விழாவுக்கு அடிக்கல் நாட்டினார் என்று ஏதாவது அதில் எழுதியிருக்கும்!

அதற்குப்பின்னர் கொஞ்ச நாளில் கண்ணாடி பதிப்பதற்கே இடம் இல்லாமல் போனாலும் போய்விடும்! பூமிக்கு வெளிச்சம் கொடுக்கிறேன் என்று ஆரம்பித்து அதனால் சந்திரனும் இருட்டாகி விடுகிறது என்றால் அது ரொம்ப சங்கடம் இல்லையா?

# கிராமிய வளர்ச்சியில் சனசமூக நிலையப்பங்களிப்பு

"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்றும் "ஊர் கூடித்தேர் இழுப்போம் வாரீர்" என்றும் ஒன்றுபட்ட சமூகக் கட்டமைப்பு எங்களுக்குரியது. ஒரு சமூகமேம்பாடு எங்கிருந்து ஆரம்பமாகிறது? என்ற எண்ணம் ஆரம்பிக்கப்படும் போது நாட்டின் முழுப் பகுதியில் முக்கால் பங்கினர் வசிப்பிடம் கிராமம் ஆகத்தான் உள்ளது.

இயற்கை எனும் பரந்த விளைநிலத்தின் கருவறையில் உருவாகி போலியற்ற யதார்த்தமான வாழ்வு கிராமத்து சூழலில் தான் கிடைக்கிறது. அச்சூழல் கலப்படம் இல்லாத தனித்தன்மை மிக்க பல மனிதர்களை உருவாக்கியுள்ளது. மனிதர்கள் இன்றி சமூகம் வேர் ஊன்றி நிற்க முடியாது. அதே போல் தனி மனித வளர்ச்சியை சமூக முன்னேற்றத்தில் இருந்து பிரித்து விட முடியாது. எனவே மனிதன் இன்றி சமூகம் இல்லை. சமூகம் இன்றி மனிதன் இல்லை.

மனித ஆற்றல் வான த்தின் எல்லையற்ற தன்மையாய் விரிந்து கிடக்கிறது. அன்பு, இரக்கம், கருணை, பாசம், காதல், ஈடுபாடு, மரியாதை, பக்தி போன்ற உயரிய மனித பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளான் மனிதன். இப்பண்புகளை வெளிப்படுத்த மனிதன் தனித்து இயங்க முடியாத வேளை ஒரு சமூகப்பிராணி ஆகிறான்.

சூழலுக்கு தன்னை சரி செய்து கொள்ளாத ஏதுவுமே நிலை கொள்வது கடினம். அவ் வகையில் தனிமனிதர்களின் கூட்டு சேர்ந்து பலதரப்பட்ட நிறுவனங்கள் கட்டமைப்பாகிறது.

அக்கட்டமைப்பில் ஒன்று தான் இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னர் யுத்தத்தினால் அழிவடைந்திருந்த சனசமூகத்தை மீளக்கட்டி யெழுப்புவதற்காக உலகத்தில் அமுல்படுத்தப்பட்ட "வெற்றிசமூகம்" திட்டமே சனசமூக நிலையமாக பின்னாளில் வளர்ச்சியடைந்தது.

இது தொடர்பாக மற்றும் அதற்கு சமாந்தரமாக 1948 இலங்கையில் உள்ளூராட்சி வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமை ச்சராக இருந்த அமரர் எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவால் வெற்றி சமூகம் ஆரம்பிக்கப்பட்டது. 1972 இல் குடியரசான பின்னர் இலங்கையில் சமுதாய சபைகள் எனும் பெயரில் சனசமூக





நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி வேலைத் திட்டத்திற்கு இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியான அமரர் ஜே.ஆர். ஜெயவர்தவின் பங்களிப்பு மற்றும் 1982 இல் அபிவிருத்தி சபைகள் ஆரம்பிக்கப்பட்டமை 1984 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசங்களுக்கு சமுதாய சபை அலுவலர்கள் நிய மனம் செய்யப்பட்டனர்.

1987இல் மாகாண சபைகள் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய உள்ளூராட்சி மன்றக் கட்டமைப்பில் (மாநகரசபை கள், நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகள்) சமுதாய சபைகள் இயங்கிவந்தமை மற்றும் கிராம அலுவலர் பிரிவுமட்டத்தில் கிராமோதயசபைகள் உருவாக்கப்பட்டன. இதனால்ஒரு குறிப் பிட்ட இடத்தில் நெருங்கிச் சேர்ந்து வசிக்கும் பல குடும்பங்கள் தமக்குள்ளே எண்ணங்கள், குறிக்கோள், பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறைகள், தொழில்கள் போன்ற ஏதாவது ஒன் றிலோ அல்லது பலவற்றிலோ சில பொது பண்புகளை கொண்டு இணைந்தன.

இவ்விளைவு சுற்றுப் புறச் சமூக உருவாக்கத்தில் இறுக்கமான நிறுவன கட்டமைப்பை ஏற்படுத்துகின்றன. இதில் சேவை மனப்பாங்கு உள்ள உறுப்பினர் கள் தமக்குள் ஒன்று சேர்ந்து தமது மக்களுக்கு சேவை புரிய இச்சனசமூக நிலையங்கள் சாதகமான களமாக அமைந்தது.

மனிதன் ஒருவருக்கு ஒருவர் உதவுவதற்கும் உறவு கொண்டாடுவதற்கும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் தோழமை கொள்வதற்கும் தமக்கு நேரடித் தொடர்பை பேணுகின்ற சிறிய எண்ணிக்கையுள்ள உறுப்பி னர்கள் சனசமூக நிலையத்தில் இணைகின்றனர். இச் சனசமூக நிலைய உறுப்பினர்கள் குழுமம் விவசாய சமூகம், கடற்றொழில் சமூகம், தொழில் துறை சமூகம் என பல ஒன்றிணைவாக கூடிக் கொள்கின்றனர்.

இதன் ஊடாக சேவை மனப்பான்மை கொண்ட உறுப்பினர்கள் தமக்குள் ஒன்று சேர்ந்து தமது கிராம மக்களுக்கு சேவை புரிய விளைகின்றனர். இவ்வாறாக ஒரு கிராம மக்களின் எண்ணங்கள், குறிக்கோள் கள், பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறைகளை உலகு அறிய வழி செய்கிறது.

முதுமையான திறன் வாய்ந்த ஆளுமை மிக்க கிராமத்து பெரியவர்கள், ஆற்றல் மிக்க துடிப்பு வாய்ந்த இளைய தலைமுறைனர், கிராமத்து சனசமூக நிலையங்களில் ஒன்று கூடி பல முடிவுகளை கலந்து ஆலோசனை செய்து வெற்றிகரமான விளையாட்டு போட்டிகள். தனியார் கல்வி புகட்டும் நிறுவனங்கள், இரத்ததான முகாம்கள், சிரமதானப் பணிகள், வாசிகசாலைகள், கலாசார நிகழ்வுகள் போன்றவற்றை நடத்தியும் கிராமத்து பாதுகாப்பு முயற்சிகள், உரிமைகள் தேவைகளை இனங்கண்டு அவற்றை பரிந்துரை செய்தல், நிறைவேற்றல் போன்ற பல்வேறு பணிகளை ஆற்றுகின்றது.

உலகம் கிராமம் ஆக மாறி வரும் சூழலில் இன்று ஒவ்வொரு கிராமமும் தனித்தன்மையாக வாழ்கிறது.

வலியது மெலியதை நசுக்கும் என்ற இயற்கையின் விதி மனிதனுக்கு விதி விலக்கல்ல. எனவே நசுக்கப்படும் சமூகம் தன்னை காத்துக்கொள்ளும் தனித் தன்மையை சனசமூகப் பணி ஆற்றுகிறது

உலகமயமாதல், நகர மாயமாதல் போன்ற சிந்தனை காரணமாக கிராமம் என்ற கருத்து நிலை மெல்ல தனது வரையறை இழந்து வரும் போதும் கிராமசபை இல்லாமல் போய் பிரதேச சபை உருவான போதும் கிராமங் களில் மக்களிற்கு நற்பணி ஆற்றுபவர்களில் பலர் மதிப் புக்குரியவர்களாக, பிரதேச சபை தவிசாளர்களாக அரசியல் அந்தஸ்து பெறுகின் றனர். மனித பண்பினை விருத்தி செய்யும் ஆதார நிலையங்களாக அவை திகழ்கின்ற போதும் சில முரண்பாடுகளை தோற்று வித்தாலும் அவை நாளடைவில் ஒன்றுபட்டு ஒற்றுமைப்படுகிறது.

அவ்வகையில் இலங்கையில் அதிகளவு சன சமூக நிலையங்கள் உள்ள போதும் வடமாகாணத் தில் 1393 சனசமூக நிலையங்களும் யாழ்ப்பாணத் தில் 951 உள்ளன. அதில் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து காணப்பட்ட கிராமிய நிறுவனக் கட்டமைப்புக்களின் செயற்பாடு மற்றும் புதியபோக்குகள் தொடர்பில் புரிந்துணர்வு ஏற்பட்டது. தற்காலத்தில் மத்திய மாகாண சபையில் இயங்கிவரு கின்ற சமுதாய ச்பைகளின் வகைகளில்,

1. மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பண்டைய சமுதாயசபைகள்,
2. உள்ளூராட்சி மன்றங்களில் பதிவுசெய்யப்பட் டுள்ள சமுதாயசபைகள்
3. மாவட்ட உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள சமுதாய சபைகள்/ சமுதாய அபிவி ருத்திச் சங்கங்கள்
4. தற்போதைய SPACE கருத்திட்டத்தின் ஊடாக தாபிக்கப்பட்டுள்ள சமுதாயசபைகள் / சமுதாய அபிவிருத்தி சங்கங்கள். அடங்குகின்றன.

ஆக்கபூர்வமான பங்கேற்பை சமுதாயசபைகள் எனக் கூறப்படும் சனசமூக நிலை யங்கள் ஆற்றுகின்றன.

நடேசபிள்ளை பிரதீபன்
ஆசிரியர்
யா/இந்து மகளிர் கல்லூரி.

## புதிய அரசியலமைப்பை உருவாக்க பாராளுமன்றத்தில் இடமில்லை

### ஜே.வி.பி.சுட்டிக்காட்டு



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பிற்கான தேவை இருந்த போதிலும் அதற்கான காலம் போதாது என மக்கள் விடுதலை முன்னணியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்கான தேவை இருந்தாலும் அதற்கு பாராளுமன்றத்தில் இடமில்லை.

தற்போது பாராளுமன்றத்திலுள்ள உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய கொள்கைகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

புதிய அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டுமாக இருந்தால் அது தொடர்பில் மாகாண சபைகளுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

எனினும் தற்போது எமது நாட்டில் சில மாகாண சபைகளுக்கான ஆயுட்காலம் நிறைவடைந்து அவை காலாவதியாகியுள்ளன. இன்னும் சில மாகாண சபைகளுக்கான காலம் சில மாதங்களில் நிறைவடையவுள்ளன. ஆனால் இன்னும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவில்லை.

குறுகிய காலத்திற்குள் அவசரமாக அரசியலமைப்பு வரைபொன்றினை முன் வைக்கவும் முடியாது என நாம் கருதுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பிரதமர் ரணில் புகைப்படத்தை காட்சிப்படுத்த மைத்திரி உத்தரவு



(கண்டி)

மத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் புகைப்படத்தை உடனடி யாக காட்சிப்படுத்த மத்திய மாகாணத்தின் புதிய ஆளு நராகப் பதவியேற்றுள்ள மைத்திரி குணரத்ன உத்தரவிட்டுள்ளார்.

தன்னுடைய கடமைகளை பொறுப்பேற்ற போதே அவர் இவ்வாறு உத்தர விட்டுள்ளார்.

ஆளுநரின் அலுவலகத்தில் ஜனாதிபதி மற்றும் முன்னாள் ஆளுநரின் புகைப்படங்கள் உள்ள நிலையில், அங்கு பிரதமரின் புகைப்படம் இருக்க வேண்டி யது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஜனாதிபதி-பிரதமர் இடையிலான மனக் கசப்புக்கள் விரைவில் நீங்கும்

### அமைச்சர் தயா கமகே நம்பிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தில் தற்பொழுதுள்ள சிறு சிறு பிரச்சினைகள் எதிர்வரும் நாட்களில் நீங்கி விடும் என அமைச்சர் தயா கமகே நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதியிடம் சிறு மன வருத்தங்கள் சில போது இருக்க முடியும். நீண்ட காலத்துக்கு அவர் அதனை மனதில் வைத்திருக்க மாட்டார். பிரதமரும் மனக் கசப்புக்களை வைத்திருப்பவர் அல்லவெனவும் தயா கமகே தெரிவித்தார்.



பிரதி, இராஜாங்க அமைச்சர்கள் நியமனம் தாமதமாவது குறித்து தனியார் ஊடகமொன்று வினவிய போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# சந்திரிகா தலைமையில் சுதந்திரக்கட்சிக்கு தனியான காரியாலயம் விரைவில் திறப்பு

(கொழும்பு)

**பண்டாரநாயக்க கொள்கையை முன்னெடுத்துச் செல்வதற்காகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்பதற்காகவும் புதிதாக கட்சிக் காரியாலயம் ஒன்றை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் உருவாக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்கும் அமைப்பு தீர்மானம் எடுத்துள்ளதாகவும் அதன் ஒருங்கமைப்பாளர் பண்டார அதுகோரல தெரிவித்துள்ளார்.**



இந்த புதிய கட்சிக் காரியாலயம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையிலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் பிரதேச சபை ஆகிய உறுப்பினர்களின் பங்களிப்புடனும் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய கட்சிக் காரியாலயத்துக்காக ராஜகிரிய பிரதேசத்தில் கட்டடமொன்று கட்சி உறுப்பினர்களால் பெறப்பட்டுள்ளதாகவும் சகல வசதிகளுடன் உள்ள இக்கட்சிக் காரியாலயம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது முக்கிய கேந்திர நிலையமாக செயற்படவுள்ளதாகவும் அக்கட்சியின் ஒருங்கமைப்பாளர் பண்டார மேலும் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணி டீ.ஏ. ராஜபக்ஷவை முதன்மைப் படுத்திய நடவடிக்கையை முன்னெடுத்து வருவதனால், எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்கவின் சின்னங்கள் அழிக்கப்படுவதாகவும், இருட்டடிப்புச் செய்யப்பட்டு வருவதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய குழுவால் குற்றம்சாட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சங்கக்கார -ராஜித மந்திராலோசனை!





(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ராஜித சேனாரட்னவுக்கும், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சங்கக்காரவுக்கும் இடையில் இரகசிய சந்திப்பு ஒன்று இடம் பெற்றதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 4ஆம் திகதி சுகாதார அமைச்சில் ராஜிதவின் உத்தியோகபூர்வ அறையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

பொது மக்களின் சுகாதார தன்மையை அதிகரிக்கும் திட்டம் ஒன்றிற்காக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதாக அமைச்சில் இருந்தவர்களிடம் ராஜித குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இரண்டரை மணித்தியாலங்கள் இது குறித்து கலந்துரையாட அவசியம் உள்ளதா? என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடல் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணியால் புதிய கூட்டணி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக கூறப்பட்டது. இந்நிலையில் இந்த இரகசிய சந்திப்பு பாரிய குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# ராமராஜ் குடும்பத்துக்கு வீடு-சஜித் நடவடிக்கை

(கண்டி)

கண்டி - யட்டிநுவர வீதியில் நான்கு மாடிக் கட்டடமொன்றில் அண்மையில் ஏற்பட்ட தீவிபத்தில் உயிர் தப்பிய குடும்பத்திற்கு வீடொன்றை வழங்க அமைச்சர் சஜித் பிரேமதாஸ நடவடிக்கை எடுத்துள்ளார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இந்தக் குடும்பத்தவர்கள் தற்போது வைத்தியசாலையிலிருந்து வெளியேறி கண்டி கெப்பெட்டிபொல ஓய்வு மண்டபத்தில் தற்காலிகமாக தங்கியுள்ளனர்.

அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் பணிப்புரைக்கு அமைய நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை அவர்களுக்கு புதிய வீடொன்றை வழங்குவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் ஷான் கஹவெல அந்த குடும்ப உறுப்பினர்களை சந்தித்து தகவல்களைப் பெற்றுக் கொண்டார்.

கண்டி, யட்டிநுவர வீதியில் ஏற்பட்ட தீவிபத்தில் தனது குடும்பத்தை காப்பாற்றிய ராமராஜ் கண்ணீருடன் கருத்து வெளியிட்டிருந்தார்.

தீயில் எரிந்து உயிரை விடுவதை விட பிள்ளைகளின் உயிரை காப்பாற்றுவதே நோக்கமாக இருந்ததாகவும், அதனாலேயே பிள்ளைகளை மேல் இருந்து கீழே தூக்கி வீசியதாகவும் அவர் தெரிவித்தார்.

தான் வாழ்ந்த இடம் முழுவதும் தீப்பற்றி எரிந்துள்ளது. வாழ ஒரு இடமில்லை. குடும்பத்தோடு நடு வீதிக்கு வந்துவிட்டோம்.

வைத்தியசாலையில் இருந்து எங்கு செல்லப்போகிறோம் என தெரியவில்லை. வாழ இடமில்லை. பிள்ளைகளுக்கு ஒரு பாடசாலை இல்லை என ராமராஜ் கண்ணீருடன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நெருக்கடியான நிலையில் அந்தக் குடும்பத்திற்கு வீடொன்றை வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார். (இ-7)

# பாடசாலை நேரத்தில் பகுதி நேர வகுப்புக்கள் நடத்தத் தடை

## கல்வியமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் புதிய தடையொன்று விரைவில் வரவுள்ளதாக கல்வியமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த வகையில் பாடசாலை நேரத்தில் அதாவது காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 வரையான நேரத்தில் பகுதி நேர வகுப்புக்களை நடத்த தடை விதிப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விடயத்தை கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளதாக சுட்டிக்காட்டி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன், இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தில் கல்வியமைச்சர் கையொப்பமிட்டுள்ளதாக தெரியவருகிறது.

மேலும், கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் பாடசாலை நேரத்தில் மாணவர்களுக்கு பகுதி நேர வகுப்பு நடத்தப்படுவதாகவும், இது தொடர்பில் பெற்றோர்களும் அவதானிக்க வேண்டும் எனவும் கல்வியமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)


# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி கற்பகம் கதிரேசு

(நயினாதீவு-2, கனடா)

மண்ணில் 10 . 03 . 1930



விண்ணில் 14 . 01 . 2018

திதி:- 02.02.2019 அபரபக்ஷ திரயோதசி

அம்மா உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்

82/2, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(7145)


# அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள இக்கட்டான நிலைக்குத் தள்ளிவிடுகின்றனர்

## மைத்திரி அணி மீது மகிந்த அணி பாய்ச்சல்

(கொழும்பு)

பொதுஜன பெரமுன கூட்டணியமைத்துதான் தேர்தலில் வெற்றி பெற வேண்டிய நிலை கிடையாது. தனித்து போட்டியிட்டே வெற்றியைப் பெற முடியும். இதற்கு நடந்து முடிந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலின் வெற்றியே சாட்சி என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் தற்போது தேவையற்ற வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. பொதுஜன பெரமுனவின் சார்பில் வெற்றி பெறக்கூடிய ஒருவரையே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ களமிறக்குவார் என்பதில் எந்த வித விட்டுக் கொடுப்புக்களும், மாற்றங்களும் கிடையாது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டுமொரு முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று ஆரம்பத்திலே குறிப்பிட்டுள்ளார்.

தற்போதும் அவர் தானே ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவேன் என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை.

ஆனால் அவரை காரணம் காட்டி அரசியல் இருப்பை தக்க வைத்துக்கொள்ள முயற்சிப்பவர்களே அவரையும் இக்கட்டான நிலைக்குத் தள்ளி விடுகின்றனர்.

புதியதாக அமைக்கப்படும் கூட்டணியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேட்பாளராக போட்டியிட்டால் தாம் ஆதரவு வழங்கப் போவதில்லை என்று பொதுஜன பெரமுனவின் மாகாணசபை உறுப்பினர்கள் உறுதியாக குறிப்பிட்டுள்ளனர். இது மாகாண சபை உறுப்பினர்களின் தனிப்பட்ட தீர்மானமாகும்.

இவ்விடயம் தொடர்பில் பொதுஜன பெரமுன முக்கியத் தரப்பினர்களிடம் இருந்து எவ்வித பதில்களும் கிடைக்கப் பெறவில்லை. தேர்தல் ஒன்றில் வெற்றி பெறுவதையே அனைவரும் எதிர்பார்ப்பார்கள்.

பொதுஜன பெரமுன சுதந்திரக் கட்சியுடன் கூட்டணியமைத்தாலே இப்பிரச்சினை



தோற்றம் பெறும்.

நாங்கள் சுதந்திரக் கட்சியுடன் கூட்டணியமைப்பதற்கு பிரதான காரணம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக செயற்படும் அனைவரையும் ஒன்றிணைக்கவும், இடைக்கால அரசாங்கத்தை ஏற்படுத்தி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ஷவின் மீது நம்பிக்கை வைத்து பொறுப்புக்களை ஒப்படைத்தமையின் ஊடாக ஏற்பட்ட நல்லுறவை பலப்படுத்தவே தவிர எங்களின் பலவீனத்திற்கு அல்ல என்பதை சுதந்திரக் கட்சியினர் புரிந்துகொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

**ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)**

கலாநிதி மு.குணசிங்கம்

**144**



## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

மேலும் 1834 இல் நியமிக்கப்பட்டதும் தலைமைத்துவ பிரித்தானிய அதிகாரிகளைக் கொண்டதுமான பாடசாலை ஆணைக்குழு, சேர்ச் மிஷனரி சொசைற்றி பாடசாலைகளின் ஆங்கிலக் கல்வியே நிரந்தரமான பாடவிதானமாகும் வண்ணம் விடயங்களை ஒழுங்கமைத்தது.

எங்கெல்லாம் கிறிஸ்தவ மிஷன்கள் நிறுவப்பட்டனவோ அங்கெல்லாம் அரசாங்கப் பாடசாலைகள் மூடப்பட்டுக் கிறிஸ்தவ மிஷன் பாடசாலைகள் மிகவும் சாதகமான நிலையிலும் அசைக்க முடியாத வகையிலும் நிறுவப்பட்டன.

பொருளாதார அபிவிருத்தியின் காரணமாக குடியேற்ற நிர்வாகத்தில் சிவில் நீதித் துறைகளில் வேலைவாய்ப்புக்கள் அதிகரித்தன. இந்த வளர் நிலைகளும் பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் ஆரம்பமும் அரசாங்கத்தினுடைய விதிமுறைகளும் ஒன்றாகச் செயற்பட்டு வேலைவாய்ப்புக்கு ஆங்கில அறிவை முற்தேவையாக்கியதுடன் பொதுவானதும் அதிகரித்ததுமான ஆங்கிலக் கல்விக்கான தேவையை நாட்டில் ஏற்படுத்தின.

இதன் விளைவாகக் கிறிஸ்தவ மிஷன்கள் தமது வளங்களையும் சக்திகளையும் ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவுவதில் பயன்படுத்தின.

இந்த நிலைமைகளில் அமெரிக்க சிலோன் மிஷனின் வழிமுறைகளையே வெஸ்லியன்சும் சேர்ச் மிஷனரி சொசைற்றியும் பின்பற்றின. வெஸ்லியன் மிஷனின் ஆங்கிலப் பாடசாலைகள் 1821 இலும் அதையொட்டிய காலத்தில் யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் தாபிக்கப்பட்டன.

பீற்றர் பேர்சிவல் வடக்கில் இடை நிலை, உயர்நிலைப் பாடசாலைகளை நிறுவுவதில் முன்னின்று 1834 இல் யாழ்ப்பாணத்தில் முதலாவது வெஸ்லியன் உயர்கல்வி நிறுவனத்தைத் தாபிக்க உதவினார். 1837 இல் அவர்களின் மிஷன் அமைந்திருந்த காணியில் சிறுவர்க்கான ஆங்கிலப் பாடசாலையில் 150 சிறுவர்கள் இருந்தனர்.

1847 இல் இது மத்திய பாடசாலை எனப் பெயர் மாற்றப்பட்டு பின்னர் வில்லியம் பாபரை (William Barbar) முதலாவது அதிபராகக் கொண்ட மத்திய கல்லூரி என வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பெரிய வெஸ்லியன் மிஷன் நிலையங்கள் எல்லாவற்றிலும் சுதேசிப் பிள்ளைகளுக்கான ஆங்கிலப் பாடசாலைகள் அமைக்கப்பட்டன.

ஏற்கனவே 1841 அளவில் நிறுவப்பட்டிருந்து மேலும் 1837 இலிருந்து மட்டக்களப்பிலும் 1838 இலிருந்து பருத்தித் துறை, திருகோணமலை ஆகிய இடங்களிலும் ஆங்கிலப் பாடசாலைகள் நிறுவப்பட்டன.

.ஏற்கனவே 1841 அளவில் நிறுவப்பட்டிருந்த சென் போல் ஆண்களுக்கான ஆங்கிலப் பாடசாலை (St.Paul's English Boys' School), பிரதான ஆங்கிலப் பாடசாலைக்கு மாணவர்களை வழங்குகின்ற ஓர் ஆரம்பப் பாடசாலையாக இயங்கிக் கொண்டிருந்தது.

பேர்சிவலினால் இடப்பட்ட அத்திபாரத்தின் பயனாய் ஆங்கிலக் கல்வி விரிவாக்கம் பெற்ற பத்தொன்பதாவது நூற்றாண்டின் அரையிறுதிப் பகுதியில் வெஸ்லியன் மிஷன் வட்டாரங்களிலெல்லாம் பாடசாலைகள் பெருந்தொகையில் உருவாகத் தொடங்கின.

1853 இல் வில்லியம் வோல்டன் (William Waltan) வெஸ்லியன் பிரார்த்தனை மண்டபத்தில் வண்ணார்பண்ணை ஆங்கிலப் பாடசாலையை தொடங்கி வைத்தார். இப்பாடசாலை 1862 இல் கில்னர் கல்லூரி எனப் பெயரிடப்பட்டது.

பெண்கள் கல்வியைக் கவனத்திற்கொண்ட பேர்சிவல் 1834 இல் மிஷனின் யாழ்ப்பாண மத்திய நிலையத்தில் திருமதி பேசிவலின் தலைமையின் கீழ் முதலாவது வெஸ்லியன் மகளிர் விடுதிப் பாடசாலையை நிறுவக் காரணமாக இருந்தார்.

1840 இல் செல்வி ருவிடி (Miss Twiddy) என்ற ஆங்கிலப் பெண் நேரடியாக இங்கிலாந்திலிருந்து வந்து இப்பாடசாலையின் அதிபரானார். இப்பாடசாலை திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் (1874) இருந்த அன்றைய வெஸ்லியன் மிஷன் மகளிர் பாடசாலைகளுடன் சேர்ந்து மகளிர் கல்விக்கான பங்களிப்பில் பெரும் பங்களிப்பைச் செய் துள்ளது.

திருகோணமலையில் மேலுமொரு புதிய பாடசாலை ஆண்களுக்கென அமைக்கப்பட்டு உள்ளூர் வாசிகளின் அமோக ஆதரவைப் பெற்றது. வெஸ்லியன் மிஷனின் கல்விச் செயற்பாடுகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் அரைப்பகுதியில் வியக்கத்தக்க வகையில் விரிவாக்கம் பெற்றது. அரசாங்கத்தின் கொள்கை மாற்றங்களும் இதற்குக் காரணமாகின.

மதமாற்றம் சம்பந்தமான புள்ளிவிபரங்களும் அச்செயற்பாடுகளில் ஈடுபட்ட மிஷனரிமாரின் கூற்றுகளும் மிஷனரி முயற்சிகளினால் நிகழ்ந்த தமிழரின் பொதுவான பதில் செயல்களையும் உணர்வுகளையும் ஓரளவு புலப்படுத்துகின்றன.

இவற்றைப் பார்க்கையில் தமிழரிடையில் காணப்பட்ட பதில் செயல்களில் எவ்வித ஒருமைப்பாடோ, இறுக்கமோ இருக்கவில்லை எனத் . தெரிகின்றது.

ஆயினும் மிஷனரிமாரின் அமைப்புகளால் அளிக்கப்பட்ட வசதி வாய்ப்புக்களைத் தமிழர் ஏற்று அவற்றைப் பயன்படுத்திய போதும் அதன் காரணமாக அவர்கள் எப்போதுமே கிறிஸ்தவத்தைத் தமது மதமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுடன் அவர்கள் ஒருபோதுமே பெருந்தொகுதியாக கிறிஸ்தவத்திற்கு மதமாற்றம் செய்யப்படவில்லை.

(தொடரும்)

“1853 இல் வில்லியம் வோல்டன் (William Waltan) வெஸ்லியன் பிரார்த்தனை மண்டபத்தில் வண்ணார்பண்ணை ஆங்கிலப் பாடசாலையை தொடங்கி வைத்தார். இப்பாடசாலை 1862 இல் கில்னர் கல்லூரி எனப் பெயரிடப்பட்டது.பெண்கள் கல்வியைக் கவனத்திற்கொண்ட பேர்சிவல் 1834 இல் மிஷனின் யாழ்ப்பாண மத்திய நிலையத்தில் திருமதி பேசிவலின் தலைமை யின் கீழ் முதலாவது வெஸ்லி யன் மகளிர் விடுதிப் பாடசா லையை நிறுவக் காரணமாக இருந்தார்”

# நாட்டைப் பிளவுபடுத்தி ஆட்சி செய்ய முடியாது

# அனைத்து மக்களுக்கும் ஏற்புடைய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த திட்டவட்டம்

(ஹோமாகம)

இன, மதங்களுக்கிடையில் குரோதங்களை உருவாக்கி, நாட்டைப் பிளவுக்குட்படுத்தி எம்மால் ஆட்சி செய்ய முடியாது. எனவே அனைத்து மக்களுக்கும் ஏற்புடையதாகவும் அவர்களை எந்தவிதத்திலும் பாதிக்காத வகையிலும் அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



ஹோமாகம பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மகிந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"இன, மதங்களுக்கிடையில் குரோதங்களை உருவாக்கி, நாட்டை பிளவுக்குட்படுத்தி எம்மால் ஆட்சி செய்யமுடியாது. ஆகையால் நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களுக்கும் ஏற்புடையதாகவும் அவர்களை எந்த விதத்திலும் பாதிக்காத வகையிலும் அரசியலமைப்பை உருவாக்க வேண்டும்.

மேலும், சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என வேறுபடுத்தாமல். நாட்டையும் மக்களின் வாழ்க்கையையும் வலுப்படுத்தும் வகையிலான அரசியலமைப்பே தற்போதைய சூழ்நிலைக்குத் தேவையாகவுள்ளது.

இதேவேளை வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள், நாட்டுக்குள் செயற்படுவதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது" எனவும் மகிந்த தெரிவித்துள்ளார். (இ-7)

## மகிந்த தலையையும் வாலையும் காட்டி செயற்படுகின்றார்-ஹலீம் குற்றச்சாட்டு

(கண்டி)

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் கூறுவது போன்று அவர் செயற்பட்டால் நாட்டுக்கு மேலும் பலன் கிடைக்கும் என தபால் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் எம்.எச்.எம்.ஹலீம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசியலமைப்பு திருத்தம் சம்பந்தமாக விகாரைகளில் கூறும் கருத்துக்களுக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்தையே பாராளுமன்றில் கூறிவருகின்றார்.



பாராளுமன்றம் அரசியலமைப்புப் பேரவையாகக் கூடிய சந்தர்ப்பத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதாகவும் பௌத்த மதத்திற்கு முன்னுரிமையும் வழங்கிச் செயற்படுவதாக மிகவும் தெளிவாகக் கூறினார்.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அனைத்து மதங்களுக்கும் சம உரிமை வழங்குமாறும், மதங்களுக்கு இடையில் பேதம் ஏற்படும் வகையில் செயற்படக் கூடாது என்றும் தெரிவித்தார்.


ஹலீம் நேற்று முன்தினம் கண்டி மாவில்மட பிரதேசத்தில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1615

Search for people, places and things

### அனிதா

நமது எண்ணங்கள் உயர்வாக இருந்தால் போதும் எந்த இலக்கையும் எளிதாக அடையலாம்



### சிவாஷா

நோய் நொடியின்றி நீண்டகாலம் வாழ பணம், பதவி தேவையில்லை, நல்ல துணையிருந்தால் போதும்




### இனியா

ஆயிரம் தடவை சரியாக செய்திருந்தாலும் ஒரு தவறை வைத்தே எடை போடுவது மனித இயல்பு



### பரத்

நேர்மை என்பது மிக அரிதான பொக்கிஷம்... அதைக் கீழ்த்தரமான மனிதர்களிடம் எதிர்பார்க்காதீர்கள்... ஏமாந்து போவீர்கள்



### வெண்மதி

சுகங்களை பகிர்ந்து கொள்ளும் அன்பைவிட சோகங்களை பகிர்ந்து கொள்ளும் அன்பு உண்மையானது



### நகுலன்

இந்த உலகத்தில் எதுவுமே நிரந்தரம் கிடையாது... உங்களது துயரங்களுக்கும் கூட இது பொருந்தும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# எமது கட்சியிலிருந்து பாய்ந்தவருக்கு கிடைத்த அமைச்சுப் பதவியும் இல்லாமல் போய்விட்டது

## வியாழேந்திரனை சீண்டிய சிறிநேசன்



(மண்முனை)

பிரிக்கப்படாத நாட்டுக்குள் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழக்கூடிய ஒரு சுதந்திரமான சூழலையே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எதிர்பார்ப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் 52ஆவது பிறந்த நாளை முன்னிட்டு ஏழு வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சத்துருக்கொண்டானில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இருக்கின்ற அமைச்சர்களில் ஊழல் செய்யாமல் மக்களுக்கு சேவை செய்கின்ற அமைச்சர் என்ற அடிப்படையில் சஜித் பிரேமதாஸவை நாங்கள் அடையாளம் கண்டிருக்கின்றோம்.

கட்சி பேதமில்லாமல் சகலருக்கும் மதிப்பளித்து செயற்படுகின்ற அமைச்சர் என்ற'வகையில் எந்தவொரு இடத்திற்கு சென்றாலும் பெயர் சொல்லி அழைத்து மற்றவர்களை கௌரவப்படுத்துகின்ற ஒரு அமைச்சராகவும் அவர் உள்ளார்.

நாடாளுமன்றத்தில் புதிய அரசியலமைப்புக்கான நிபுணர்களின் அறிக்கை கொண்டு வரப்பட்டிருக்கின்றது. அமைச்சர் மனோகணேசன் இந்த அறிக்கை பற்றி மிகவும் காத்திரமானதொரு உரையை வழங்கியிருக்கின்றார்.

இந்த திட்டத்தைக்கூட நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் இந்த நாடு சீரழிந்து போவதற்கு காரண கர்த்தாக்களாக நீங்கள் இருப்பீர்கள் என்று அவர் கூறினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு உடன்பாட்டுடன் இந்த நிபுணத்துவ அறிக்கையை கொண்டு வந்திருக்கின்றது.

அதன் மூலமாக இந்த பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைக்க வேண்டும். இந்த நாட்டில் சகல மக்களும் சமத்துவத்துடன் வாழ வேண்டும். எங்களுக்கு காணி அதிகாரம். பொலிஸ் அதிகாரம் கிடைக்க வேண்டும். மற்றைய மாவட்டங்களின் எல்லையை கபளீகரம் செய்வதற்கு எமக்கு விருப்பமில்லை.

எங்களுடைய எல்லைக்குள் எங்களுடைய மக்கள் சுயநிர்ணயத்துடன் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதே எமது விருப்பாகும். பிரிக்கப்படாத நாட்டிற்குள் எமது மக்கள் சுயநிர்ணயத்துடன் சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு தீர்வை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அந்த அடிப்படையில்தான் இந்த அரசியல் யாப்புத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

நாடாளுமன்றம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுத் தரவேண்டும். மக்கள் தீர்ப்பிற்கு விடுகின்ற போது ஐம்பது வீதமான மக்கள் அதற்கு ஆதரவு தருகின்றபோது தான் அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

இதனை அவர்கள் மறுப்பார்களானால் நாடாளுமன்றம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தரவில்லையென்றால் உள்நாட்டு பொறிமுறை எதுவும் சரிவராது. சர்வதேச பொறிமுறைகளினூடாக தான் இனப்பிரச்சினைக்குரிய தீர்வினை காண வேண்டும் என்ற நிர்ப்பந்தம் உருவாகும். சிறுபிள்ளைத்தனமான சில விமர்சனங்கள் இருக்கின்றன.

அதைப்பற்றி எங்களுக்கு கவலையில்லை. கடந்த காலத்தில் ஒருவர் எங்களுடைய கட்சியிலிருந்து பாய்ந்துவிட்டார். இப்போது அவருக்கு கிடைத்த அமைச்சுப் பதவியும் இல்லாதுபோய் விட்டது என முன்னாள் பிரதியமைச்சர் எஸ்வியாழேந்திரன் எம்.பியை சுட்டிக்காட்டி தனது உரையை முடிவுக்கு கொண்டு வந்தார். (இ-7)

## பேருந்துக்காக ஓடிய பெண் கால் தடுக்கி விழுந்து மரணம்

(வெருகல்)

மட்டக்களப்பு - வெருகல் பகுதியில் பேருந்துக்காக ஓடிய போது கால் தடுக்கி விழுந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை வெருகல் பகுதியிலுள்ள தனது மரக்கறித் தோட்டத்திலிருந்து கதிரவெளிக்கு செல்வதற்கு தயாரான குறித்த பெண், பேருந்து வருவதைக்கண்டு ஓடிச் சென்றுள்ளார்.

இதன்போது கல்லில் கால் தடுக்கி விழுந்து மயக்கமடைந்த அவரை, உறவினர்கள் வாகரை மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில், அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கதிரவெளி-புதூர் கிராமத்தைச் சேர்ந்த செல்லாச்சி (வயது-63) என்ற 8 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (இ-7)

## ரஜரட்ட பல்கலை. மீண்டும் ஆரம்பம்

(மிகிந்தலை)

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மிகிந்தலை வளாகம் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் கல்வி நடவடிக்கைக்காக மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று பல்கலைக்கழக கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

அதன்படிமிகிந்தலை வளாகத்தின் அனைத்து பீடங்களும் கல்வி நடவடிக்கைக்காக மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் நாளை 15 ஆம் திகதி மாலை 4 மணிக்கு முன்னர் தமது விடுதிகளுக்கு வருகை தருமாறு பல்கலைக்கழக கட்டுப்பாட்டாளர் கேட்டுள்ளார். (இ-7)

## பொருளாதாரத்தை கட்டியெழுப்ப இலங்கைக்கு ஜப்பான் ஆதரவு

(கண்டி)

அரசியல் நெருக்கடிகளின் எதிரொலியாக வீழ்ச்சியடைந்துள்ள இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான தமது ஒத்துழைப்பு தொடரும் என ஜப்பான் உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகிரா சுகியமா வரலாற்று சிறப்புமிக்க கண்டி தலதா மாளிகைக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விஜயம் செய்து வழிபாட்டில் ஈடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து அஸ்கிரிய பீடத்தின் மாநாயக்கர் வரக்காகொட ஞானரத்தன தேரர் மற்றும் மல்வத்து மாநாயக்க தேரர் ஆகியோரைச் சந்தித்து ஆசி பெற்றார்.

அதன் பின்னர் இலங்கையின் பொருளாதார நெருக்கடிகள் குறித்த ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

"இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்களிப்புச் செலுத்தும் மிக நீண்டகால பங்காளனாக ஜப்பான் விளங்கி வருகிறது. ஜப்பானின் இந்த பங்களிப்பு தொடரும்.

இரு நாடுகளுக்கும் இடையில் உயர்மட்ட வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனை மேலும் வலுப்படுத்தவும் ஜப்பான் எதிர்பார்த்துள்ளது" எனத் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 55 | 60 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 400 |
| தக்காளி | 100 | 100 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 60 | 30 | 60 |
| கோவா | 100 | 90 | 70 | 100 |
| கரட் | 120 | 120 | 100 | 160 |
| பூசணி | 40 | 30 | 40 | 60 |
| புடோல் | 100 | 80 | 70 | 100 |
| வாழைக்காய் | 80 | 70 | 55 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 240 | 200 | 200 | 300 |
| வெண்டிக்காய் | 150 | 80 | 65 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 220 | 100-160 | 200 | 160 |
| லீக்ஸ் | 140 | 160 | 120 | 160 |
| பீற்றூட் | 120 | 160 | 90 | 160 |
| கறிமிளகாய் | 250 | 240 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 1000 | – | 600 |
| போஞ்சி | 100 | 120 | 90 | 160 |
| கத்தரிதம்புள்ள | 160 | 140 | 130 | 160 |
| கீரை -1பிடி | 40 | 50 | 40 | 40 |
| தேசிக்காய் | 180 | 160 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 130 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 240 |
| முள்ளங்கி | 50 | 80 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | 120 | 60 |

# செய்தித்துளிகள்

## ஹெரோயினுடன் மூவர் கைது

(மொரட்டுவ)

அங்குலான மற்றும் மொரட்டுவ பகுதிகளில் ஹெரோயினுடன் நேற்றுக்காலை மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து 9 கிராம் 350 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. (இ-7)

## உருக்குலைந்த நிலையில் மீனவரின் சடலம் மீட்பு!

(வாகரை)

வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள சம்புக்களப்பு காட்டுப் பகுதியில் மீனவர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. குறித்த மீனவரின் சடலம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்பந்தனாவெளி கிராமத்தைச் சேர்ந்த க.வசந்தராசா (வயது-36) என்பவரின் சடலமே, சம்புகளப்பு பகுதியில் காட்டு மரத்தினிடையே உருக்குலைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான குறித்த நபர், நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருபவரென்றும், இவர் கடந்த புதன்கிழமையிலிருந்து காணாமல் போயிருந்ததாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (இ-7)

## ஆமை இறைச்சியுடன் இரண்டு பெண்கள் கைது

(கொழும்பு)

ஆனவிலுந்தாவ - தல்லதரன்கட்டுவ பிரதேசத்தில் ஆமை இறைச்சியுடன் இரண்டு பெண்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட குறித்த பெண்களிடம் இருந்து ஆமை இறைச்சி மற்றும் 211 ஆமை முட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட பெண்கள் மேலதிக விசாரணைக்காக ஆனவிலுந்து வனவிலங்கு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டு, சிலாபம் நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டு இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ-7)

## தீயிலிருந்து தப்பிய குடும்பத்துடன் எஸ்.பி.திஸாநாயக்க எம்.பி.சந்திப்பு



(கண்டி)

கண்டி - யட்டிநுவர வீதியில் ஐந்து மாடி கட்டடத்தில் ஏற்பட்ட தீப்பரவலில் இருந்து தப்பிய ராம்ராஜ் குடும்பத்தின் சுக துக்கங்களை அறிவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க நேற்று முன்தினம் கண்டிக்கு விஜயம் செய்தார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய அவர்கள் தற்காலிகமாக தங்கியுள்ள கண்டி வைசாக்கிய அமைப்பின் தலைமையகத்திற்கு அவர் நேற்று முன்தினம் சென்றுள்ளார். (இ-7)

## மும்மொழி தேசிய பாடசாலை துரிதமாக் அமைக்கப்படும்


(நானுஓயா)

மலையகத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள மும்மொழி தேசிய பாடசாலை பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். நுவரெலியா நானுஓயா பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய மும்மொழி தேசிய பாடசாலையை அமைப்பதற்கான பணிகளை, கல்வியமைச்சின் அதிகாரிகளுடன் இணைந்து, அமைச்சர், நேற்று முன்தினம் பார்வையிட்டார். இதன்போது உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



# சிறுவர் அரங்கம்

## புத்திசாலி சகோதரர்கள்



ராமுவும் சோமுவும் ஐந்தாம் வகுப்பு படித்து வருகிற மாணவர்கள். இவர்களின் பெற்றோர் அந்த ஊரில் விவசாயம் செய்து வந்தார்கள். இருவரும் நல்ல புத்திசாலிகள். அவர்கள் அம்மாவுக்கு எல்லா உதவிகளும் செய்து நல்ல பிள்ளைகளாகவும் பெற்றோர் சொல் பேச்சுக் கேட்கும் குழந்தைகளாகவும் இருந்தனர்.

ராமுவும் சோமுவும் உள்ளூரில் உள்ள பள்ளியிலியே படித்து வந்தனர். அவர்கள் படித்து வந்த பள்ளி அவர்கள் வீட்டிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் தள்ளி இருந்தது. தினமும் நடந்தே பள்ளிக்குச் சென்று மாலையில் பள்ளி விட்டவுடன் வீடு திரும்புவர்.

அவர்கள் படித்து வந்த பள்ளியில் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை மதியம் மேல் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். எல்லா வகுப்பு மாணவர்களும் ஒரு இடத்தில் கூடி பாட்டு, நடனம், நாடகம், எது வேண்டுமானாலும் நடத்தலாம். அப்படி கலைத்திறமையைக் காண்பிக்கப் போகும் குழந்தைகள், திங்கட்கிழமையே பேர் கொடுத்து விட வேண்டும். வெள்ளிக்கிழமை அவர்கள் பேரைக் கூப்பிட்டு அனைத்து ஆசிரியர்களும் எல்லா வகுப்பு மாணவர்களும் கூடி இருக்கும் இடத்தில் அவர்கள் செய்ய இருக்கும் கலை நிகழ்ச்சிகளை நடத்திக்காட்ட வேண்டும். அனைவரும் அதை பார்த்து இரசித்து மகிழ்வர். ராமுவும் சோமுவும் ஒரு முறை நாடகம் நடத்துவதற்குப் பெயர் கொடுத்தனர். ராஜா ஒருவருக்கு தண்டனை கொடுப்பது போலவும் அதை எதிர்த்து தண்டனை பெற்றவர் வசனம் பேசுவது போலவும் நடிப்பதாகப் பெயர் கொடுத்தனர். அதற்காகத் தினமும் மாலை பயிற்சி எடுத்துவிட்டு வீட்டிற்கு நேரங்கழித்தே வந்தனர்.

அவர்கள் அம்மாவிடமும் வருகிற வெள்ளி அன்று நாடகம் போடுவதால் இந்த வாரம் முழுவதும் வீடு வர நேரமாகும் என்று சொல்லிவிட்டதால் பெற்றோர்கள் இவர்களைப்பற்றிக் கவலைப்படவில்லை.

இரண்டு நாட்கள் கழித்து இவர்கள் நேரங்க்ழித்து வீடு வந்த பொழுது அவர்களின் சித்தப்பா வீட்டிலிருந்தார். இவர்கள் இருவரும் வீட்டிற்கு வந்தவுடன் அவர்களின் சித்தப்பா ராமு, சோமு நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டார்.

என்ன உதவி சித்தப்பா என்று கேட்க இன்னைக்கு இராத்திரிக்கு மட்டும் என் கடையில போய் படுத்துக்க முடியுமா? என்று கேட்டார். இவர்கள் இருவரும் தன் தந்தையின் முகத்தைப் பார்க்க அவர் நானும் உங்க சித்தப்பாவும் இன்னைக்கு இராத்திரி அசலூர் போறோம்.

வீட்டுல அம்மா கூட அவங்கம்மா வர்றதாச் சொல்லிட்டாங்க, ஆனா உங்க சித்தப்பா அரிசி கடையில இன்னைக்கு தான் அரிசி மூட்டை வந்து இறங்கியிருக்கு. அதனால யாராவது போய் படுத்துட்டா நல்லாயிருக்கும் அப்படீன்னு கேட்கிறான். நான் நீங்க சின்ன பசங்க வேண்டாம் அப்படீன்னு சொல்லிட்டேன்.

சொன்னவுடன் ராமுவுக்கும் சோமுவுக்கும் கோபம் வந்து விட்டது. நாங்க ஒண்ணும் சின்னப் பசங்க இல்லை, நாங்க இன்னைக்கு இராத்திரி சித்தப்பா கடையில போய் படுத்துக்கறோம். சொன்னவர்களை அவர்கள் அப்பா கவலையுடன் பார்த்து உங்களாலே தனியா இராத்திரி கடைக்குள்ள படுத்துக்க முடியுமா?நீங்க கவலைப்படாமே போய்ட்டு வாங்க, நாங்க இராத்திரி சாப்பிட்டுட்டு சித்தப்பா கடையிலே போய் படுத்துக்கறோம்.

இரவு சாப்பிட்டு விட்டு இருவரும் கிளம்பினர். சித்தப்பா அரிசி கடை ஊருக்கு தள்ளி இருந்தது. நல்ல இருள். இவர்கள் இருவரும் அப்பாவிடமும் சித்தப்பாவிடமும் சொல்லிவிட்டார்களே தவிர அந்த இருளை பார்த்தவுடன் பயம் மனதுக்குள் வந்து ஒருவரை ஒருவர் இறுக்கி பிடித்துக்கொண்டனர். சித்தப்பா கடையைத் திறந்து உள்ளே சென்றுகதவை தாழ்ப்பாள் போட்டு விட்டு அங்கிருந்த சாக்கு துணி இரண்டை போட்டு படுத்து கொண்டனர். உள்ளேயும் இருட்டாக இருந்ததால் இருவரும் பேச்சு மூச்சு காட்டாமல் பயத்துடன் அருகருகே படுத்துக் கொண்டனர்.

நடு சாமம் இருக்கலாம், ஏற்கனவே பயத்தால் தூக்கம் வராமல் படுத்து இருந்த இவர்களுக்கு யாரோ சுவற்றை இடிக்கும் சத்தம் கேட்டது. இருவருக்கும் பயத்தில் உடலெல்லாம் வேர்த்து என்ன செய்வது என்று புரியாமல் உட்கார்ந்திருந்தனர்.

இப்பொழுது சுவர் இடிந்து ஒரு ஓட்டை விழுவதையும் அதற்குள் ஒரு தலை உள்ளே எட்டிப் பார்ப்பதையும் பார்த்த இவர்களுக்கு பயத்தில் வேர்த்து வழிய ஆரம்பித்தது. சுவரில் ஓட்டை போட்டு வருபவன் நிச்சயம் திருடன்தான் என்பதை உணர்ந்த இருவரும் என்ன செய்வது எனத் திகைத்து விட்டனர்.

திடீரென்று ராமுவுக்கு ஒரு யோசனை தோன்றியது, சுற்று முற்றும் பார்த்தான் கடையில் திருஷ்டி பூசணிக்காய் இருந்தது தெரிய வர சோமுவிடம் மெல்ல அதை எடுக்கச் சொன்னான். அதை தன் முகத்தில் வைத்துக் கொண்டு சோமுவை ஒரு வெண்மையான் பிளாஸ்டிக் பை ஒன்றை எடுத்து தலையிலிருந்து போர்த்துக்கொள்ளச் செய்தவன், நம்ம டிராமாவை இப்ப நடத்தப்போறோம். நான் பேச பேச நீயும் என்னை எதுத்து பேசணும் சரியா? என்று கிசு கிசுத்தவன் திடீரென்று... வா வா உன்னைத்தான் எதிர் பார்த்துக்கொண்டிருந்தேன்.

சோமு தலையில் வெள்ளைப் பிளாஸ்டிக் பையை மூடிக்கொண்டு நானும் உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இன்று வசமாக மாட்டிக்கொண்டாய் என்று சத்தம் போட்டு சிரித்தான். இருவரும் மாறி மாறி மாட்டிக்கொண்டாய், மாட்டிக் கொண்டாய் என்று சிரிக்க ஆரம்பித்தனர்.

திருடுவதற்கு முழு உடலையும் உள்ளே நுழைத்த உருவம் எதிரில் பூசணிக்காய் தலையுடன் ஒரு குட்டி உருவமும் வெள்ளை உடல் போர்த்திய உருவமும் சிரித்துக் கொண்டு குதிப்பதைப் பார்த்து பயந்து வெல வெலத்து வந்த ஓட்டை வழியே மீண்டும் தலையை நுழைத்து வெளியேறிய உருவம் தலை தெறிக்க ஓடும் காலடி சத்தத்தை இருவரும் கேட்டனர்.

அப்பாடி..! நிம்மதி பெருமூச்சு விட்டு இருவரும் இரவு முழுவதும் நிம்மதியாய் உறங்கினர்.

மறுநாள் அப்பாவிடமும் சித்தப்பாவிடமும் சொல்லி சொல்லி சிரித்தனர். அன்று பள்ளியில் இவர்கள் போட்ட நாடகம்தான் நன்றாக இருந்ததாக அனைவரும் சொன்னார்கள்.

நாங்கள் இராத்திரியே இந்த நாடகத்தை போட்டு ஒருவரை ஓடச்செய்துவிட்டோம் என்று பெருமையுடன் இருவரும் சொல்லிக் கொண்டு இருந்தார்கள்.

## பொது அறிவுத் தகவல்கள்

- உலகிலேயே ஜனாதிபதிக்கு ஒரு வருட காலம் பதவி கொண்ட நாடு சுவிட்சர்லாந்து.
- முதல் டிரக்டர் 1900 ஹால்ட் என்பவரால் செய்யப்பட்டது.
- முதன் முதலில் காகிதத்தினால் ரூபாய் நோட்டை அச்சிட்டு வெளியிட்ட நாடு சீனா.
- ஐக்கிய நாடுகள் சபை 1945, ஒக்டோபர் 24 இல் தொடங்கப்பட்டது.
- உலகிலேயே வெப்பமான இடம் அசீசீயா (லிபியா).
- உலகிலேயே குளிந்த இடம் சைபீரியா (ரஷ்யா).
- விமானம் பறக்கும் உயரத்தை அள்க்க உதவும் கருவியின் பெயர் ஆல்டி மீற்றர்.
- பூனையின் கண்பார்வை மனிதனைவிட எட்டு மடங்கு கூர்மையானது.
- ஒட்டகம் ஒரு கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள தண்ணீரை எளிதாக கண்டுபிடித்துவிடும்.
- கரையான் ஒரு நாளைக்கு முப்பதாயிரம் முட்டை இடும்.
- நத்தைகளால் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் வரை நித்திரை கொள்ள முடியும்.
- மனிதனுடைய காதுகளால் 130 டெசிபல் அளவுதான் பொறுத்துக்கொள்ள முடியும்

## உணவைப் பதப்படும் முறை யாரால் கண்டுபிடிக்கப்பட்டது தெரியுமா?

மேற்கத்திய உணவு வகை சாப்பிடும் எல்லோரும் அறிந்திருப்பர் **CAN FOOD** என்றால் என்னவென்று. இப்போது இந்திய உணவு வகைகளும் நிறைய இதுபோல **Can**களில் அடைத்து சீலிடப்பட்டு வருகிறது. சரி இதுபோல **Can**களில் அடை த்து உணவுகளை விற்கும் முறை எப்போது வந்தது என்று தெரியுமா?

போர்க்காலங்களில் வீரர்களுக்கு உணவுகளை எடுத்து செல்லும் போது. அது பல வகைகளில் பாழாகியது, கெட்டுப்போனது. இதனால் அதிகப்படியான பொருட்செலவும் தேவையான சமயத்தில் உணவு இல்லாமல் வீரர்கள் சோர்வடையும் நிலையும் ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையில் பிரெஞ்சு மாமன்னர் நெப்போலியன் இந்த பிரச்சினைக்கு யார் தீர்வு சொல்கிறார்களோ அவர்களுக்கு தகுந்த சன்மானம் கொடுக்கப்படும் என்று அறிவித்தார். அதாவது குறைந்த செலவில் உணவுகளை கெட்டுப்போகாமல் பாதுகாக்கும் வழிமுறையை கண்டறிய இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இந்த அறிவிப்பினை தொடர்ந்து நிகோலஸ் அபர்ட் **(nicholas appert)** என்பவரால் உணவுகளை **Can**களில் அடைக்கும் வழிமுறை கண்டறியப்பட்டது. காற்றுப்புகாத ஜாடியில் அடைக்கப்படும் உணவு கெட்டுப்போகாது என்ற தனது கண்டுபிடிப்பின் மூலம் 12000 **Franc** பரிசும் பெற்றார். முதலில் உணவுகளை கண்ணாடி குடுவைகளில் பயன்படுத்த ஆரம்பித்து இன்று வித விதமான வடிவங்களில் **Can**களில் உணவுகள் பதப்படுத்தப்பட்டு விற்கப்படுகின்றன.

தன் சிந்தனையைப் பற்றி இறுதிவரையில் சொல்ல அஞ்சாதவன் உண்மையில் சுதந்திரமான மனிதன்.
~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஒவ்வொரு தமிழ் மகனும் மனச்சாட்சியோடு செயற்படட்டும்

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிந்து 10 ஆண்டுகள் ஆகின்றன. யுத்தம் முடிந்த கையோடு இலங்கை அரசு குறித்து பலவாறான விமர்சனங்கள் எழுந்தன.

அதில் குறிப்பாக வன்னி யுத்தத்தின் கொடூரம் தமிழ் இன அழிப்பாக இருப்பதாக மனித நேய அமைப்புக்கள் தமது கருத்துக்களைப் பதிவு செய்தன.

தவிர யுத்தத்தின் கொடூரங்களை வெளிப்படுத்துகின்ற கண்கண்ட சாட்சியமாக சனல் 4 காணொளிகள் அமைந்திருந்தன.

கூடவே புலம்பெயர் தமிழ் மக்கள் தமிழினத்துக்கு நேர்ந்த அவலத்தை சர்வதேச வீதிகளில் இறங்கி உரக்கக் கூறினர்.

இதன் விளைவாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் இலங்கைத் தமிழர்களின் விடயத்தை நோக்கி தனது பார்வையை திசை திருப்பி இருந்தது.

எனினும் தென்பகுதிப் புத்திஜீவிகளும் அரசியல் விற்பன்னர்களும் தமிழ் மக்களுக்குச் சார்பாக சர்வதேச மட்டத்தில் ஏற்பட்டுள்ள கருத்தியலை முறியடிக்க ஆட்சி மாற்றமே வழி எனத் தீர்மானித்தனர்.

மகிந்த ராஜபக்ஷ தரப்பை ஆட்சிக் கட்டிலிலிருந்து இறக்கி, புதிய ஆட்சியை அமைப்பதனூடாக சர்வதேசத்தின் கொந்தளிப்பை கட்டுப்படுத்த முடியும் என்ற அவர்களின் உன்னத தயாரிப்பு நடைமுறையாகியபோது அவர்கள் இலக்கை அடைந்தனர்.

இந்த இலக்கை அடைவதற்கு தமிழ் அரசியல் தலைமையும் வகிபங்காற்றியமைதான் எங்களிடம் இருந்த இராஜதந்திரப் பலவீனம் என்பதை நாம் இங்கு கூறித்தானாக வேண்டும்.

இனப்பிரச்சினை தொடர்பில், ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் இலங்கை அரசுக்கு நிபந்தனைகளை விதித்து அதை நிறைவேற்றப் பணித்தபோதிலும் அவை எதுவும் கருத்தில் எடுக்கப்படவில்லை.

மாறாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் நிபந்தனைகளை நிறைவேற்ற கால அவகாசம் போதாது என்ற கருத்து இலங்கை அரசால் முன்வைக்கப்பட்டது. இங்குதான் தமிழ் அரசியல் தலைமை மீண்டுமொரு வரலாற்றுத் தவறை இழைக்கிறது.

ஆம், ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் நிபந்தனைகளை நிறைவேற்ற இலங்கை அரசுக்கு காலஅவகாசம் வழங்க வேண்டும் என்பதை தமிழ் அரசியல் தலைமை முன்மொழியும் அளவில் நிலைமை எமக்குப் பாதகமாகியது.

இந்தக் காலக் கடத்தல்கள் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்காத நிலைமைகளை உருவாக்கியது என்பதே உண்மை.

வன்னி யுத்தம் நடந்து 10 ஆண்டுகள் கடந்த நிலையில் அதன் வடுக்களையும் வேதனைகளையும் தமிழ் மக்கள் சுமந்து கொண்டுள்ளனரே தவிர, எங்களுக்கு நேர்ந்த கதியை சர்வதேசம் மறந்து போகும் அளவிலான ஒரு சூழ்நிலையை காலத்தின் நீண்ட அசைவு உருவாக்கி விட்டது.

இதுதான் இன்றைய நிலைமை என்ற கட்டத்தில் தமது எதிர்காலம் பற்றிய தீர்க்கமான முடிவுகளை தமிழ் மக்கள் எடுக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மீண்டும் பிரதமராக பதவியேற்ற கையோடு தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையாகக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் என நம்மவர்கள் கூறினர். ஆயினும், இதுவரை அதற்கான முயற்சிகள் நடப்பதாகத் தெரியவில்லை.

இதுவே நிலைமை எனும்போது எங்களுக்கான உரிமை, எங்களின் வாழ்வு, எங்களின் இலக்கின் எதிர்காலம் பற்றி தமிழ் மக்கள் அதிகமாக சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

இந்தச் சிந்தனை அரசியல் என்ற பக்கச் சார்பற்று ஒவ்வொருவரும் தம் மனச்சாட்சிப்படி செயற்படுவதாய் இருக்கும்போது காலம் கடந்தேனும் உரிமையை வலியுறுத்தி அந்த இலக்கை அடையும் பாதையில் பயணிக்கக் கூடியதாக இருக்கும்.

எதற்கும் இதுவரை நடந்தது சரியா? என்ற ஆய்வினூடு மனச்சாட்சியை முன்னிறுத்தி தீர்மானம் எடுப்பதுதான் தமிழ் மக்களின் முக்கியமான கடமையாகும்.

# குடிநீர் தடங்கலின்றி கிடைக்க உடன் நடவடிக்கை எடுங்கள்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் தனியார் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த குடிநீர் விநியோகத்திற்கு அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு காரைநகர்பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை ஆகியவற்றுக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.

காரைநகர் பிரதேசத்துக்கான நீர் விநியோகத்தை காரைநகர் பிரதேச சபை, காரை அபிவிருத்திச்சபை, மற்றும் எவர் டேய்ஸ் நிறுவனம் ஆகியன இணைந்து மேற்கொண்டு வந்தன. அண்மையில் பிரதேச சபையில் எடுததுக்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைய விநியோகிக்கப்படும் குடிநீருக்கான விலை ஒரு லீற்றர் தொடக்கம் 500 லீற்றர் வரை 0.60 சதம் கட்டணமாக அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டது.

குறித்த தீர்மானத்தை காரை அபிவிருத்தி சபை ஏற்றுக்கொண்ட போதும் மேற்குறித்த தனியார் நிறுவனம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் கடந்த 8 ஆம் திகதியில் இருந்து தனியார் நிறுவனம் தனது குடிநீர் விநியோகத்தை நிறுத்தியுள்ளது. இதனால் 1200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. மேற்படி விடயம் தொடர்பில் இராஜாங்க அமைச்சருக்கு தெரியப்படுத்தியதையடுத்து குறித்த நீர்விநியோகத்தை மேற்கொள்ள உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பிரதேசெயலர் மற்றும் பிரதேச சபை தவிசாளர் ஆகியோருக்கு அறிவித்ததுடன் மேற்குறித்த தனியார் நிறுவனம் தொடர்பில் பொதுமக்களால் முறைப்பாடு கிடைக்கும் பட்சத்தில் அது தொடர்பாக அறியத்தருமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து காரைநகர் பிரதேச சபை தவிசாளரை தொடர்பு கொண்டு கேட்ட போது நீர் விநியோகம் தொடர்பில் யாருக்கும் தடை போடவில்லை, மாறுபட்ட விலைக்கு நீர் விற்பனை செய்ததாக பொதுமக்களால் எனக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில்தான் நாம் நீர் விநியோகத்துக்கு கட்டுப்பாட்டு விலை விதித்திருந்தோம். அதற்கு தனியார் நிறுவனம் சம்மதம் தெரிவிக்காமல் நீர் விநியோகத்தை நிறுத்தியுள்ளது. இதனால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வர்த்தகத்துக்காக எமது மக்களை அடகு வைக்க முடியாது. இது தொடர்பான கலந்துரையாடல் இன்று நடைபெறும். அதில் உரிய முறையில் தீர்வு காணப்படும் என தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து தனியார் நிறுவனத்தின் உரிமையாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, நாம் பல வருடங்களாக இந்த சேவையை செய்து வருகிறோம். 3 கட்டங்களாக பிரித்து நீர்விநியோகத்தை மேற்கொண்டோம். எம்மிடம் அங்கத்துவம் பெற்றவர்களுக்கு 40 சதத்துக்கும் அங்கத்துவ பணம் கட்டாத வர்களுக்கு 60 சதமாகவும், ஏனையவர்களுக்கு ஒரு ரூபாயாகவும் விநியோகித்தோம். நீர் விலை நிர்ணயம் தொடர்பில் எம்முடன் பிரதேச சபை கலந்துரையாடவில்லை. அவர்களின் தீர்மானத்தில் எமக்கு உடன்பாடில்லாத காரணத்தினால் நீர்விநியோகத்தை நிறுத்தினோம். இராஜாங்க அமைச்சரின் அறிவித்தலுக்கமைய மக்களின் தேவை கருதி ஏற்கெனவே எம்மால் வழங்கப்பட்டு வந்த விலைக்கு நீர்விநியோகத்தை 12ஆம் திகதியில் இருந்து ஆரம்பித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை பிரதேச சபையில் தீர்மானத்தை உதாசீனம் செய்து நீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கு யாருக்கும் அனுமதி வழங்க முடியாது என்றும் இன்று நடைபெறும் கலந்துரையாடலில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (இ-9,10)

## நமது வெற்றிக்காக...

- மனப்பூர்வமாக செயலாற்றுங்கள். அடுத்தவரின் அழிவிலா நமது வெற்றி வேண்டும் என்று யோசியுங்கள்.
- நம் வெற்றிக்காக அயராது உழைத்து கொண்ட இருங்கள். உழைப்பு ஒரு போதும் தோல்வியடையாது. தோல்வியைப் பற்றி கவலைப்படாமல் வெற்றியை எண்ணியே செயற்படுங்கள்.
- கவலையையும் பயத்தையும் விலக்கி விட்டால் வெறறிக்கு விடை கிடைக்கும். முயற்சியை முழு மூச்சாகக் கொண்டு வேலையைத் தொடங்குங்கள். தோல்வியோ தடையோ நேர்ந்தால் அதைப் பற்றி கவலைப்படக்கூடாது. வெற்றிக்காகப் போராடி எப்படியாவது வென்று விட வேண்டும் என்கிற இலட்சியத்தோடு நம்பிக்கையை இழந்து விடாமல் முயற்சி செய்து கொண்டே இருங்கள். விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இலட்சியமும் வெற்றிக்குப் படிக்கட்டுகள்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மன்னார் பிரதேசத்தில செம்மண் தீவு, செம்மண்தீவு Ware House, அச்சங்குளம், எருவிட்டான், அறுகுகுன்று, அளவக்கை, மாவலங் கேணி, வாழ்க்கை பட்டான்கண்டல், பல்லங் கோட்டை, பண்டாரிகுளம், நானாட் டான், உமணகிரி, நறுவலிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மகிழ்ச்சியோடு வாழ



மனிதன் என்ற தத்துவத்தை நான்கு சிறப்பு நிலைகளாகப் பிரிக்கலாம். அவை 1) உடல் 2) உயிர் 3)மனம் 4) மெய்ப்பொருள் என்பனவாகும். இந்நான்கும் பொருள் நிலையில் ஒன்றுதான். ஆனால், இயக்கச் சிறப்புகளால் பிரித்து உணரத் தக்கவையாக இருக்கின்றன. ஒரே பொருள் அதன் இயல்பான பரிணாம உணர்ச்சியால் நான்கு நிலைகளையும் அடைந்து ஒன்றில் ஒன்றாக நான்கும்இணைந்து இயங்கும் சிறப்பே மனிதனாக விளங்குகின்றது.

உடல் என்பது ஆற்றலின் **(Mass)** திரட்சியே. ஆற்றல் **(Energy)** என்பது மெய்ப்பொருளின் இயக்க நிலையே. மெய்ப்பொருள் தான் ஆற்றவுக்கு நிலைக்களம் **(Static State)**. இதனை வெட்டவெளி என்கிறோம். வெட்ட வெளியே தனது இயக்கத்தில் ஆற்றல் ஆகிறது. ஆற்றலின் திணிவு உடல். உடலில் நிறைந்த ஆற்றல் உணர்ச்சியெனும் சிறப்புற்று உடலை உணர்ந்து. பேரியக்க மண்டலத் தோற்றங்களை உணர்ந்து. உணரும் ஆற்றலான உயிரையும் உணர்ந்து முடிவாகத் தனது மூலநிலையான மெய் நிலையை நிலைக்களனாக உள்ள ஆதிநிலையை உணர்ந்து முழுமை பெறுகிறது.

உணர்ச்சியிலிருந்து முழுமை பெறும் வரையில் நடைபெறும் சிறப்பாற்றல் தான் மனம் **(Mind)** என்றும். அறிவு **(Consciousness)** என்றும் வழங்கப்படுகின்றது. எனவே மெய்ப்பொருள். ஆற்றல். தோற்றம். மனம் **(Truth, Energy,Mass,Consciousness)** என்ற நான்கு நிலைகளும் ஒரு பொருளின் பரிணாம வளர்ச்சியின் வேறுபாடுகளே. இந்த விளக்கத்தையே பேரியக்க மண்டல இயக்கங்கள் அனைத்தையும் மதிப்பிட அடிப்படையாகக் கொள்ளலாம்.

நுண்ணிய இயக்க ஆற்றலான பரமாணு முதல் பெரும் பெரும் நட்சத்திரங்கள் உட்பட மனதில் கொண்டு ஆழ்ந்து ஆராய்ந்தால் ஒரு பேருண்மை விளங்கும். ஒவ்வொரு அணுவும் அல்லது அணுக்கொத்தும் தன்னியக்கம், தொடரியக்கம், பிரதிபலிப்பு இயக்கம், விளைவு என்ற நான்கு வகையான தன்மைகளோடு இயங்குகின்றன. எந்த ஒரு இயக்கமும் தனியாகத் துண்டுபட்டு நடைபெறுவதில்லை. பேரியக்க மண்டலம் என்ற கோர்வையில் அமைந்துள்ள இயற்கை ஒழுங்கமைப்பை நாம் காரண - விளைவு நியதி **(Cause - and - effect system)** என்று கூறுகிறோம்.

இந்த விளைவின் கீழ் தோன்றிய மனிதனின் நோக்கம் அறிவின் முழுமை பெற்று அமைதி பெறுவதேயாகும். அறிவின் முழுமைக்கு வாழ்க்கை அனுபவம் வேண்டும். அவ்வனுபவத்திற்கு உடல் என்ற நற்கருவியை நன்றாகப் போற்றி காத்து பயன்படுத்த வேண்டும். எனவே மனிதன் தனது நோக்கத்தை ஒட்டி இயல்பாக வாழ்ந்து அமைதியும். மகிழ்ச்சியும் பெற வேண்டுமெனில் அறிவில் முழுமை பெறுவது. உடலைப் பொறுப்போடு காப்பது என்ற இரண்டு வகையிலும் உணர்ந்தாற்ற வேண்டும்.

# நல்லூர் பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகள்



2019 ஆம் ஆண்டுக்கான நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டுவிழா கடந்த 12 ஆம் திகதி அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்களுக்கான பூப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து அரியாலை ஸ்ரீ கலைமகள் விளையாட்டுக் கழகம் மோதியது.

இப்போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 3:0 என்ற ரீதியில் வெற்றிபெற்று 2019 ஆம் ஆண்டிற்கான வெற்றிக் கேடயத்தினை தனதாக்கிக் கொண்டது.

இதில் கஸ்துரன் துளசிகனை 21:02, 21:06 என்றரீதியிலும், ஜெயரூபன் வினுசனை 21:05, 21:08 என்ற ரீதியிலும் சத்தியன் நிறோயனை 21:09, 21:14 என்ற ரீதியிலும் வெற்றி பெற்றனர். (ம)





பெண்களுக்கான கபடி இறுதிப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து மணியந்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழகம் விளையாடியது.

இப்போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் 26:11 என்ற ரீதியில் வெற்றிபெற்று 2019 ஆம் ஆண்டிற்கான வெற்றிக் கேடயத்தினைத் தனதாக்கிக் கொண்டது. (ம)





ஆண்களுக்கான கபடி இறுதிப் போட்டியில் திருநெல்வேலி ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து மணியந்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழகம் விளையாடியது.

இப்போட்டியில் மணியந்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழகம 31:25 என்ற ரீதியில் வெற்றிபெற்று 2019ஆம் ஆண்டிற்கானவெற்றிக் கேடயத்தினை தனதாக்கிக் கொண்டது. (ம)

# யாழ்ப்பாணம் சுப்பர் லீக்கின் முதலாவது பருவகாலப் போட்டிகள் ஆரம்பம்



யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் தொடங்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் சுப்பர் லீக் என்னும் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் முதலாவது பருவகாலப் போட்டிகள் 12 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

இந்தச் சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானங்களில் நடைபெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத் தலைவர் எஸ்.விக்னராஜாவும், கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் எஸ். நிமலனும் கலந்துகொண்டனர்.

இந்தச் சுற்றுப்போட்டியின் போட்டிகள் யாவும், கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளன.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் 8 அணிகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் ஏ பிரிவில் ஜப்னா பந்தேர்ஸ், பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ், அரியாலை வோரியர்ஸ், நல்லூர் பிறவுண் கொஸ் அணிகள் உள்ளன.

பி பிரிவில் வேலணை வேங்கைகள், கொக்குவில் ஸ்ரார்ஸ், பண்ணை ரில்கோ கிளாடியேற்றர்ஸ் மற்றும் ரில்லியூர் ரைரன்ஸ் ஆகிய அணிகளும் உள்ளன.

முதலாவது பருவகாலப் போட்டியில் பங்குபற்றுவதற்கான அணிகளின் வீரர்களைத் தெரிவு செய்வதற்கான ஏலம் யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்றிருந்தது. (க-26)

# இரண்டாவது ஆட்டத்தில் வேலணை வேங்கைகள் வெற்றி



பானுசனின் சிறப்பான துடுப்பாட்டம் மற்றும் விதுசனின் அச்சுறுத்தலான பந்துவீச்சு ஆகியன கைகொடுக்க, வேலணை வேங்கைகள் அணி, 55 ஓட்டங்களால் இலகு வெற்றியொன்றை பதிவு செய்தது.

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் சுப்பர் லீக் என்னும் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது பருவகாலப் போட்டிகள் 12 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் 8 அணிகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் ஏ பிரிவில் ஜப்னா பந்தேர்ஸ், பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ், அரியாலை வோரியர்ஸ், நல்லூர் பிறவுண்கொஸ் அணிகளும் பி பிரிவில் வேலணை வேங்கைகள், கொக்குவில் ஸ்ரார்ஸ், பண்ணை ரில்கோ கிளாடியேற்றர்ஸ் மற்றும் ரில்லியூர்ரைரன்ஸ் ஆகிய அணிகளும் உள்ளன.

கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற இந்தச் சுற்றுப்போட்டியின் இரண்டாவது போட்டியில், ரில்லியூர் ரைரன்ஸ் அணியை எதிர்த்து வேலணை வேங்கைகள் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற ரில்லியூர் ரைரன்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதற்கிணங்க களமிறங்கிய வேலணை வேங்கைகள் அணியினர், 19.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றனர். துடுப்பாட்டத்தில் பானுசன் 45, ஆதித்தன் 27, லிங்கநாதன் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ரைரன்ஸ் அணி சார்பாக, மதுசன் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் விஸ்ணு பிரகாஸ் 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

178 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலளித்தாடிய ரில்லியூர் ரைரன்ஸ் அணியினர், 19 பந்துபரிமாற்றங்களில் 122 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்து 55 ஓட்டங்களால் தோல்வியடைந்தனர். துடுப்பாட்டத்தில் கஜந்தன் 35, அஜித் 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் வேலணை வேங்கைகள் சார்பாக, விதுசன் 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும், கோகுலன் 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக வேலணை வேங்கைகள் அணியின் விதுசன்தெரிவுசெய்யப்பட்டார்.(க-9-26)

# சாவகச்சேரி நகர சபையின் மென்பந்து கிரிக்கெட் போட்டிகள்

தைப்பொங்கலை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையினரின் ஏற்பாட்டில் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் தென்மராட்சியில் உள்ள 16 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. தெரிவுப் போட்டிகள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இப் போட்டிகள் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்களான பாலமயூரன், உதயசந்தர், தர்ஷன் மற்றும் திருக்குமரன் ஆகியோரின் மேற்பார்வையில் இடம்பெறவுள்ளன.

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையினால் இவ் வருடம் முதன்முதலாக மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-30)

# வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் பாரம்பரிய விளையாட்டுப்போட்டிகள்

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்தும் சைக்கிளோட்டப் போட்டி சனிக்கிழமை காலை 6 மணிக்கு பண்டத்தரிப்பு சந்தியில் ஆரம்பமாகி நடைபெற்றது.

மரதனோட்டப்போட்டி நேற்று ஞாயிறு காலை 6 மணிக்கு இளவாலை சித்திரமேழி சந்தியில் ஆரம்பமாகி நடைபெற்றது.

பாரம்பரிய போட்டிகள் பொங்கலன்று இளவாலை மெய்கண்டான் பாடசாலையிலும் பட்டமேற்றல் காங்கேசன்துறையிலும் நடைபெறும். (க)

## ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்...

தற்போது 06 மாகாண சபைகளின் நடவடிக்கைகள் செயலிழந்த நிலையில் உள்ளது என்றும் இது ஜனநாயகத்திற்கு ஒருபோதும் நல்லதல்ல என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்கும் முரணானதாகும் என்றும் குறிப்பிட்டார்.

எனவே ஜனாதிபதி தேர்தல் பற்றி பேசுகின்றவர்கள் அதற்கு முன்னர் மாகாண சபை தேர்தலுக்கு தயாராக வேண்டுமென குறிப்பிட்ட ஜனாதிபதி தான் அது பற்றி தேர்தல்கள் ஆணையாளருடன் கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவீத்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து மாகாண மட்டத்தில் குறித்த அமைப்பாளர்களை அழைத்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம் பெற்றுவரும் கலந்துரையாடல் தொடரில் ஊவா மற்றும் மத்திய மாகாண அமைப்பாளர்களுடனான சந்திப்பு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விரைவாக மாகாண சபை தேர்தலை நடத்தி மக்களின் வாக்குரிமையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

புதிய அமைச்சரவையை நியமித்து மூன்று வாரங்களுக்கு மேல் கடந்துள்ள நிலையில் அந்த அமைச்சுக்களின் கீழ்வரும் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் நிறுவனங்களுக்கான தலைவர்கள், பணிப்பாளர் சபை நியமிக்கப்படாதது குறித்து சில தரப்பினர் ஜனாதிபதி அலுவலகத்தை நோக்கி விரல் நீட்டுவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி அது முற்றிலும் தவறான கருத்து எனக் கூறினார்.

இந்த நிலைமைக்கு குறித்த அமைச்சுக்களே வகைகூற வேண்டும் என்பதுடன், குறித்த பரிந்துரைகள் பிரதமரின் அலுவலகத்தினால் ஜனாதிபதி அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படாமையே இந்த தாமதத்திற்கு காரணமாகும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் நிமல் சிறிபால டி சில்வா, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா, ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் மாகாண சபை தேர்தல்களை நடத்துவதன் மூலம் மக்கள்யார் பக்கம் உள்ளார்கள் என்பதை அறிந்து ஜனாதிபதித் தேர்தலுக்கான வியூகத்தை வகுக்கலாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருதுவதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (மு-3)

## பட்ஜெட்டின் போது...

ஈ.பி.ஆர்.எப் கட்சியின் கிளிநொச்சி கிளையினரின் நிர்வாக தெரிவு நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ் அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், வரவிருக்கின்ற வரவு செலவுத்திட்டத்திற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சில நிபந்தனைகளை விதித்து அவற்றினை நிறைவேற்றுவதற்குரிய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

அதன் பின்னரே அரசாங்கத்திற்கான ஆதரவு தொடர்பில் தீர்மானிக்க வேண்டும். முக்கியமாக அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் போனோர் பிரச்சினை மற்றும் காணிப்பிரச்சினைகள் போன்ற விடயங்களுக்கு அரசாங்கத்திற்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

இந்தமுறையும் கூட்டமைப்பு பேரம் பேசும் சக்தியைத் தவற விடுவார்களாயின் எக்காலத்திலும் தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் எதையுமே அடைய முடியாது.

இதனால் எதிர்காலத்தில் தமிழர்கள் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்பதே உண்மையான நிலைப்பாடாகும் என சுரேஸ் பிரேமச்சந்திரன் மேலும் குறிப்பிட்டார். (மு-3)

## 2005 முதல் 2015...

ஜனாதிபதி சந்திரிகா கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி மக்கள் வழங்கிய கொள்கைகளுக்கு துரோகம் இழைக்கக் கூடாது என்றும் அதற்கு தாம் தயாரில்லை என்றும், ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் குறித்த தேர்தலில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் தலைமைத்துவத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் இறுதியாக இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுடன் கூட்டு வைக்கும் ஜனாதிபதி மைத்திரியின் நடவடிக்கை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும்,

அத்துடன் 2005 முதல் 2015 வரையான பத்தாண்டுகளில் நாட்டில் இடம்பெற்ற வன்முறை, ஊழல் முதலிய கொடுமைகளை தான் இன்னமும் மறக்கவில்லை என்றும் அதற்காக மக்கள் அவர்களை தோற்கடித்ததையும் தான் மறக்கவில்லை என்றும் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் சந்திரிகா நினைவுபடுத்தியுள்ளார். (மு-3)

## நல்லாட்சி என்...

ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி பன்னங்கண்டிப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைப் புனரமைப்பு செய்து, மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளோம். இதற்காக எம்முடன் இளைஞர் அமைப்பொன்றும் இணைந்துக்கொண்டுள்ளது.

கிளிநொச்சிக்கு வந்துள்ளோம். இந்தப் பணியை நாம் தொடர்ந்தும் முன்னெடுக்க எதிர்ப்பார்த்துள்ளோம். இந்தப் பகுதி மட்டுமன்றி, ஏனைய பகுதிகளுக்கும் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க எதிர்ப்பார்த்துள்ளோம்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு இதற்கான வேலைகளை மேற்கொள்ள முடியும். ஆனால், அவர் இதனை நிறைவேற்றவில்லை. தற்போது அரசமைப்பு என அறிக்கையொன்றை பாராளுமன்றில் சமர்ப்பித்துள்ளார்கள். இதனை அரசாங்கத்தில் உள்ளவர்களே எதிர்த்துள்ளார்கள்.

எனவே, அரசமைப்பும் பொய்யான ஒரு செயற்பாடாகும். நாட்டில் இன்று ஊடக சுதந்திரம் என்பது இல்லாது போயுள்ளது. ஊழல், இலஞ்சம் என்பன அதிகரித்துள்ளது. இவ்வாறானவர்கள் தான் அரசாங்கத்தில் இருக்கிறார்கள்.

நல்லாட்சியை நிலைநாட்டுவோம் என்று வந்தவர்கள், ஜனநாயகத்தையே இல்லாது செய்துள்ளார்கள். இதுதான் இவர்களின் நல்லாட்சியாகும்.

2009 ஆம் ஆண்டு நான் கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கு வந்துள்ளேன். அன்று பார்த்ததைவிட இன்று அபிவிருத்திகள் அனைத்தும் கடந்த 4 வருடங்களாக நிறுத்தப்பட்டுள்ளன.

வடக்கு மக்கள் மட்டுமன்றி, தெற்கில் உள்ளவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, உடனடியாக பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்றுதான் நாம் வலியுறுத்துகிறோம் என நாமல் ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார். (மு-3)

## படகு கவிழ்ந்து...

அப்பகுதியில் வந்த இலங்கை கடற்படை 7 மீனவர்களை காப்பாற்றி கரைக்கு கொண்டுவந்துள்ளனர். ஆனால் காணாமல் போன மீனவரை தேடியும் அவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்த நிலையில் நேற்று மாலை, காணாமல் போன மீனவரான உச்சிபுளியை பகுதியை சேர்ந்த 55 வயதுடைய மாரிச்சாமி என்பவர் நெடுந்தீவு கடற்பரப்பில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஏனைய மீனவர்களை மீண்டும் தமிழ் நாட்டுக்கு அனுப்புவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (மு-9)

# வீதிகளின் பராமரிப்புக்காக பெற்றோல், டீசலில் வரி

### அமைச்சரவைக்கு திட்டவரைபு சமர்ப்பிப்பு

(கொழும்பு)

நாட்டின் பெருந்தெருக்களின் பராமரிப்புக்கான நிதியம் ஒன்றை ஆரம்பித்து அதற்கான நிதியை வாகனங்களுக்கு நிரப்பப்படும் எரிபொருள்கள் ஊடாகப் பெற்றுக் கொள்ளும் வகையிலான திட்ட வரைவை பெருந்தெருக்கள் அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அமைச்சு அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளது.

வாகனங்களுக்கு நிரப்பப்படும் பெற்றோல் மற்றும் டீசல் ஒரு லீற்றருக்கு 50 சதம் வரி அறவிடுவதற்கு அந்தத் திட்டவரைவில் முன்மொழியப்பட்டுள்ளது.

வீதி முகாமைத்துவ நிதியம் ஒன்றை அமைத்து வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் உள்ளூர் அதிகார சபைகளுக்கு உட்பட்ட வீதிகளை பராமரிப்பதற்கு ஏற்படும் செலவுகளை ஈடுசெய்வதற்கு இந்தத்திட்ட யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குட்பட்ட வீதிகளைப் பராமரிப்பதற்கு ஆண்டு தோறும் 300 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எனினும் வீதி அபிவிருத்திகளுக்கு செலவிடப்படும் நிதியில் இந்த ஒதுக்கீடு அரைவாசியாகும். அதனால் ஆண்டிறுதியில் ஏனைய அமைச்சுக்களிடம் நிதி கோரப்படுகிறது.

எனவே தற்போது தயாரிக்கப்பட்டுள்ள திட்டவரைவுக்கு அமைச்சரவை அனுமதியளித்து செயற்படுத்தப்பட்டால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆண்டுக்கு 50 பில்லியன் ரூபாய் நிதி கிடைக்கும். அந்த நிதி வீதிகளின் பராமரிப்புக்கு பயன்படுத்த முடியும்.

பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சும் பெற்றோலிய வளங்கள் அமைச்சும் முன்னர் வெவ்வேறாக இருந்தன.

அதனால் இந்தத் திட்ட வரைவுக்கு அனுமதியைப் பெறுவதில் தாமதங்கள் இருந்தன.

எனினும் தற்போதைய அமைச்சரவையில் பெருந்தெருக்கள் அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அமைச்சு ஒன்றாக உள்ளன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (மு-3)

# ஐ.நா. ஆணையாளரின் இலங்கை குறித்த அறிக்கை

### மார்ச் 20 ஜெனிவாவில் சமர்ப்பிப்பு

(ஜெனிவா)

இலங்கை தொடர்பான, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை, வரும் மார்ச் 20ஆம் திகதி ஐ.நா மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடத்தப்படவுள்ளது.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் சபையின் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 40ஆவது கூட்டத்தொடர், வரும் பெப்ரவரி 25ஆம் திகதி ஆரம்பமாகி, மார்ச் 22ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

சபையின் நிகழ்ச்சி நிரல் வரைவு கடந்தவாரம் தயாரிக்கப்பட்ட போது, மார்ச் 20ஆம் திகதி இலங்கை தொடர்பான விவாதம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் சபையின் இந்த அமர்வில், இலங்கை தொடர்பான அறிக்கையை, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த அறிக்கையை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பசெலெட், அல்லது பிரதி ஆணையாளர் சபையில் சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை அடுத்தமாதம் பகிரங்கமாக வெளியிடப்படும். அதிகாரபூர்வமாக அந்த அறிக்கை மார்ச் 20ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு, விவாதம் நடத்தப்படும் என்றும், அலுவலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு, ஐ.நா மனித உரிமைகள் சபையில் அளித்த வாக்குறுதிகளை மெதுவாகவே நிறைவேற்றுகின்றது.

இந்த நிலையில் இலங்கை அரசால் கொடுப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான அழுத்தம் வழங்கும் வகையில் புதிய தீர்மானம் ஒன்றை கொண்டு வரும் முயற்சிகளும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (மு-3)

## 20 இந்திய மீன...

களும், நாகை மாவட்டத்தில் இருந்து ஒரு படகில் 6 மீனவர்களும் புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்து ஒரு படகில் 3 மீனவர்களும் இலங்கை கடற்பரப்பில் எல்லை-தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த சமயம் கடற்பரப்பில் ரோந்து பணியில் ஈடுபட்ட கடற்படையினர் கிளிநொச்சி கடற்பரப்புக்கு அண்மையில் வைத்து, இராமேஸ்வரத்தில் இருந்து சென்ற 11 மீனவர்களையும் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து நாகை மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்து சென்ற 9 மீனவர்களையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் அந்தந்த மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதில் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட 11 மீனவர்களும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரையும், ஊர்காவற்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டவர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (மு-9,315)


தன நிதானய
திகதி 2019-01-13
சீட்டிழுப்பு இலக்கம் 101
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 26 37 54 67
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.01.13
சீட்டிழுப்பு இலக்கம் 2003
ஆங்கில எழுத்து F
வெல்லப்பட்ட இலக்கங்கள் 20 29 56 66
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/01/13
சீட்டிழுப்பு இலக்கம் 3832
ஆங்கில எழுத்து P
வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 0 7 4 3 9
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/01/13
சீட்டிழுப்பு இலக்கம் 498
லக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 09 28 41 62 17
தேசிய லொத்தர் சபை

## ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய மொட்டில் களமிறங்க முடிவு...

பால சிறிசேன, அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக, மீண்டும் மகிந்த ராஜபக்ஷவுடன் கைக்கோர்த்தார்.

இதனையடுத்து, மைத்திரிபால சிறிசேன தலைமை தாங்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், மகிந்த ராஜபக்ஷ சார்பான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் கூட்டணி அமைத்து எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிடும் என்று, இரு கட்சிகளாலும் கொள்கையளவில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவுடன், தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் போட்டியிடுவார் என்று கொழும்பு அரசியலில் பேசப்படுகிறது.

எனினும், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்கு எதிரான பொது வேட்பாளர் யார் என்பதில், மகிந்த மற்றும் மைத்திரி தரப்பினருக்கு இடையில், தற்போது கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதோடு, அவற்றினை அவர்கள் வெளிப்படையாகவும் பேசி வருகின்றனர்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனதான் களமிறங்குவார் என்று, அந்தக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நிமல் சிறிபால டி சில்வா கடந்த வெள்ளிக்கிழமையன்று தெரிவித்திருந்தார்.

ஐக்கிய தேசிய முன்னணிக்கு எதிரான பொது வேட்பாளராக, மைத்திரிபால சிறிசேனவை சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்கொண்டு செல்லும். இதன்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான சக்திகளின் ஆதரவும், பொதுஜன பெரமுனவின் ஆதரவும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவும் பெற்றுக்கொள்ளப்படும் என்றும், நிமல் சிறிபால டி சில்வா மேலும் கூறியிருந்தார்.

ஆனால், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதில்லை என்று, பொதுஜன பெரமுனவின் முன்னாள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக தீர்மானித்துள்ளனர் என்று, மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரான கோத்தபாய ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளரும், கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான மிலிந்த ராஜபக்ஷ, தனது டுவிட்டர் பக்கத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை தெரிவித்திருந்தார்.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான தனது விருப்பத்தை, மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர் கோத்தாபய ராஜபக்ஷ வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு வர உள்ளதால், இலங்கைக்கு இந்த ஆண்டு முக்கியமானதாகும் என்றும், மக்கள் தயார் என்றால், எந்தவொரு சவாலை எதிர்கொள்வதற்கும் தான் தயாராகவுள்ளதாகவும், கோத்தபாய ராஜபக்ஷ, நிகழ்வொன்றில் உரையாற்றும்போது தெரிவித்ததாகவும், மிலிந்த ராஜபக்ஷ தனது டுவிட்டர் பக்கத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (மு-3)


O/L உடன் 6 மாத பயிற்சி பெற்று
டுபாய், குவைத், ஓமான், சுவிஸ், நியூசிலாந்து, மலேசியா, அவுஸ்ரேலியா, கனடாவில்
ரூ.70,000 முதல் ரூ.2 இல. க்குமேல்
சம்பளத்துடனான வேலைவாய்ப்புடன்...
TOURISM & Hospitality Management
ஆரம்பம் ஜன. 16
சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம்
ஹொட்டேல் தொழில்துறைப் பயிற்சி
FREE ENGLISH for COMMUNICATION
021 222 00 11, 077 36 16 798, 0777 324 004
No.1 Award Winning Institute of the North
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
Sri Lankan Entrepreneur of the Year 2017
10வது ஆண்டில் கால் பதிக்கும்
10க்கு மேற்பட்ட அணிகள் - 100க் கணக்கான மாணவர்கள்
(C-5098)
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.sikaram.lk Sikaram Academy



விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-5112)
0768226240
V2 TRAVELS
●மானிப்பாய் ●யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை


## அரசியல் நோக்...

விவகாரம் குறித்துக் கலந்துரையாடவுள்ளேன்.

இது பௌத்தத்துக்கு எதிரானது. ஜனநாயக விரோதமானது. இத்தகைய செயற்பாடுகளை ஊக்குவிப்போருடன் தீவிரமான கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளேன்.

இந்தச் செயல்களுக்குப் பின்னால் இருப்பவர்களை, மகாநாயக்கர்களின் ஆசியுடன் கண்டுபிடிக்க முடியும் என்று நிச்சயம் நம்புகிறேன்.

ஒரு தமிழனாக மாத்திரம் இதையிட்டு கவலை கொள்ளவில்லை. ஒரு ஆளுநராக, பௌத்த தத்துவத்தை மதிக்கின்ற ஒருவராகவும், இது சரியானது அல்ல என்று நான் நினைக்கிறேன்.

ஒரு உண்மையான பௌத்தர், எதையும் மீறமாட்டார். எதையும் வைத்திருக்க விரும்ப மாட்டார். எதையும் விரிவுபடுத்த விரும்ப மாட்டார். எந்தச் சங்கலியையும் அறுக்க விரும்பமாட்டார்.

எனவே தமிழ்ப் பகுதிகளில் பௌத்தமயமாக்கல் அரசியல் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டால், அது நிறுத்தப்பட வேண்டும்.

நீண்டகாலம் இராணுவத்தினர் தங்கியுள்ள முகாம்கள் போன்ற சிங்களக் குடியிருப்புகளில், தனிப்பட்ட வழிபாட்டு இடங்களை வைத்திருக்க முடியும். அதனை நாம் நிறுத்த முடியாது. என்றும் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார். (மு-3)

## மதுபோதையில்...

மது அருந்தியுள்ளனர்.

மது அருந்திய பின்னர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் மது போதையின் நிமித்தம் மலசல கூடத்தை தூய்மைப்படுத்த பயன்படுத்தப்படும் பெனாயிலை குடித்துள்ளார்.

இதனை அறிந்த சக பொலிஸார்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்றுக்காலை அனுமதித்த நிலையில், பொலிஸ் உத்தியோகத்தர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி நேற்று மாலை குறித்த பொலிஸார் உயிரிழந்துள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (மு-9.101)

## கொழும்பில் துப்பாக்...

இருவர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களுள் 33 வயதுடைய நபர் ஸ்ரீவன் ராஜேந்திரன் என அடையாளங் காணப்பட்டுள்ளதுடன், மற்றைய நபர் மதி என்ற பெயரால் அழைக்கபடுபவரென்றும் குறித்த இருவருடனும் பயணித்த ஸ்டீவன் ராஜேந்திரனின் உறவினரான பெண் ஒருவர் வழங்கிய தகவல் மூலம் தெரியவந்ததாக வும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

மேலும் கொட்டாஞ்சேனை - செல்லையா தோட்டத்தில் இடம்பெற்று வரும் ஹெரோயின் போதை வர்த்தகம் தொடர் பில் இரு குழுக்களிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடே இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்கு காரணமாக இருக்கலாமென பொலிஸார் சந்தேகிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (மு-3)


குவைத் வேலைவாய்ப்பு
மோட்டார் சைக்கிள் டிலிவரி ஆட்கள்
(இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம் போதுமானது)
மோ. சைக்கிள் மெக்கானிக்
கார் சாரதி
(மத்தியகிழக்கு சாரதி அனுமதிப்பத்திரம்)
உணவு, தங்குமிட வசதி, போக்குவரத்து, மருத்துவ ஏற்பாடுகள் கம்பனியினால் வழங்கப்படும்.
ஆரம்ப கட்டணம் இல்லை
பதிவுக் கட்டணம் ரூ.200
(C-5095)
சம்பளம் ரூ. 71,640/-
077 00 38 215
021 2219 221
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
221-1/1
மின்சார நிலைய வீதி
2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk
email: jaffna@emeraldisle.lk
வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்



சேவை நலன் பாராட்டு வாழ்த்துக்கள்
திரு. செல்லையா ஞானசேகரம்
அவர்கள்
(H.N.D.A, Dip.in Edu, SLTS I)
சேவை விபரம்
15.06.1979 - 15.03.1998 வரை காணிச்சீர்திருத்த அதிகார சபை உத்தியோகத்தர்
16.03.1998 - 06.09.1998 வரை யா/கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை - ஆரம்பக்கல்வி ஆசிரியர்
07.09.1998 - 09.05.2005 வரை யா/கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலயம் - பட்டதாரி ஆசிரியர்
10.05.2005 - 02.07.2006 வரை யா/கனகரத்தினம் மகாவித்தியாலயம் - பட்டதாரி ஆசிரியர்
03.07.2006 - 12.01.2019 வரை யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் - பட்டதாரி ஆசிரியர்

எமது பாடசாலையில்
ஆசிரியராக, பகுதித்
தலைவராக அர்ப்பணிப்பு
மிக்க சேவையாற்றி
ஓய்வு பெற்றுச் செல்லும்
இவர்
வாழ்வில் சகல சௌபாக்கி
யங்களும் பெற்று சீரும்
சிறப்புடன் நீடூழி வாழ
இறைவனைப் பிரார்த்தித்து
இவரது சேவையை
பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
(7132)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்.



சிங்களம் ஆங்கிலம்
Spoken English
Spoken Sinhala
English Sinhala diploma வகுப்புகள்.
உங்களுக்கு வசதியான நேரங்களில்...
அனைத்து வயதினருக்குமானது.
Writing, Listening, Speaking, Reading ....
British College of Higher Studies
No.15, Sirambiyadi lane, Off Stanley road, Jaffna.
021 222 4550/ 076 138 0212
(C-5128)



பதவி வெற்றிடங்கள்
தொழில் தேடுபவரா?
O/L, A/L தகைமை உடையவர்களா?
எமது முன்னணி நிறுவனத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகியவிடங்களுக்கான பதவிகள் உள்ளன.
- வயதெல்லை 18 - 35
- தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு
தொடர்புகளுக்கு : 077 552 8534
(7135)



வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(C-5148)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.